ரிஜிஸ்டர் நெ. 2041.

தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்.

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-வருஷ மார்கழி-மீ 18-உ (1—1—1933) | மலர் 36.


## "கடவுளும் பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதிக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இதுகாலை, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். "கடவுள்" என்னும் வார்த்தை வெறும் சொல் மயக்கேயொழிய வேறில்லை என்பதையும், புராணக்காரர்கள் கடவுளைக் கற்பித்திருக்கும் பொய்யுரைகளையும், தத்துவ நூலாசிரியர்கள் கடவுளைப்பற்றிக் கூறும் கற்பனைகளையும் விஞ்ஞான முகத்தால் ஆராய்ந்து, அவைகள் யாவும் கற்பனைகள் என்பதைத் தெள்ளிதில் விளக்கப்பட்டுளது. "கோழி முதலில் உண்டானதா முட்டை முதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பிள்ளி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

சுமார் 80 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0
தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்

## இந்தியாவின் குறைபாடுகள்.

## The Crux of the Indian Problem

என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.



இஃது மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D. Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் 1. இந்தியாவின் கல்வி, 2. மதம், 3. வகுப்பு போராட்டம், 4. மதபுத்தகங்கள், 5. மதபுத்தகங்களிலுள்ள குற்றங்கள், 6. பகுத்தறிவும் மதமும், 7 மரணத்தின் மர்மம், 8. மதமும் ஒழுக்கமும், 9. சோதிடமும், சகுனமும், முதலிய தலைப்புகொண்ட அத்தியாயங்களும், ஆழ்ந்த கருத்துக் கொண்ட முகவுரை, முடிவுரை ஆகியவைகளும் கொண்ட 160-பக்கம் உள்ள பெரிய புஸ்தகம். இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் எழுதப்பட்டதாகும்.

இதன் விலை அணா ... ... ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0
மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் குணம் தரும். தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—0—0.

கெர்ப்ப எண்ணெய்.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கர்ப்பாசயம், சினைப்பை இவைகளிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும். புட்டி 1க்கு விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எமது சியாட்லாக்

# இனும்!

சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. விபரத்திற்கு எழுதுங்கள்.

ஸ்கலித நிவாரணி.

பலஹீனத்தினலும், உஷ்ணத்தினலும், தூக்கத்திலும், சொப்பனத்திலும், இந்திரியம் தானுக வெளிப்படுவதை நிற்பாட்டி தேகத்திடத்தைத்தரும். புட்டி ஒன்றுக்கு ரூ. 2—0—0.

## மலையப்பசாமி,

வைத்தியசாலை, பழநி. S. I.



**ANANGARANGABATIKA.**

*(Enjoyment Pill)*

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY—Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of failure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
*Chandanpur,*
**(Khulna) E. B. R.**



Ready for Sale! Ready for Sale!!

## The Crux of the Indian Problem
## By Dr. Paranjpye M. A., D. Sc.

———)o(———

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvenation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.

Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print. Well gotup. Neatly bound.

Price per copy ... ... Rs 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

**Kudi Arasu Book Depot, Erode.**



## "SUPERSTITION OF KHADI"

**A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.**

**Price annas. 0-2-0**



## "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.



## 'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. நைனன்.

வருஷ சந்தா—2—8—0
விலாசம்:—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்.



## "குடி-அரசு"

கிடைக்குமிடங்கள்.

தஞ்சாவூர்.
மணியம் பிரதர்ஸ்,
ரயில்வே ஸ்டேஷன் ரோடு.

பாபநாசம். அப்துல்ரசாக் சாயபு,
இரும்புவியாபாரம்.

காஞ்சீபுரம். எம். கே. எல்லப்பன்,
திருப்புக்குடல் வீதி.

கோயமுத்தூர்.
வி. ரங்கராஜலு, நியூஸ் ஏஜண்ட், ராஜவீதி.

சேலம். சித்தய்யா,
தனலட்சுமி விலாஸ் பேங்க்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மதுரையில்
குடி அரசு கிடைக்குமிடம்.
எம். முத்துசாமி
ஜெனரல் நியூஸ் ஏஜன்சி
கீழவெளிவீதி மதுரை.



## ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அறிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது. பிரதி ஒன்றுக்கு விலை அணு. 0—6—0

நாஸ்திகன்
C. K. சுப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சிபுரம்.

# மதத்தைப்பற்றி லெனின் எழுதியது.

## 3-ம் அத்தியாயம்.

## தீவிர பிரகிருதிவாதத்தின் அந்தரங்கம்.

**"Under the Banner of Marxian."**

[S. R. & E. V. R. மொழிபெயர்ப்பு]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஆனால் இவ்விதமான ஆபத்துக்களில் இருந்து புத்திசாலித்தனமாகத் தப்ப வேண்டுமானால் நாம் ஒரு விஷயத்தை உணரவேண்டும். அதாவது பணக்காரத் தன்மையின் ஆதிக்கத்தை எதிர்க்கவும் பணக்காரத் தத்துவக் கொள்கைகளை மறுபடியும் ஸ்தாபிக்க முயலுவதைத் தடுக்கவும் போரிடும் விஞ்ஞான அறிவும் பிரகிருதிவாதமும் கொண்டவர்கள் தங்களுக்கென ஒரு தத்துவஞான அடிப்படையை ஏற்படுத்திக் கொண்டால் ஒழிய சமாளிக்கமுடியாது. இந்தப் போரில் இரங்கிவேலை செய்து வெற்றி பெற முயலும் விஞ்ஞான ஆராய்ச்சியானவர்கள் பிரகிருதிவாதியாய் இருந்தாகவேண்டும்.

மார்க்சை பிரதிநிதியாகக் கொண்ட பிரகிருதிவாதக் கூட்டத்தில் நிதானத்துடன் சேர்ந்திருக்கவேண்டும். அதாவது தத்துவப் பிரகிருதிவாதியாய் (Diatatical Materialists) விளங்கவேண்டும். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு "மார்க்ஸ் கொடியின்கீழ்" என்ற பத்திரிகைக் காரியாலயத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் (Hegal) ஹெகல் எழுதிய தத்துவஞான நூற்களைப் பிரகிருதிவாதியினுடைய நிலையில் இருந்துகொண்டு ஒழுங்காகப் படித்துவரவேண்டும். அதாவது மார்க்ஸ் (Capital) கேபிடல் என்ற புஸ்தகத்தில் எந்த தத்துவ ஞானத்தை அனுபோகத்தில் உபயோகத்தாலின்றையதினம் கிழக்கு தேசங்களில் அதாவது ஜப்பான், சீன, இந்தியா முதலிய பல நூற்றுக்கணக்கான கோடி மக்கள், உலக ஜனத்தொகையிலேயே பெரும்பகுதியான மக்கள் இதுவரையில் சற்றும் சலனமில்லாவல் சரித்திர பூர்வமாக தூங்கிக்கொண்டிருந்து அந்தத் தூக்கத்தின் காரணமாக ஐரோப்பாவில் முன்னணியிலுள்ளபல தேசங்களின் அரசாங்கங்களின் முற்போக்குகள் தடைப்பட்டு அழுகவும், இந்த கீழ் தேசத்தில் புதிய புதிய வகுப்பு மக்கள் உயிர்பெற்று போருக்குக் கிளம்பவும் நாம் காணும் இந்த சந்தர்ப்பத்தில் தினந்தோறும் மார்க்ஸ் உடைய கொளகைகளே சரியென நிதரிசனமாகக் காண்கிறோமோ அந்த தத்துவ ஞானத்தைப்படித்து வரவேண்டும். Hegal ஹெகில் உடைய தத்துவ ஞானத்தை இவ்விதமாகப் படித்தும் கிரகிப்பதும் பிரசாரம் செய்வதும் நிச்சயமாகவே மிகவும் கஷ்டமான காரியம் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் பிசகுகள் ஏற்பட்டுத்தான் தீரும். ஆனால் ஒரு காரியமும் செய்யாமல் சும்மா இருப்பவர்கள்தான் பிசகு செய்யாமல் இருக்க முடியும். ஹிக்கல் உடைய தத்துவ ஞானத்திலுள்ள பிரகிருதிவாதத்தை மார்க்ஸ் எப்படி. எடுத்துக் கையாண்டாரோ அதை அஸ்திவாரமாக வைத்துக் கொண்டு இந்தத் தத்துவத்தின் நாலா பாகங்களை நாலா பக்கங்களில் இருந்தும் நாம் மேல் கட்டடம் கட்ட வேண்டும். இந்தப்பத்திரிகை ஹிக்கலினுடைய முக்கிய நூல்களிலிருந்து சிறு பாகங்களை வெளியிட்டு அவற்றில் அடங்கிக் கிடக்கும் பிரகிருதிவாதத்தின் அர்த்தங்களை விளக்கிக்காட்டுவதோடு ஹிக்கலினுடைய தத்துவத்தை மார்க்ஸ் எப்படி எடுத்துக்கொண்டார்என்பதையும் ஹிக்கலுடைய தத்துவம் பொருளாதார அரசியல் துறைகளில் எப்படி வியாபிக்கின்றது என்பதை அனேக அனுபோக திருஷ்டாந்தங்கள் மூலமாக எடுத்துக்காட்ட வேண்டும். தற்கால சரித்திரத்திலிருந்தும் அதிலும் முக்கியமாக தற்கால ஏகாதிபத்திய யுத்தங்கள் புரட்சிகள் ஆகிய இவைகளில் இருந்தும் இம்மாதிரியான உதாரணங்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன. "மார்க்ஸ் கொடியின் கீழ்" என்ற பத்திரிகையின் ஆசிரியர்களும் மற்றும் காரியஸ்தர்களும "ஹிக்கலினுடையதத்துவ ஞானத்தை ஆதரிக்கும் பிரகிருதிவாதிகள் சபை"யாக விளங்க வேண்டுமென்பது எனது அபிப்பிராயம். தற்காலத்திய விஞ்ஞான வாதிகள் விரும்பவும், நாமும் அவர்கள் விருப்பப்படி அவர்களுக்கு உதவி செய்யவும் கற்றுக்கொண்டோமானால் விஞ்ஞான அறிவில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக முன்னுக்கு வந்திருக்கும் பல தத்துவ வினாக்களுக்கு ஹிக்கலுடைய தத்துவ ஞானத்திற்குப் பிரகிருதிவாதிகள் சொல்லும் உரையில அனேக விடைகள் காணலாம். இந்த வினாக்களை பணக்கார நவீனங்களைக் கண்டு மோகிக்கும் சில அறிவாளிகளை பிற்போக்காளர்கள் கூட்டத்திற்கு மெதுவாகக் கொண்டு போய் சேர்த்து விடுகின்றன.

நாம் இந்த வேலையை மேற்போட்டுக்கொண்டு ஸ்திரமாகச் செய்து முடிக்காவிட்டால் பிரகிருதிவாதமென்பது ஒரு நாளும் தீவிர பிரகிருதிவாதமாக மாறாது. Schedrin ஷீட்ரின் சொன்ன மாதிரி எதிரியை மேல் விழுந்து தாக்காமல் தன் பேரில் எதிரியை தாக்கும்படி விட்டுவிட்டதாகும். நாம் இவ்வேலையைச் செய்யாவிட்டால் விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் தங்கள் தத்துவத்தில் விதி விலக்குகள் ஏற்படுத்துவதில் முன்னையைப்போலவே ஆதரவு அற்றவர்களாகி விடுவார்கள். ஏனென்றால் விஞ்ஞான அறிவு வெகு வேகமாக முற்போக்கடைந்து அதனுடைய எல்லா பாகங்களிலும் பெரும் புரட்சியான மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதால் இதற்கு ஏற்றாப்போல் தத்துவக் கொள்கைகள் ஏற்படுத்திக்கொள்வது அவசியமாகிறது.

---

## 4-ம் அத்தியாயம்.

### மதம் எதற்குப் பிரயோஜனம்?

Stakhovich ஸ்டாகோவிச் என்ற ஓர்யோல் மாகாணப் பிரபுக்களின் தலைவர் ஒருவர் ஒரு பாதிரிகளின் மகாநாட்டில் "ஒவ்வொரு மனிதனுக்கும் சட்டபூர்வமாக மனச்சாட்சி உரிமை ஏற்படுத்தவேண்டும்" என்று பேசினதும், அதனால் ஏற்பட்ட ஓர் பெரும் பரபரப்பும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். கன்சர்வட்டிவ் கட்சிப் பத்திரிகைகள் Maskvskiye மகஸ்கோவிஸ்கயா பத்திரிகையைப் பின்பற்றி Stakhovich எதிராக உக்கிரமான பிரசங்கம் செய்து வருகின்றன. திட்டுவதற்குப் போதிய வார்த்தைகள்கூட அவைகளுக்கு அகப்படவில்லை. ஓர்யோல் மாகாணத்துப் பிரபுக்கள் ஸ்டாகோவிச்சை மறுபடியும் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்காக அவர்கள் அனைவரும் ராஜத்துரோகம் செய்த குற்றம் சாட்டப்படவேண்டிய அவசியம் வரையில் வந்து விட்டன. இந்த மறு தேர்தல் மிகவும் முக்கியமானது. இதன் மூலம் போலீசாருடைய ஏதேச்சாதிகாரத்திற்கும் அக்கிரமத்திற்கும் விரோதமாக ஆர்பாட்டம் செய்யபிரபுக்களுக்குஓரளவுஇடம் கிடைத்தது. Moskoviskye Vyedosti "மாஸ்கோவிஸ் கியா வைடோஸ்டி" என்ற பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது. அதாவது:—

"ஸ்டாகோவிச்சினுடைய பெயர் விளம்பரமாகி எங்கும் பிரஸ்தாபப்பட்டதற்கு காரணம் அவர் "பிரபுக்கள் தலைவர்" என்ற காரணத்தால் அல்ல. மற்றென்னவென்றால் சந்தோஷ வேடிக்கையிலேயே எப்போதும் ஈடுபட்ட ஸ்டாகோவிச் பொழுது போக்குவதற்கு நல்ல சிநேகிதர்—வேடிக்கையாகப் பேசக்கூடியவர் என்ற காரணத்திற்காகத்தான்" (இது 1901 டிசம்பர் 18 தேதி அந்தப் பத்திரிகையில் "ஸ்டாகோவிச்சுக்கு யார் ஜவாப்தாரி" என்ற தலைப்பெயரின் கீழ் இந்த மாதிரி எழுதப்பட்டிருந்தது)

இப்பத்திரிகை சொல்லுவது வாஸ்தவமானால், அதிகாரிகளையே ஆதரித்து வரும் கூட்டத்தாருக்கு கெட்ட காலம் பிறந்து விட்டது என்பது உறுதி. ஏனென்றால் சந்தோஷம் அனுபவிப்பதிலேயே பொழுது போக்கும் நிலச்சுவான்தார்கள் கூட மனச்சாட்சியின் உரிமையைப்பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டார்களானால் பாதிரிகள் போலீசார்கள் ஆகியவர்களின் செயல்கள் எல்லை கடந்து போயிருக்கவேண்டும் அல்லவா!

மேலும் அப்பத்திரிகை கூறுவதாவது:—

"தங்களைப் படித்தவர்களாகச் சொல்லிக் கொள்ளும வீரர்கள் அடங்கிய கூட்டத்தார்களே ஸ்டெஸ்கோவிச் போன்றவர்களைத்தூண்டி விட்டு அவரை கை கொட்டி ஆதரிக்கிறார்கள். இச்

---

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க

# நியாயத்தைத்தெரிவிப்பது விசாரித்தறியும்புத்தியே.

(கைவல்யம்.)

விசாரிப்பது விவேகம். அதைத் தெரிவது புத்தி. இந்த புத்திதான் மனிதனையும் மிருகத்தையும் வேறாகப் பிரிக்குமிடத்தைக் காட்டுவதாகும்; ஆலோசித்து ஆராய்ச்சி பண்ணி உள்ளபடி உண்மையை உணர்ந்து கொள்ளும் சாதனமெதுவோ அதற்குத்தான் புத்தி யென்று பெயர்.

இப்பொழுது ஆலயப்பிரவேசத்தைப்பற்றி சனாதன தருமவிஷயமாகவும், வருணாச்சிரம தரும விஷயமாகவும் சாஸ்திர தர்க்க வாதங்கள் பிரசங்கத்திலும் பத்திரிகைகளிலும் நடந்து வருகின்றன. இப்பொழுது வைதீகர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பெரிய சென்னை வக்கீல்கள், சங்கராச்சாரி மடத்துச் சாஸ்திரிகள் இவர்கள் செய்யும் பிரசங்கத்திலுள்ள வார்த்தைகள் பார்ப்பனர்கள் தவிர மற்ற சமூகங்களுக்கு வருத்தத்தையும், அவமானத்தையும் கொடுக்கக் கூடியவைகளாக விருக்கின்றன. இவ்விஷயங்களைக் குடியரசு பத்திரிகை முன் விபரமாகப் பிரசுரித்திருக்கின்றது. என்றாலும் இப்பொழுது பெரிய வக்கீல்களென்றும் ஜட்ஜிகளென்றும் இந்தியா சட்டசபை மெம்பரென்றும் பெயரெடுத்திருக்கும் பார்ப்பனர்கள் வைதீகர்களென்று பெயர் வைத்துக்கொண்டு செய்யும் பிரசங்கத்தின் தோரணையும் வார்த்தையும் அதன் அர்த்தமும் அறிவாளிகள் ஆலோசித்துப் பார்ப்பதற்கு அழுத்தம்திருத்தமாக எழுதவேண்டியது குடியரசின் கடமையாக இருக்கிறது இதை விசாரித்தறிவது புத்தி.

இரண்டு வாரத்திற்கு முன் சென்னை மைலாப்பூர்வக்கீல் டி. ஆர். ராமச்சந்திர அய்யர், டி. எம். கிருஷ்ணசாமி அய்யர், எம். கே. ஆச்சாரி, சங்கராச்சாரியின் பிரதிநிதியான சாஸ்திரி, பாலக்காட்டு டாக்டர் சங்கர அய்யர் இவர்களெல்லாம் குருவாயூருக்குப் போகும் வழியில் பாலக்காடு நூரணி அக்கிராரத்தில் வைதிகச்சபைக் கூடினார்கள். அதில் டி. ஆர். ராமச்சந்திர அய்யர் வருணாச்சிரம தருமத்தையும், சனாதன தருமத்தையும் பற்றிச்செய்த பிரசங்கத்தில் இப்பொழுது நான்கு வருணத்தில் பிராமணனும் சூத்திரனும் தவிர க்ஷத்திரியனும் வைசியனும் இல்லை. பிராமண ரத்தத்திற்கும் மற்றஜாதி ரத்தத்திற்கும் வித்தியாசமிருக்கிறது என்றும் மடத்துச்சாஸ்திரிகள் வருணாச்சிரம தருமத்தையும் சனாதன தருமத்தையும் நிலை நிறுத்த மடத்துச் சொத்தையெல்லாம் செலவு செய்யப்போகிறோம் என்று சொன்னார்கள்.

அப்படி அவர்கள் சொன்னால் உனக்கென்ன? எனக்கென்ன? என்று விஷயமுணராதவர்கள் கேட்கலாம். விஷயத்தின் உண்மை உணர்ந்தவர்களுக்கு மானமும், மரியாதையும் தோன்றுகின்றன. அது எப்படி? விசாரித்தறியும் புத்தியுடையவர்களே கேளுங்கள்.

வருணாச்சிரமதருமம் சனாதனதருமமே. பிராமணன், சூத்திரன் என்பது என்ன? இவைகளின் அர்த்தமென்ன? எதற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. என் அதையே வற்புறுத்திச் சொல்லுகிறார்கள் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்துகொண்டால் வேதமும் ஸ்மிருதிகளும் சாஸ்திரங்களென்னப்பட்டவைகளும் சாமபேத தானதண்டத்தால் மற்ற சமூகங்களை அடக்கி அடிமை கொண்டுவாழ ஏற்படுத்திக் கொண்ட சட்ட திட்டச் சுவடிகளே யாகுமென்பதைத் தெரிந்துகொள்ளுவீர்கள். வேதஸ்மிருதி சாஸ்திரங்களில் நல்லதொன்றுமில்லையா வென்று கேட்கக்கூடும். நல்லதிருந்தால் அவையனைத்தும் பிராமணனுக்கே உரியது. அவையனைத்தும் மற்றவர்களுக்கு வேதசாஸ்திரங்களால் மறுக்கப் பட்டிருக்கிறன. நஞ்சுகலந்த சோற்றைப் பிரித்துண்ண முடியாதது போல வேத சாஸ்திரங்களில் பார்ப்பானுக்குத் தவிர மற்ற சமூகங்களுக்கு அடிமைத்தனமும் கொடுமையும் நிறைந்து கிடப்பதை அதைப்படிப்பவர்கள் உணர்வார்கள். அதனால் தான் சைவர்களும், வைணவர்களும் வேதஸ்மிருதிகளைக் கண்டித்தார்கள். தனியாகப்பிரிந்தார்கள்; தன்னினர்கள், என்றாலும் சைவத்திற்கும் வைணவத்திற்கும் ஆசாரியராய் வந்த பிராமணர்கள் சைவர்களையும் வைணவர்களையும் அவர்களுக்குத் தெரியாமலே கலக்கச்செய்து அழுத்த வேண்டிய இடத்தில் அழுத்தி, சுருக்குப்போட வேண்டிய இடத்தில் சுருக்குப் போட்டு, கட்டவேண்டிய இடத்தில் கட்டித் தழுவி அதன் தலையிலும் உட்கார்ந்து கொண்டார்கள். இதையெல்லாம் ஆலோசிக்கையில் உடும்பு வேண்டாம் கையைவிட்டால் போதுமென்கிறதைப்போல இவையனைத்தும் ஒழிந்து போகவேண்டு மென்று சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன்என வருணம் நான்கு. பிரமச்சரியம், கிரகச்சிரமம், வானப்பிரகஸ்தம், சந்நியாசம் என ஆசிரமம் நான்கு. இதைத்தான் வருணாச்சிரம தருமமென்கிறது. சனாதனம் என்றால் பழையது. சனாதனதருமமென்றால் பழயதருமம், பழய ஏற்பாடு என்றே அர்த்தம். பிராமணன் என்றால் வேதம் படித்தவன், யாகம் செய்கிறவன், ஞானமடைவதற்கு சதா உழைத்து ஞானமடைகிறவன். க்ஷத்திரியன் என்றால் அரசு செய்கிறவன், வைசியன் யென்றால்வியாபாரி, சூத்திரன் என்றால் மூன்று வருணத்திற்கும் வேலைசெய்கிற அடிமை, இந்த நான்கு வருணத்தில் இப்பொழுது க்ஷத்திரியன், வைசியனில்லை. பிராமணன் சூத்திரன் தானிருக்கிறார்கள் என்று வக்கில் வேலையில் பிரக்யாதிபெற்ற டி. ஆர். ராமச்சந்திர அய்யர், டி. எம். கிருஷ்ணசாமி அய்யர், இந்தியா சட்ட சபை மெம்பராக விருந்த எம். கே. ஆச்சாரி சங்கராச்சாரியுடையஅதிகாரப்பத்திரம் சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இவர்களைத்தான் வைதீகர்கள் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் வேத ஸ்மிருதி சாஸ்திரப்படி வைதீகர்கள் தானா என்பதை ஆலோசித்துப் பார்ப்போம்

வேதசம்மந்தமுடையது வைதீகம் வேதசம்மந்தமுடையவன் வைதீகன். வேதம்படித்தல்படிபித்தல் தானம் ஏற்றல் கொடுத்தல், யாகம் செய்தல் செய்வித்தல், இந்த ஆறு தொழிலும் பிரர்மணனுக்குரியது. இதை பட்டணத்து வக்கீல்கள் கேட்டதுண்டே ஒழிய கண்டதுமில்லை. இவர்கள் அனுபோகத்திலுமில்லை. எப்படியெனில் பிராமணனுக்கு ஜீவன் கெர்ப்பத்திலிருக்கையிலும் பிறந்த பின்னும் சில கர்மாக்களைத் தாம் தந்தையர்கள் செய்து வைக்கவேண்டும், பின்உபனயனம் செய்து வேதத்தைப் படிப்பதற்கு குருவண்டை கொண்டு போய் விடவேண்டும். முதல் ஆசிரமமான பிர்மச்சரியத்தில் வேதத்தைத்தெரிந்து ஒருகண்ணைத்திறந்துகொள்ளவேண்டும் அதற்குப் பின் கிரகாசிரமும் வானப்பிரகச்சிரமும் வேத சம்மந்த ஏற்பாட்டோடு கூடி நடந்து வித்தையின் பிரயோஜனமாக ஞானத்தை கடைசி ஆசிரமத்தில் பிராமணலட்சியத்தை யடைந்து மறு கண்ணையும் திறந்து கொள்ள வேண்டும். முதல்ஆசிரம குருவேதவித்து. கடைசி ஆசிரம குரு பிர்மவித்து. இதை இரண்டு குருவண்டையும் போய் இரண்டுகண்களையும் திறந்து கொள்ளுவதே பிராமணதருமம். உபநயனமென்றால் கண்ணைத்திறந்துகொள்ள குருவின் சமீபம் போவதென்றே அர்த்தம், அதனாலேதான் பிராமணப் பையன்களுக்கு உபநயனமென்னும் சமஸ்காரத்தைச்செய்துகிறார். உபநயனம் முடிந்த உடன் குறைந்தது குருவண்டை 12வருடமாவது வேதம் படிக்கவேண்டும். உபநயனம்யென்றால் எல்லாருக்கும் தெரியாதென்று தமிழர்களிடம் பணம் வாங்கவருகையில் அதைப் பூணூல் கலியாணமென்பார்கள். பத்திருபது வருடத்திற்குமுன் சாதாரணமாக வருவார்கள். இப்பொழுது உத்தியோகம் வியாபாரம் முதலிய எல்லாத்தொழில்களிலும் மேம்பாட்டைந்துவிட்டமையால் வருகிறவர்கள் அதிகப்பேரில்லை. வேத அத்தியனம் செய்து சிஷ்டி சாரமுடையவர்களாக இருப்பவர்கள் வேதவித்துக்கள்,வேதசம்மந்தமுடையவர்கள். இவர்களை வேதவைதீகர்களென்றும், பிர்மநிஷ்டராகத விருப்பவர்களை பிர்மவித்துக்களென்றும், பிராமணர்களென்றும், அவர்கள் பூஜிதைக்குரியவர்களென்றும், மற்றபார்ப்பனர்களையெல்லாம் பிராமண தருமத்தைவிட்ட பிரஷ்டர்களென்றும், இவர்களையே சண்டாளர்களென்றும் வேதஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்சொன்ன வக்கில்களும் டாக்டர்களும் ஆசாரிகளும் வேதவித்துக்களைப்பார்த்ததுமில்லை, அவர்களிடம் படித்ததுமில்லையே, அவர்களை நினைத்ததுகூடவில்லை; உபநயனமாவதற்குமுன் வித்தியாப்பியாசம் ஆங்கில எழுத்து, உபநயனமான உடன் ஆங்கிலேய பள்ளிக்கூடம்; பிரமச்சாரியெல்லாம் ஆங்கிலேய கலாசாலை; குருவெல்லாம் ஆங்கிலேய வித்து, படிக்கும் பாஷையோ மிலேச்சபாஷை; கிரகச்சிரமத்தில் செய்யவேண்டிய அக்கினிகோத்திர முதலிய கர்மானுஷ்டானங்கள் ஆங்கிலேய சுகபோகங்களின் அபிவிருத்தியே சமஸ்காரங்களாகவிருக்கின்றன. விதானுஷ்டானங்கள் செய்யும் வானப்பிரதாசிரமத்திலோ கோதுமைச்சாப்பாடும் கோழிமுட்டையும், கொக்கோவும், கோலாவும், கொடைக்கானல் பங்களாவுமாகவிருக்கின்றன. இவ்வித ஆசிரமங்கள் வேதத்திலில்லை சனாதனதருமத்திலுமில்லை.

பொய்யென்று தெரிந்தும் பொய்யை மெய் செய்வதற்கும்,மெய்யென்றுதெரிந்தும் மெய்யைப் பொய் செய்வதற்கும் யுக்திகண்டுபிடிக்க வாணாளெல்லாம் புத்தியை விசாலப்படுத்தி அறிவுகெட்டவர்களின் அறிவுக்குத் தகுந்தவாறு உண்மையைமறைத்துப் பேசி தன்னைக்காட்டி கேசுக்கு அதிகப்பணம் பெற்று அந்த கேசுக்கு மற்ற வக்கீலைப் போகச்சொல்லி நாள்கணக்காகப் பீஸ் பேசி சம்மந்தமில்லாததைச் சேர்த்து சட்டமும் ஞாயமும் தெரியாத கட்சிக்காரனுக்கு அதில் நியாயமிருப்பதாகச் சொல்லி கோர்ட்டில் அபிடவுட்டென்றும், அந்த சாக்ஷியென்றும் அது செல்லாதென்றும், இந்தக் கோர்ட்டிற்கு அதிகாரமில்லை யென்றும் அரைமணிநேரம் ஒருமணிநேரம் வாதாடி வாய்தாபெறறு நாள் கடத்தி நாளை எண்ணிப் பணம்வாங்கி கூடகூட்டிவரும் வக்கீல், மாப்பிள்ளை வக்கீல், மைத்துனவக்கீல் இவர்களுக்கும்பணம்கொடுக்கச்சொல்லிபங்களாவில் இங்கிலீஷ் சுகபோகங்களை அனுபவித்து தெண்டாயுதபாணி உபாசகர் என்று கட்சிக்காரர் நினைத்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

# ஆபத்து! ஆபத்து!
## ஜமீன்தாரர்களுக்கு
# ஆபத்து.

(பேத்தாபுரம் குமார ஜமீன்தார் எழுதியிருப்பதின் சாரம்)

*இந்த வியாசமானது பெத்தாபுரம் குமாரராஜா ஜமீன்தார் அவர்களால் ஆங்கில பத்திரிக்கைகளுக்கு எழுதிய வியாசமாகும்; அவர் தென்னிந்தியாவில் ஒரு பெரிய ஜமீன்தாரராயிருந்தும் பொது உடமை கொள்கை இந்தியாவில் எப்படி பரவப் போகின்றது என்பதை உணர்ந்து மற்ற ஜமீன்தாரர்களுக்கு அறிவுருத்தி முன் எச்சரிக்கை செய்யும் வேகத்தில் எழுதி இருக்கிறார் இதை மற்ற ஜமீன்தாரர்கள் கவனிக்க வேண்டுகிறோம்.*

இந்தியாவில் வெகு சமீபத்தில் அழியப் போகும் கூட்டம் ஜமீன்தார்கள் கூட்டமேயாகும்.—

ஃ ஃ

வெகு சீக்கிரத்தில் ஜமீன்தார்களுக்கு ஆபத்து வரப்போகின்றது.

ஃ ஃ

இத்தேசத்தில் ஜமீன்தாரர்களை நிலச்சுவான்தார்கள் ஒடுக்கி அடக்கி நசுக்கி விட ஏற்பாடாகிக் கொண்டு வரும் வலிமை பெற்ற பெரும் முயற்சிகளைப் பற்றி அவர்கள் சிறிதும் யோசித்துப் பார்க்காமல் இருக்கிறார்கள்.

ஃ ஃ

இதன் பயனாக ஜமீன்தாரர்களுக்கு ஆபத்தான காலம் கிட்டி விட்டது. அவர்கள் ஒழியப்போவதுயாராலும் தடுக்க முடியாததாகும்.

சரியான காரணமில்லாமல் இந்த மாதிரி ஆபத்து வரக்கூடாது என்பது தான் எனது அவா.

ஃ ஃ

பழய காலம் மலையேறி விட்டது ஜமீன்தாரர்களின் "பெருந்தன்மை" என்பதும், "கடாட்சம்" என்பதும், "கருணை" என்பதும்இனிசெல்லாது.

ஃ ஃ

குடியானவர்களின் பக்தி விசுவாசம் என்பதெல்லாம் இனி நடக்காது இப்போது இந்த வார்த்தைகளுக்கெல்லாம் அர்த்தமும் இல்லை, மதிப்பும் இல்லை.

சக்கரவர்த்தி ஆட்சி ராஜாக்கள் ஆட்சி என்பவைகள் எல்லாம் பழங்கதைகளாகி விட்டது.

குடி அரசு எண்ணங்களே மக்கள் மனதில் ஊறிப்பதிந்து கிடக்கின்றது.

ஃ ஃ

எஜமான், வேலையாள் என்கின்ற வார்த்தைகளைச் சொல்லுகின்றவர்கள் மூடர்களாகக் கருதப் படுகின்றனர்.

சமத்துவம், சுதந்திரம் என்கின்ற சமதர்ம வார்த்தைகளுக்கே உலகில் செல்வாக்கும், மதிப்பும் இருக்கின்றது.

ஃ ஃ

உலகில் பெரிய பெரிய ராஜாங்கங்கள் எல்லாம் தலை கீழாகக் கவிழ்க்கப் பட்டு குடிகளுடைய ஆட்சிக்கு வந்து விட்டது.

இங்கிலாந்து, ஜப்பான் முதலிய இடங்களில் உள்ள ராஜாக்கள் கூட பெயருக்கு ராஜாக்களாய் இருக்கின்றார்களே யொழிய காரியத்தில் அவர்களுக்கு அதிகாரம் செலுத்துவது என்பது கஷ்டமான காரியமேயாகும்.

ஃ ஃ

பிரஞ்சு அரசர்களும், ஆஸ்டிரிய அரசர்களும், ஜர்மனிய கெய்சர்களும், ரஷிய ஜார்களும் அழிந்து ஒழிந்து விடவில்லையா?

ஃ ஃ

அரசியல் என்றால் சுதந்திரமே தவிர அதிகாரம் அல்ல என்பதாக எங்கும் முரசடிபடுகின்றது.

ஃ ஃ

உலகமெங்கும் எந்த பக்கத்திலும் அரசனின் ஆட்சி வேண்டாம் குடிகளின் ஆட்சியே வேண்டும் என்கின்ற ஓசை கிளம்பிவிட்டது.

உலகமே இந்த நிலையில் இருக்கும் போது இந்திய ஜமீனதார்களுக்கு ஆபத்து வரப்போகின்றது என்பதில் சம்சயம் என்ன இருக்கிறது.

ஃ ஃ

ராஜாதி ராஜாக்கள் எல்லாம் ஒழியப் போகின்ற காலம் வந்து விட்ட போது அன்னக்காவடி ஜமீன்தாரர்களின் நிலையைப் பற்றி யோசிக்க வேண்டுமா.

ஃ ஃ

அம்மிக்கல் ஆகாயத்தில் பறக்கும் போது பழய முறத்திற்கு ஆருடம் பார்க்க வேண்டுமா?

ஃ ஃ

உண்மையாய் பேசுவோமேயானால் **ரஷியாவைப் போன்ற பரிசுத்தமான குடி அரசு நாட்டில் ஜமீன்தாரர்களுக்கு இடமே இல்லை.**

ஃ ஃ

ரஷியா இந்தியாவுக்கு அடுத்த தேசம் என்பதை மனதில் இருத்துங்கள்.

இந்தியாவில் பொது உடமைக் கொள்கை ஏற்படுத்துவது என்பது ரஷியாவுக்கு கஷ்டமானகாரியமல்ல.

ஃ ஃ

அது இங்கு பொது உடமை விதை விதைக்கப் பட்டு விட்டால் சுதேச ராஜாக்கள் என்பவர்களும், ஜமீன்தார்கள் என்பவர்களும் தாங்களாகவே பூண்டற்றுப் போக வேண்டியதுதான்.

ஃ ஃ

பொது உடமை நிலை ஏற்படா விட்டாலும் கூட, ஜமீன்தார்களைப் பொருத்த வரை இனி அவர்களது நிலைமை வெகு கஷ்டகாலமாகவே முடியும்.

ஜமீன்தாரர்களை இப்போதே பொது ஜனங்கள் வெறுக்கிறார்கள். அவர்களுடைய குடியானவர்களே அவர்களை வெறுக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஃ ஃ

எதிர்கால ஆட்சியில் சட்டசபை முதலிய ஸ்தாபனங்களில் குடியானவர்களும் சாதாரண பொது ஜனங்களுமே அதிகமாய் இருப்பார்கள்.

ஃ ஃ

சட்டசபைகளுக்குசுயேச்சையேற்பட்டு விட்டபிறகுமெஜாரிட்டியார் நினைக்கிறபடிகாரியங்கள்நடந்துவிடும்.

ஃ ஃ

இப்போது சுயேச்சையுடைய நாடுகள் என்பவற்றில் இருந்து வரும் பாதுகாப்புகள் என்பவைகள் எல்லாம் போலி பாதுகாப்புகளேயாகும். உண்மையான பாதுகாப்புகள் என்பது எல்லா மக்களுக்கும் சகலவகுப்பாருக்கும் சமத்துவமும், திருப்தியும் அளிக்கக் கூடியதாயிருக்கவேண்டும், இப்படிப்பட்ட பாதுகாப்புகள் ஏற்படுவதை ஜமீன்தார்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்றாலும்

ஃ ஃ

இனிவரப்போகும் சட்டசபைப் பிரதிநிதிகள், ஜமீன்தாரர்களை தொழிலாள பொது ஜனங்களுக்கும், விவசாய குடி ஜனங்களுக்கும் பிறவி விரோதி என்றே கருதுவார்கள்.

ஃ ஃ

இந்த எண்ணம் முற்றி கடைசியில் ஜமீன்தார்களுக்கு ஆபத்தையே உண்டுபண்ணும்.

ஃ ஃ

இவற்றை ஒரு கூட்டத்தார் கிளப்பி விட்டு ஜமீன்தாருக்கும், குடியானவர்களுக்கும் நெருக்கடியான நிலைமையை உண்டாக்கி விடப்பார்க்கிறார்கள் என்பது ஒருபுரம் உண்மையானாலும், இந்த நிலைமைக்கு ஜமீன்தார்களும் காரணஸ்தர்களாயிருக்கிறார்கள் என்பதை மறுக்கமுடியாது

ஃ ஃ

இனிவரும் குடியானவர்களுடைய பிரதிநிதிகள் ஜமீன்தாரர்களை அழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பவர்கள்,

ஜமீன்தார்களுக்கு விரோதமான சட்டங்களையும், திட்டங்களையுமே தான்தாம் இனி சட்டசபைகளில் நிறைவேற்றிக்கொள்வார்கள்.

ஃ ஃ

ஜமீன்தார்களின் வருமானத்தின் மீது இனி அபாரமான வரிகள் விதிக்கப்படும்.

ஃ ஃ

இனி இந்த தேசத்தில் இருக்கும் எல்லா சொத்துக்களையும், பொது ஜனங்களுக்கு எல்லோருக்கும் சம உரிமையாக்குவதற்கு முயர்ச்சிக்கவும் கூடும்.

ஃ ஃ

அந்தப்படியே செய்துவிடவும் கூடும். ஏனென்றால் இதர நாடுகளில் பலவற்றில் இந்தப்படிச்செய்தாய்விட்டது.

ஃ ஃ

ஜமீன்தார்களுடைய மாடமாளிகைகள் எல்லாம் பொது ஜனங்களுக்கு பயன்படகூடிய பொது இடமாய்விடும்,

ஃ ஃ

ஜமீன்தார்கள் பதவிகளும், பட்டங்களும், பெருமைகளும், மரியாதைகளும் பரிக்கப்பட்டு கையில் காசில்லாம் நடுத்தெருவில் துரத்தி அடிக்கப்படபோகிறார்கள்.

ஃ ஃ

ஜமீன்தார்கள் பிழைக்கவே கையில் காசில்லாமல் திண்டாடப்போகிறார்கள். இந்த நிலையை கண்ட குடியானவர்கள், ஆம் ஆம். இது வேண்டும் வேண்டும் என்று கைகொட்டி கும்மாளம்போட்டு சிரிக்கப்போகிறார்கள்.

பின்னால் இதை அனுபவிக்கப் போகிற ஜமீன்தார்கள் இதற்காக பிறர்மீது குற்றம் சொல்ல முடியாது ஒரு சமயம் தங்களுக்கு கடுமையான தண்டனையாய் இருக்கிறதே என்றுதான் சொல்லலாம்.

ஃ ஃ

இந்த நிலை ஏற்பட்டால் குடியானவர்களைப் பாராட்டுவதா அல்லது ஜமீன்தார்களிடம் பரிதாபம் காட்டுவதா என்பது யோசிக்க வேண்டிய விஷயமேயாகும்.

ஃ ஃ

எப்படி இருந்தாலும் ஜமீன்தார்களின் நிலைமை ஆபத்துக்குள்ளானதாக ஆகப்போகின்றது என்பதில் யாரும் சந்தேகப்படவேண்டியதில்லை

ஃ ஃ

யாருக்காவது சந்தேகமிருந்தால் பிரஞ்சு புரட்சியையும் அது சமயம் ஜமீன்தார்கள் குடியானவர்களிடம் பட்டபாட்டையும் சரித்திர வாயிலாய் உணர்ந்து பார்க்கட்டும்.

ஃ ஃ

சமீபத்தில் நேற்று நடந்த ரஷிய புரட்சியையும், ரஷிய சக்கிரவர்த்தி உள்பட அவர்கள் குடும்பத்தினர் யாவரும் ஈவு இரக்கமின்றி கொல்லப்பட்டதையும் நினைவுக்கு கொண்டுவந்து பார்க்கட்டும்.

அங்குள்ள பிரபுக்கள் தங்கள் செல்வங்களையெல்லாம் இழந்து விட்டதல்லாமல் உயிர் தப்புவதே கஷ்டமாகி நாட்டைவிட்டு ஓடிவிட்டதையும் நீங்கள் அறிவீர்கள்.

ஃ ஃ

ஓடிப்பிழைக்கக்கூடிய இடங்களிலும் அவர் இருக்கும் தாழ்மையான

நிலைமையைப்பார்த்தால் மனிதன் பரிதாபப்படாமல் இருக்க முடியாது.

°°    °°

நாட்டைவிட்டு ஓடிப்போன ரஷிய பிரபுக்கள் இப்போது பாரிசில் வாடகை மோட்டார் வண்டி ஓட்டி பிழைக்கிறார்கள்.

°°    °°

மற்றும் சில ரஷியப் பிரபுக்கள் தங்கள் குடும்பங்களை எப்படி வேண்டுமானாலும் பிழைத்துக்கொள்ள சம்மதித்துவிட்டார்கள்.

°°    °°

ஸ்பெயின் தேசம் பெரிய எடுத்துக்காட்டாக இருக்கிறது. சென்ற ஒரு வருஷத்தின் போதுதான் அங்கு பிரபுப்பட்டமெல்லாம் ஒழிக்கப்பட்டுவிட்டது.

°°    °°

உள்நாட்டு பணங்களை அன்னிய நாட்டு பாங்கிகளுக்கு மாற்றிக்கொள்ள யாருக்கும் அதிகாரமில்லை.

°°    °°

தங்கள் நிலபலங்களை விற்றுவிட்டு ஓடி விடுவார்கள் என்று கருதப்பட்ட ஜமீன்தார்கள் நிலமெல்லாம் பரிமுதல் செய்யப்பட்டன.

°°    °°

பெரும் பெரும் பிரபுக்களையெல்லாம் அதிகவரி போடுவதன் மூலம் அவர்களது நிலைமை சாதாரண மனிதன் நிலைக்கு கொண்டுவரப்படுகின்றது.

°°    °°

வாரிசு கிரமப்படியோ, அல்லது மற்ற பாத்தியப்படியோ சொத்துக்கள் ஒருவர் கையில் இருந்து மற்றவர் கைக்கு மாறும்பொழுது அதற்கு ஏற்படுத்தப்படும் வரி அச்சொத்துக்களில் பலதை விற்றுக்கொடுக்கவேண்டிய அளவு ஆக வசூலிக்கப்படுகிறது.

°°    °°

இந்தப்படியே பலவிதத்திலும் பிரபுக்கள் நிலை பிரிட்டிஷ் தேசத்திலும் இன்று கீழ் நோக்கிக்கொண்டே வருகின்றது.

°°    °°

இனி எதிர்காலத்தில் ஜமீன்தார்களுக்குமேல் கண்ட விதமாகவும், கஷ்டங்களும் மாறுதல்களும் நேரக் கூடும் என்பது உறுதி.

°°    °°

இதற்கு ஜமீன்தாரர்கள் என்ன செய்ய வேண்டும்?

°°    °°

ஜமீன்தாரர்களை மற்றவர்கள் பிடித்து கீழே வேகமாய்த் தள்ளிவிடுவதற்கு முன்பாக தாங்களாகவே மெள்ள மெள்ள கீழிறங்கி விடுவது புத்திசாலித்தனமாகும்.

°°    °°

குடியானவர்களும், நாமும் சரி சமானமானவர்கள் தான் என்கின்ற உணர்ச்சி ஜமீன்தாரர்களுக்கு வர வேண்டும்.

°°    °°

குடியானவர்களை ஏழனமாகவும், இழிவாகவும் நினைப்பதை அடியோடு விட்டு, மூர்க்கத்தனம் காட்டாமல் அன்பாய் நடந்து கொள்ள வேண்டும் அவர்களுக்கு மரியாதை காட்ட வேண்டும்.

°°    °°

அப்பொழுது கூட குடியானவர்களின் ஆத்திரத்தையும், குரோதத்தையும் அடக்கி விட முடியும் என்று நான் நம்பவில்லை.

°°    °°

இதன் பயனாய் சில யோக்கியமான ஜமீன்தாரர்களும் கூட கஷ்டப்பட நேரிடும்.

°°    °°

ஜமீன்தாரர்கள் மக்கள் விடுதலை இயக்கங்களில் சேர்ந்து உழைக்க வேண்டும் அதற்கு பொருளுதவி புரியவேண்டும் அதற்கு அனுதாபம் காட்ட வேண்டும்.

°°    °°

அதற்கு விரோதமான முயற்சிகளில் சர்க்காருக்கு உதவியாய் இருந்து ஏழை ஜனங்களுக்கு விரோதமாய் இருந்தால் அதன் பயனை அனுபவித்தே தீருவார்கள்.

°°    °°

பிரஞ்சு புரட்சியின் போது அதற்கு எதிரிடையாய் இருந்த ஜமீன்தாரர்கள் அழிந்தே போயினர், என்பதாக எழுதுகிறார்.

# மேல் நாட்டின் முன்னேற்றமும், கீழ் நாட்டின் பின்னேற்றமும்.

## தலைவிதி, மறு பிறப்பு என்பவைகளால் நேரிடும் தீமைகள்.

(மயிலை. சீனி. வேங்கடசாமி)

மேல்நாடுகளின் மேன்மையும், கீழ்நாடுகளின் தாழ்மையும் உலகமறிந்த விஷயந்தான். ஆனால், மேல்நாடுகள் முன்னேற்றமடைவதின் காரணமும், என்ன? இதன் ரகசியந்தான் யாது?

மேல்நட்டின் நாகரீகவளர்ச்சிக்கும், முனேற்றத்திற்கும், கீழ்நாட்டின் பிற்போக்குக்கும் காரணம் அவ்வத்தேசங்களில் உள்ள மக்களின் எண்ணமும், நம்பிக்கையுந் தான், அதாவது, மேல்நாட்டு மக்களுக்கு முன்னேற்றமடையவேண்டும், மேன் மேலும் உயர்நிலையடைய வேண்டும் என்னும் எண்ணம் குடிகொண்டிருக்கிறது. கீழ்நாட்டு மக்களுக்கோ, மனிதவாழ்வில் உயர்நிலையடையவேண்டும் என்னும்எண்ணம் கிடையாது.

இன்னும் வெளிப் படையாகச் சொல்லுவதென்றால், மேல்நாட்டுஜனங்களின் மதக்கொள்கையானது அவர்களை மேன் மேலும் உயர்நிலையடையவும், முன்னேற்றத்திற்கான முயற்சிகளைச் செய்யும் காரணமாக இருக்கிறது; கீழ்நாட்டு ஜனங்களின் மதக்கொள்கைகள், மக்களை மேன் மேலும் உயர்நிலையடையவும் முன்னேற முயற்சிசெய்யவும் விடாமல் அவர்களைச் சோம்பேறிகளாக்கிவிடுகின்றன.

அந்த மதக்கொள்கைதான் என்னவென்றால், அதுதான் மறுபிறப்பு, மறுபிறப்பு என்னும் பூச்சாண்டியாகும். மேல்நாட்டு மதங்களாகிய கிறிஸ்து மதமும், முகமதிய மதமும் மறுபிறப்பு என்பதை சொல்லவே இல்லை புண்ணியம், பாவம் இரண்டு மாத்திரம் உண்டு. புண்ணியம் செய்தவன் மோக்ஷம் போவான், பாவம்செய்தவன் நரகம் அடைவான் என்று மாத்திரம் அந்த மதங்கள் சொல்கின்றன. ஆனால் மனிதன் செத்தபிறகுமறுபடியும் பிறக்கிறான் என்பதை அந்தமதங்கள் அந்தநாட்டு மக்களுக்குச் சொல்லவில்லை. ஆகையால், மேல்நாட்டு ஜனங்களுக்கு இப்போது உள்ள ஓரே பிறப்பில் தான் நம்பிக்கை உண்டு. செத்த பிறகு மறுபடியும் பிறக்கப் போகிறோம் என்கிற நம்பிக்கை அவர்களுக்குக் கிடையாது. இந்த நம்பிக்கையின் பயனாக, அத்தேசத்து ஜனங்கள் இந்த பிறப்பிலேயே, இந்த உலகத்திலேயே மேன்மையும் உயர்வும் அடைய விரும்புகிறார்கள். அதற்காக அவர்கள் முயற்சியுடன் உழைக்கிறார்கள். அதன் பயனாக அவர்கள் மேன்மையும் உயர்வும் அடைகிறார்கள்.

ஆனால், கீழ்நாட்டு மதங்கள் கீழ்நாட்டு ஜனங்களுக்கு என்ன போதிக்கின்றன? புண்ணியபாவங்களைப் போதிக்கிறதோடு, மறு பிறப்பையும், தலை விதியையும் ஜனங்களுக்குப் போதிக்கின்றன. இந்த தலைவிதியும் மறு பிறப்பு நம்பிக்கையும் நமது நாட்டுஜனங்கள் உடம்பில் ஊறி விட்டன. இந்த நம்பிக்கை இன்று நேற்று உண்டானதல்ல. ஆயிரக் கணக்கான வருஷங்களாக இந்த நம்பிக்கை இந்த தேசத்தில் உண்டு. இந்த நாட்டில், கர்ப்பத்தில் இருக்கும் சிசுவும் கூட தலைவிதியையும் மறு பிறப்பையும் அறிந்திருக்கிறது. இந்த தலைவிதி, மறு பிறப்பு என்னும் கொள்கைகள் தான் நமது மக்களை முன்னேற்றமடைய ஒட்டாமலும், உயர்வடைய முயற்சி செய்ய ஒட்டாமலும் அழுத்திக் கொண்டிருக்கிறது

நமது நாட்டில் ஏழையாகவும் தொழிலாளியாகவும், தாழ்த்தப் பட்டவர்களாகவும் உள்ள எல்லா ஜனங்களும் என்ன நினைக்கின்றார்கள்? தாங்கள் முன் ஜென்மத்தில் செய்த பாவத்தினால் இந்த ஜென்மத்தில் இவ்வித ஏழை ஜென்மம் எடுத்திருப்பதாகவும், இந்த ஜென்மத்தில் புண்ணியம் செய்தால் அடுத்த ஜென்மத்தில் சுகம் அடையலாம் என்றும் நினைத்து, தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த சொற்ப பணத்தையும் பார்பானுக்குத் தானம் செய்வதிலும், கோயில் குளங்களுக்குப் போய் புண்ணியம் சம்பாதிப்பதிலும் செலவிட்டு நித்திய தரித்திரராகத் திரிகிறார்கள உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க இடமும் இல்லாத நித்திய தரித்திரர்களாக இருந்தாலும், தலைவிதியிலும் இனி பிறக்கப் போகிற ஜென்மத்திலும் முழு நம்பிக்கை உடையவராயிருக்கிறபடியால், இந்தப்பிறப்பில் கௌரவமாகவும் சௌக்யமாகவும் சுயமரியாதையுடனும் வாழ்வதற்கு முயற்சி செய்யாமல் அடுத்த பிறப்புக்குப் புண்ணியம் தேடிக்கொள்வதில் காலத்தையும் பொருளையும் வீண்விரயம் செய்யும் பேதை ஜனங்கள் எப்பொழுது தான் உருப்படப் போகிறார்கள்? சுயநலக்காரர்களாகிய ஒருசிறு கூட்டத்தார் தங்கள் சொந்த நன்மைக்காக தலைவிதியையும் மறு பிறப்பையும் ஏற்படுத்தி மதக் கொள்கையாகச் செய்து விட்ட தந்திரம் இது என்பதை உணர்ந்தால் இவர்கள் அடுத்த ஜென்மத்துக்காக இந்த ஜென்மத்தைப் பாழாக்குவார்களா என்று கேட்கிறேன்.

இவ்விதம் கீழ்நாட்டு மதங்கள் தலைவிதியும் மறுபிறப்பையும் மக்களுக்குப் போதிக்கிற படியால் கீழ்நாட்டு மக்கள் இந்தப் பிறப்பில் முயற்சி செய்து மேன்மையடை மாட்டாமல் வாழ்நாளை வீணாளாகக் கடத்துகிறார்கள். மேல்நாட்டு மதங்கள், மறு ஜென்மம் இல்லை என்றும் இந்த ஒரு பிறப்பு மட்டுந்தான் உண்டு என்றும் போதிக்கிறபடியால், மேல்நாட்டு ஜனங்கள் இந்த ஜென்மத்திலேயே உயர்வும் மேன்மையும் அடைய முயற்சி செய்து அதன் பயனாக செல்வச் சிறப்புடன் வாழ்கிறார்கள். ஆகையால் மேல்நாடு முன்னேற்ற மடைந்து விளங்குகிறது. கீழ்நாட்டு ஜனங்கள் எப்பொழுதும் அடுத்த ஜென்மத்திலே தான் மேன்மையாக வாழ விரும்புகிறபடியால் கீழ்நாடு ஆதிகாலம் முதல் தாழ்ந்த நிலையிலேயே இருந்து வருகிறது. அடுத்த பிறப்பு மறு ஜென்மம் என்னும் எண்ணம் இருக்கிறவரையில் ஒருபோதும் முன்னேற்ற மடையவும் முடியாது.

நமது தேசம் உயர் நிலையடைந்து முன்னேற வேண்டுமானால், தலைவிதி என்பது மறு ஜென்மம் என்பதுமான மூடநம்பிக்கைகள் ஒழிய வேண்டும். தலைவிதி நம்பிக்கையும் மறு ஜென்ம நம்பிக்கையும் ஒழிய வேண்டுமானால் அவைகளைப் போதிக்கும் இந்துமதம் அழிய வேண்டும்.

இந்திய மக்களை அடிமைப் படுத்தி வைத்திருப்பது மூடநம்பிக்கையும் மூட கொள்கைகளுமே. இந்த மூட நம்பிக்கைகள் ஒழிந்து விடுமானல், நமது தேசம் விடுதலையடையும்; முன்னேற்றமடையும்; சந்தோஷமாக வாழும்.

# ரஷியாவின் தோற்றம்.

## ஒரு சுற்றுப்பிரயாணைக்காரரின் அனுபவம்.

——:0:——

[''விதவைகளின் அனுதாபி'' என்ற பத்திரிகையிலிருந்து தோழர் மருதாசலம் B. A. மொழிபெயர்த்தது]

ஐந்து வருஷத் திட்டம் (Five years plan) என்பதாக ரஷிய தேசத்தினர் வகுத்து நடத்திவரும் காரியங்கள் மிக அவசரமாக நடைபெறுவதுடன் ரஷியர்கள் அனைவருடைய நன் முயற்சிகளின் கவனத்தையும் கவர்ந்து இருக்கின்றது. ஆனால் எங்கும் நடப்பதுபோன்ற சில காலக்கிரம தவறுதல்களும் காணப்படுகின்றன.

### 1. தண்டனை.

அந்த நாட்டிலே கொலை செய்பவர்களுக்குத்தூக்குதண்டனை கிடைப்பதில்லை; ஆனால் ரஷியாவின் கொள்கைகளுக்கு விரோதமான அதாவது அவர்களுடைய தேச (State) திட்டத்திற்கு துரோகமான காரியங்களை, (அவை திருத்த முடியாத வகையில்) யாராவது செய்வார்களாயின் அப்படிப்பட்டவர்கள் கொல்லப்படுவார்கள்.

### 2. வாழ்க்கை.

கலியாணம் என்ற ஒரு சடங்கோ—பதிவு ஒப்பந்தமோ என்பவை இல்லாமலே ஒரு ஆணும், ஒரு பெண்ணும் கூடி வாழ்க்கை நடத்துதல் என்பதை அத்தேசத்தினர் ஒழுக்கத்திற்கு மாறானது என்பதாக அதாவது இங்குள்ளவர்கள் கருதுவதுபோல் கருதுவதில்லை. அன்றியும் அப்படிப்பட்ட கல்யாணமாகாதவர்களுக்கு பிறக்கக்கூடிய குழந்தைகள் சட்ட பூர்வமான மக்களாகவே, அதாவது அத்தேசத்தில் சகல உரிமையும் உள்ள குடி மக்கள் போலவே கருதப்படுகிறார்கள். ஆனால் ஒருவன், தான்பயிரிட்டு விளைவிக்காத பண்டங்களை விவசாயிகளிடம் இருந்து பெற்று தரகு வியாபாரியாய் இருந்து வந்து லாபம் வைத்து விற்பானானால் அவன் தேசப்பிரஷ்டம் செய்யப்படுகிறான்.

### 3. மதம்.

மதம் மிகவும் ஆபாசமானது என்பதை நிரூபிக்கவேண்டிய ஆதாரங்களைத்திரட்டி அநேக நாஸ்திக கண்காட்சிசாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் அவைகளுக்குப் பக்கத்திலேயே ரஷிய கோவில்களில் மிகவும் ஆடம்பரமாக பூஜைகளும் ஆராதனைகளும், இஷ்டப்பட்ட ஆஸ்திகர்கள் (பாதிரிமார்களுடன்) நடத்த அனுமதிக்கிறார்கள்.

### 4. லெனின் உருவம்.

கடற்கரை ஓரத்தில் கப்பற் தொழிலாளிகளிருக்கும் இடங்களில் ''லெனின் பகுதி'' (Lenin Cornes) என்ற ஒவ்வோரிடங்களிலும் லெனின் என்பாருடைய சிறிய சிலைகள் அழகாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான லெனின் சிலைகளும், அவருடைய உருவப்பிரதிகளும் ரஷிய தேசத்தில் இல்லாத இடமே கிடையாது. ஒவ்வொரு சங்க நிலயங்களிலும், ஒவ்வொரு தெருவிலும், ஒவ்வொரு வீட்டிலும் நாங்கள் பார்த்தவீரமிக்க கம்பீரமான லெனினுடைய உருவப் படங்களின் தோற்றத்திற்கும்— அப்புறம் நாங்கள் அவருடைய உயிரற்ற சரீரத்தை ரசாயன மருந்துகளால் கெடாதபடி சேமித்து வைக்கப்பட்டிருந்த சரீரத்தில் கண்ட அன்பு ததும்பும் தோற்றத்திற்கும் உள்ள வித்தியாசமின்மைகளுக்கு அதிக ஆச்சரியத்தை விளைவித்தது.

### 5. ரஷியர்களின் உணர்ச்சி.

ரஷிய தேச மக்களின் ஹிருதயத்தில் பதிந்திருக்கும் அபார உணர்ச்சியானது உத்வேகமாக ஒருமுகப்பட்டிருக்கின்றது. அந்த உத்வேகத்தின் பிரதிபலிப்பே அவர்களது மேலான இலட்சியங்களாக ஓங்கிப் பரிணமிக்கின்றது

### 6. பொதுவுடைமைக்காரர்கள். Communists.

ஒரு நாள் நாங்கள் ஒரு பொதுவுடைமை வாலிபனை (Communist) கண்டோம். அவன் எங்களை அருகழைத்து சுற்றிலும் உட்காரவைத்து தன்னை என்ன கேள்விவேண்டுமானாலும் நாங்கள் கேட்டு ரஷிய நிலைமை தெரிந்து கொள்ளலாமென்றும், அந்நாட்டின் சகல விஷயங்களைப்பற்றியும் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றை அறிவிக்கத்தான் கடமைப் பட்டவனென்றும் கூறினான்.

நாங்கள் முதலில் ரஷியர்களனைவரும் பொதுவுடைமைக்கட்சிக்காரர்களே என்ற எண்ணத்தோடிருந்தோம். ஆனால் இப்பொழுது ரஷியாவானது பொதுவுடைமைக் கட்சியாரால் ஆட்சி புரியப்படுகிறது என்றும், ரஷியாவிலுள்ள 16 கோடி ஜனங்களில் சுமார் 70 லட்சம் பேர்களே அப்பொதுவுடைமைக் கட்சியின் அங்கத்தினர்களாக இருக்கின்றனர் என்றும், இங்கே சகல உபாத்தியாயர்களும், தலைவர்களும், ஜனங்களுக்கு உற்சாகத்தை உண்டுபண்ணி ஊக்கத்தை விளைவிப்பவர்களும்— ஆகிய இவர்களெல்லாம் பொதுவுடைமைக்கட்சிக்காரர்களே என்றும் தெரிந்தோம்.

ஒருவன் தான் பொதுவுடைமைக் கட்சி அங்கத்தினனாக ஆகவேண்டுமென நினைத்தால் அவன் முதலில் மிக்க கஷ்டமான நிர்பந்தனைகளுக்கும் (apprenticeship) திட்டங்களுக்கும் உட்பட்டு உமேதவாரியாக இருக்கவேண்டும். வெறும்படிப்பு மாத்திரம் உடையவர்கள் (அதாவது மூளையினால் வேலை செய்யக்கூடியவர்கள என்பவர்கள் Intelligentia) இரண்டு வருஷ காலம் பரிசோதனைக்கு உட்பட்ட உமேதவாரிகளாகவும், சாதாரண தொழிலாளிகள் (workers) ஆறுமாதமும், அவ்வித உமேதவாரியாகவும் இருந்து தங்களைத் தகுதியுடையவர்களாக்கிக்கொண்டபிறகே அங்கத்தினராக எடுத்துக்கொள்ளப்படும்.

ஒரு பொதுவுடைமைக் காரனுக்கு மற்றவர்களைவிடக் குறைவான சம்பளமே கொடுக்கப்படுகின்றதெனினும் அவன் தனது வார்த்தைகளிலும், செயல்களிலும் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சற்றேறக்குறைய இவர்களது நிலைமையை ஜப்பான் தேசத்திய சாமூரல் (Samural) என்ற வகுப்பினருக்கு ஒப்பிடலாம். ஆனால் இவர்கள் அவர்களைப்போன்று பெரிய முதலாளிகள் அல்ல. முக்கியமான துறைகள் எல்லாவற்றின் தலைமை வகிப்போரும் யாத்திரைக் காரர்களுக்கு உதவிகரமாக நிற்போரும், தொழிற்சாலைகளின் பராமரிப்பை கவனிப்போரும் பிரசங்கம் செய்வோரும், விளையாட்டுப் பந்தயங்களை நடத்துவோருமான முக்கியஸ்தர்கள் இவர்களேயாவார்கள்.

பிறகு லெனின்கிராட் (Leningrad) என்ற நகரத்தில் நாங்கள் இரங்கினவுடன் அங்குள்ள வீடுகள் வெளியிலிருந்து பார்க்கும்போது மிகவும் மோசமானதாகவே புலப்பட்டன. ஆனால் அவைகள் ரஷியர்களுடைய ஒப்பற்ற மனோவலிமையையும் காரிய நிர்வாகத்தையும் செவ்வனே விளக்குவதாக இருக்கின்றன.

அங்குள்ள பழைய வீடுகள் இனனும் மராமத்து செய்யாமலேயே அவர்களுடைய கவனமெல்லாம் பெரிய பெரிய தொழிற்சாலைகளைக் கட்டுவதிலேயே செலுத்தப்பட்டு இருப்பதுடன், அதற்காக அவர்கள் படும்பாட்டினாலும், விடாமுயற்சியாலும் அங்குள்ள தொழிலாளிகளெல்லாம் மிகவும் அலுப்படைந்து கிடக்கின்றனர். இன்னும் அவர்களுக்கு வேண்டிய உடைகளையெல்லாம் தயார் செய்வதற்கு போதிய அவகாசம் கூட இன்னும் ஏற்படுத்திக்கொள்ள இல்லையெனலாம். அங்குள்ள சகல மனிதரும் ஒரே தன்மையிலிருந்த் வேண்டுமென்ற கொள்கையும் மேலோங்கியிருப்பதால் எல்லாரும் ஒரே மாதிரியான உடையையே அணிந்துகொண்டிருக்கின்றனர். அதற்கு விரோதமாக அனாவசிய ஆடம்பரமாக எவனாவது உடுத்தியிருப்பின் அவனை மற்றவர்கள் யாவரும் கேவலமாகவே மதிக்கின்றனர்.

பெண்கள் எல்லோரும் வீட்டிலேயே தயாரித்த வேலைப்பாடுகள் அமையாத சாதாரண உடைகளையே அணிந்துகொள்ளுகிறார்கள். ஆண்கள், கையால் மிக்க வேலைப்பாடுகளுடன் தைக்கப்பட்ட காலர்களையும் தையல்களையும் உடைய ஒருவகை நீண்ட சட்டைகளை அணிந்திருந்தார்கள். குழந்தைகளும். ஆடம்பரம் ஒன்றுமில்லாத சர்வசாதாரண உடைகளையே அணிந்துகொண்டு சந்தோஷமாக விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

பொதுவாக அங்குகிடைக்கும் சாதாரண ஆகாரம் என்பது மோசமானதென்றாலும் நல்ல உயர்ந்த முதல்தரமான ஆகாரமும் கிடைக்கின்றது. ஆனால் அதற்கு பணம் கொடுக்கவேண்டும். ஒரு நாளைக்கு மூன்று வேளை ஆகாரம் கிடைக்கின்றது. காலை 9-மணிக்கு முட்டை, பன்றிமாமிசம், இனிப்புகேக், அல்லது கருப்பு ரொட்டி, காப்பி அல்லது தேயிலை ஆகியவைகொண்ட காலை ஆகாரமும், மாலை 4-மணிக்கு அல்லது 5-மணிக்கு மத்தியான ஆகாரமாவது, 5-30 மணிக்கு சூப்பு மாமிசம் காய்கறியுடன் கூடிய டின்னரும் கடைசியாக இரவு 10-30 மணிக்கு தேயிலையோடு மாமிச பட்சணங்கள் கொண்ட ஆகாரமும் கிடைக்கின்றன.

### Anti-religious Museum. நிரீஸ்வர கண்காட்சி நிலயம்.

இஸாக் எனும் பெரியாருடைய கோவில் முன்றிலே (St. Isaac's Cathedral) நாங்கள் இம்மாதிரியான நிரீஸ்வர (மதமறுப்பு) கண்காட்சி நிலயம் இருக்கக்கண்டோம். ரஷிய தேசப்புரட்சி (Revolution) ஏற்படுவதற்கு முன் இந்த கோவில் மிக்க பிரக்யாதி பெற்றிருந்தது. தங்கத்தகடுகளால் பரவப்பட்ட விலையுயர்ந்த பலநிறக் கற்களால் அமைக்கப்பட்ட தரையும் தூண்களும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளோடு கூடிய மதத்தலைவர்களின் உருவச்சிலைகளும், இன்னும் பேர்போன நூதன சித்திர வேலைகளும் இதன் கண் அமைக்கப்பட்டிருந்தன. அங்கு பக்த கோடிகள் அமர்ந்து ஜபங்கள் செய்வதற்காக அமைக்கப் பட்டிருந்த ஆசனங்களையெல்லாம் நிர்தூளியாக்கி, அவைகளிருந்த இடங்களில், மதம் ஏற்பட்டவைகளைக் காட்டும் சிறந்த படங்களும், மதத்தின் பெயரால் மக்களை ஏமாற்ற ''கடவுளுடைய சித்தத் இதுதா''னெனப் பொது ஜனங்களை நம்பச் செய்வதற்காக, மதப்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க

# The Aims and Ideals of the Self-Respect Party of South India.

1. The attainment of complete independence from the British and other forms of capitalist Goverments.

2. The cancellation of all national debts.

3. Public ownership of Railways, Banks, Shipping and other transport services waters and lands etc.,

4. Public ownership without compensation of all agricultural lands, forests, and estates.

5. Cancellation of all private debts and other obligations incurred by the workers and peasants.

6. Changing of all Native States into one common Indian Federation under the rule of the workers and peasants of India.

7. Improving the life of the workers and peasants of the land by securing for them, more than 7 hours labour, increased wages, State aid for their unemployed, health resorts, free libraries, and other cultural facilities.

8. These shall form the main ideals of the Self-Respect Party.

# Self-Respect League.

## Samadharma Party of South India.

### Proposals.

**Preamble:—**

Whereas, the Self-Respect Party, during the past eight years has very largely succeeded in rousing the attention of the mass people to the enormity of their superstitious habits, customs, and practices of their religion and caste, and of their degraded economic conditions of life.

Whereas, it is becoming increasingly evident that such irrational religious and caste habits and customs and their low economic conditions of life, cannot be done away with, except through state action, and

Whereas, it is further evident that the various political social and religious bodies and institutions are ever more determined to hold the masses in social, religious and economic bondage and degradation, through their political organisation all over the country, and

Whereas, the safeguards adopted by the Round Table Conference for the perpetuation of pernicious religious practices and of inhuman caste distinctions are inimical to and destructive of all rational life of the masses.

**Object;—**

IT IS HEREBY PROPOSED to form from the body of Selfrespectors, a political party called THE SAMA DHARMA PARTY OF S. I., to carry out the following main objects, namely,

1. To obtain by constitutional means and methods, the repeal of all irrational safeguards for the private enjoyment of public utilities, for all harmful religious and caste practices and habits, and thereby free the masses from their degrading religious and caste superstitions and habits and improve their economic life.

II. To obtain the adoption of adult suffrage for election of members to all Government, Legislative and Municipal bodies, Local, Provincial and Central.

III, To obtain security of service and minimum wage, to all workers in public and private utility services, such as factories, workshops, railways, shipping, transport, post and telegraphs etc.,

IV. To get for the landless workers and agricultural labourers working in cultivable lands, estates, and waters, a reasonable share in the produce of such lands, estates and waters.

V. To obtain state sanction for utilising temple, church, mosque and religious funds and incomes, for the education, both literary and vocational, for sanitation and housing of the mass population in the country, and for the maintenance of destitute children and orphans.

VI. To obtain the removal of all caste distinctions among all castes, sects and classes of the Indian community, by removing all caste titles, from all public records and making such retention of caste titles as a disability to hold any kind of public service.

VII. To secure through state action, municipalisation of housing, transport, milk and medical service and establishment of nurseries in Municipalities Taluk and District Boards and Village Unions.

VIII. To set up party candidates to the Legislative Councils, Taluk, District, and Village Boards and Unions and Panchyats, to secure the aforesaid objects of the party

IX. Party Candidates pledged to these various objects of the party will be elected for the various Legislative Councils, Taluk and District Boards, Village Unions etc.

X. These various measures, acts, and reforms shall be obtained through all constitutional means and methods suchas council entry and propaganda by means of lectures, discussions and discourses as well as through the press. Rules and regulations for party funds and organisations etc will be made by a provisional committee of the party called for the purpose.

---

ஈரோடு

—:0:—

லண்டன் மிஷன் சென்றல் பிரைமரி பாடசாலை, மாணவர் கல்வி அபிவிருத்தி சங்க வருஷோற்சவம்:—

இவ்வைபவம் டிசம்பர் மாதம் 23ல் மாலை 6 மணிக்கு மேற்படி பாடசாலையில் Rev. A W. பிரௌவ் துரையவர்கள் தலைமையில் நடைபெற்றது. Mrs. Penfold. Miss. Penfold, Dr. Newell, தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, ஈ. வெ.ரா.நாகம்மாள், முனிசிபல்கௌன்சிலர் தோழர் முத்துக்கருப்பஞ்செட்டியார், மகாஜன ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்; தோழர் மீனாக்ஷிசுந்தர முதலியார் Rev. G ஞானமுத்து இன்னும் பல பிரமுகர்களும் 100க்கு மேலான பெண்மணிகளும், பெற்றோர்களும் விஜயம் செய்திருந்தனர். சங்கீதக் கருவிகளால் இனிமையான பாடல்க[illegible]ப்பட்டு கூட்டம் ஆரம்பி[illegible]து. சிறுவர் சிறுமிகளால் ஆங்கிலத்தில் செய்யுள், சம்பாஷணை, கதை நடித்தல் நடத்தினார்கள். பின் மாணவர்களால் ஒரு நாடகம் நடத்தப்பட்டது. அதில் திறமையாய் நடித்த பட்டம்மாள், குமாரசாமி, ஆர். நாராயணசாமி இம்மூவருக்கும் தோழர் பி. கோவிந்தசாமி ரவுத் அவர்களால் மூன்று வெள்ளி மெடல்கள் பரிசளிக்கப்பட்டது. ஆங்கிலத்திலும் தமிழிலும் நடித்த 27 சிறுவர் சிறுமியர்களுக்கு பரிசளிக்கப்பட்டது. பின் தோழர் மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்கள் பி. ஏ. எல். டி. எலிமெண்டரி பாடசாலைகளில் இவ்விதமான மாணவர் சங்கம் ஏற்பட்டு அதன் மூலமாய்ப் பிள்ளைகள் தைரியமாயும் திறமையாயும் மேடைமீதேறி சபையின் முன்னின்று பேசினதை இன்று தான் முதல் தடவையாக தான் பார்த்ததாகவும் நாடகத்தில் அதிகமான பாடல்கள் அவசியமில்லை யென்றும், பரிசுகளுக்காகவோ, மெடல்களுக்காகவோ பிள்ளைகள் நடிக்காமல் தங்களின் கடமை என்பதாக நடிக்க வேண்டு மென்று பேசினார். பின் தலைவர் முடிவுரை வந்தனோபசாரம் ராஜ வாழ்த்துடன் இவ்வைபவம் இனிது முடிவுற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

# சுயமரியாதை இயக்க லட்சியம், வேலைத்திட்டக் கூட்ட நடவடிக்கை.

## எல்லா ஜில்லாப் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள்.

### பலத்த விவாதம்.

டிசம்பர் மாதம் 28, 29-ந் தேதிகளில் ஈரோடு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் வீட்டில் நடந்த சுயமரியாதை இயக்க வேலைத்திட்டக்கூட்டத்தின் நடவடிக்கைகள்:—

கூட்ட நடவடிக்கைகளுக்கு திருநெல்வேலி, ராமநாதபுரம், மதுரை, திருச்சி, தஞ்சை, சேலம், கோயமுத்தூர், தென்னாற்காடு, வட ஆற்காடு, மலையாளம், புதுக்கோட்டை, செங்கல்பட்டு, சென்னை முதலிய ஜில்லாக்களிலிருந்து ஆண்களும், பெண்களுமாக சுமார் 200 பேர்கள் வந்து கூடினார்கள், முக்கியமான தோழர்கள்,

ஈரோடு ஆர். வெங்கடாசலம், அ. இரத்தினசபாபதி, ஜி. நரசம்மாள், எம். காமாட்சி, ஜி. ரங்கம்மாள், ஆர். அன்னபூரணி ஆர். டி. எல்லநாயகம், பி. எஸ். முஸ்தபா, சி. நடராஜன், எம். பொன்னுசாமி, எ. சண்முகம், சி. பி. அங்கமுத்து, சி. கே. மருதாசலம், கே. கோபால், ஆர். சுப்பிரமணியன், எ. அப்துல் அஜிஸ், பி. என். கிருஷ்ணசாமி, யூ. எம். கிருஷ்ணன், என். சீனிவாசன, டி. டி. நாராயணசாமி, கே. எஸ். ஜேம்ஸ், டி. டி. கோபால், எம். கிருஷ்ணசாமி, எ. கோவிந்தசாமி, பி. இரத்தினசாமி, நாகலிங்கம், என். நல்லையா, அற்புதசாமி, பி. காத்தமுத்து, சி. வெங்கடாசலம், டி. ஆர். ஜெயகோபால் ஆர். ஆறுமுகம். கணேசமூர்த்தி, ராஜகோபால்,

புதுச்சேரி எ. லகாவ்ந், நம்பிக்கைமரி.

சென்னை எஸ். குருசாமி, டி. எஸ். குஞ்சிதம், டி. எஸ். காந்தம், டி.எஸ். சகுந்தலா, வி. பி. எஸ். மணியர், ஏ. பி. கிருஷ்ணன், எம். சிங்காரவேலு. பி. ஏ, பி. எல்.,

துறையூர் சைமன் ராமசாமி.

கொமாரபாளையம் ராமசாமி.

கோமங்கலம்புதூர் ஆர். எஸ். மைல்சாமி.

ஸ்ரீரங்கம் ராமசாமி.

திருக்கண்ணபுரம். செல்லப்பா.

மாயவரம் சக்கரவர்த்தி, சி. நடராஜன், எஸ். ரத்தனம். ஆ. ராமாமிர்தத்தம்மாள், டி. சின்னையா.

பாபநாசம் சாமி சிதம்பரனார்.

சேலம் எ. எம். பாலசாமி, சொ. மு. ராமசாமி, வி. பாலுசாமி, எஸ். நாராயணசாமி, க. சிவசாமி, சி. பொன்னுசாமி, ஏ. சித்தய்யன், பழனிசாமி பண்டிதர், பீ. வைத்தியலிங்க பண்டாரம்.

அனுப்பபாளையம் அ. ப. சுப்பராயன்.

மதுரை ஏ. எஸ். அருணசலம்.

கொம்முடி ஆர். குப்புசாமி.

பரதூர் பி. டி. ஜி. ராஜன்.

கரூர் எம். ரங்கராஜு, இ.எம். கிருஷ்ணன், க. முத்தையன்.

சூலூர் கே. கிருஷ்ணன் பி. டி. சம்பந்தம்.

சாத்தான்குளம் அ. இராகவன்.

தேவகோட்டை லட்சுமிரதன்பாரதி எம். ஏ. பி. எல்.

சீர்காழி சி. வா. பாலகிருஷ்ணன்.

பூவாளூர் அ. பழனியப்பன், அ. பொன்னம்பலம், எம். கூத்தபெருமாள்.

ஆலங்குடி ஏ. ஆர். கணேசன்.

புதுக்கோட்டை மு. கைலாசம், ராமகல்யாணி, கே. முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல்.

நாகப்பட்டணம் கே. முருகேசம், எம். ஏ. கோவிந்தசாமி, ஆர். வி. கோபால், என். பி. காளியப்பன், சுப்ரமணியம், என். சிவஞானம்.

வால்குடி டி. எம். முத்து.

உறையூர் ச. ம. சி. பரமசிவம், சண்முகசுந்திரத்தம்மாள்.

ஜோலார்பேட்டை வி. பார்த்தசாரதி.

கோவை கே. சுப்ரமணியம், வி. ரங்கராஜலு, பி. ரங்கசாமி, ஆர். கிஸன், ஏ. ஆர். சிவானந்தம், வள்ளியம்மாள், டி. ஆர். மஞ்சுளாபாய், ஜானேஜிராவ், எச். எஸ். முனுசாமி, சி. கே. மருதேஸ்வரன்.

முத்துப்பட்டணம் ராமசுப்பையா,

கோட்டையூர் ப. ஜீவானந்தம், சி. மு. சின்னையா.

காரைக்குடி என். எஸ். கணபதி.

பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி,

தங்கவயல் ஜி. அப்பாதுரையார்,

பொன்மலை டி. கிருஷ்ணசாமி.

திருச்செங்கோடு கைலாசம், எஸ். கே. வரதாராஜலு, எஸ். சி. ஆர். சாமி.

காரமடை ஏ. பசுபதியப்பா.

திருச்சி ராமசுப்ரமணியம், எஸ். நீலாவதி, அம்மணி அம்மாள், என். வாசுதேவன்.

முதலியஇன்னும்பலர்வந்து கூடிவிட்டார்கள்.

28உ காலை 9 மணிக்கு ஈ. வெ. ரா. நடுமாடி ஹாலில் கூட்டம் துவக்கப்பட்டவுடன் கூட்டத்திற்கு வர சௌகரியப் படாதவர்களின் கடிதங்களையும், தந்திகளையும் வாசித்துக் காட்டப் பட்டதுடன்மற்றும்பலதோழர்கள் அனுப்பிய திட்டங்களையும் வாசித்து காட்டப் பட்டது. அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:—

தோழர்கள்,

சித்தக்காடு கே. ராமையா, கோவை ஆர். நஞ்சையா, சாக்கோட்டை எஸ். ஆர். சாமி, திருப்பாப்புலியூர் எம். என். முத்துக்குமாரசாமிப்பாவலர், பெருவளப்பூர் சகோதரி கிரிஜாதேவி, மேல்கறகண்டார்கோட்டை எம். வி. துரைசாமி, திருமங்கலம் மணிமாறன், தூத்துக்குடி பி. சாமுவேல், எம். நடராஜன், கே. அருணசலம், பி. பாக்கியம் நாயர் வாசகசாலை, மன்னார்குடி கே. ஆர். ஜி. பால், கே. வி. ரங்கசாமி, பி. எஸ். மணியன், பி. சொங்கண்ணு, சாமிநாதன், கோவிந்தராஜலு; பொன்னையன், சௌந்தராஜலு, ராஜகோபால், அம்பலூர் கரியக்கவுண்டர், அருப்புக்கோட்டை வீர. சு. ப. வீரைய்யா, தூத்துக்குடி கே. கே. ஏ. பெரியசாமி, விருதுநகர் வி, வி. ராமசாமி, கல்லிடைக்குறிச்சி கே. என். தங்கவேலு, தூத்துக்குடி எம். வைகுண்டம், நாகர்கோவில் பி. சிதம்பரம், திருத்துரைப்பூண்டி டி. கே. பதி, காஞ்சிபுரம் நாஸ்திக குப்புசாமி, சென்னை டி. வி. சுப்பிரமணியம், விருதுநகர் செந்திக்குமார், கும்பகோணம் பி. கே. குப்புசாமி, கொன்னூர் மேலையம்பதி டி. ஜி. தியாகராஜ், மதுரை எ. என். வெங்கிடசாமி, ஆகியவர்களாவார்கள்.

பிறகுசென்றவாரகுடிஅரசு பத்திரிகையில் கண்ட சுயமரியாதை இயக்க லக்ஷியத்தையும், அதிலிருந்து ஏற்படவேண்டும் என்று கருதிய சமதர்ம (அரசிய)ல் திட்டத்தையும் பற்றி உள்ள துண்டுப்பிரசுரங்களையும் வழங்கி அவரவர்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்படி தோழர் ஈ.வெ. ராமசாமி கேட்டுக்கொண்டதுடன் தனது மேல் நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தைப்பற்றியும், தோழர் ராமநாதன் பேரால் செய்யப்படும் பிரசாரத்தைப் பற்றியும் சிலவார்த்தைகள் சொல்லிவிட்டு அமர்ந்தார்.

பிறகு தோழர் சிங்காரவேலு அவர்கள் எழுந்து சுயமரியாதை சமதர்ம திட்டத்தை வாசித்துக்காட்டி அதன் அவசியத்தைப்பற்றியும் நீண்ட நேரம் பேசினார்.

பிறகு சாப்பாட்டிற்காக கூட்டம் கலைந்தது. சாப்பாட்டிற்குப் பிறகு மறுபடியும் கூட்டம் கூடினதும் தோழர் சிங்காரவேலு பி ஏ. பி.எல். அவர்கள் உலகத்தில் பல பெயர்கொண்ட அரசியல் கட்சிகளின்கொள்கைகளை விளக்கிக்காட்டினார்.

29—12—32.

மறுநாள் காலை 9-மணிக்கு மறுபடியும் கூட்டம் கூட்டப்பட்டது. அன்று மற்றும் பல நண்பர்கள் பல ஊர்களிலிருந்து வந்து மண்டபம் நிறைய சுமார் 300 பேர்கள் கூடி இருந்தார்கள்.

முதலாவதாக தோழர் ஈ. வெ. ரா எழுந்து சுயமரியாதை இயக்கத்தின் லட்சியம் இன்னது என்பதைத்தெளிவுபடுத்தி அதை குறிகோளாகக்கொண்டு இயக்கத்தை நடத்த வேண்டும் என்று எடுத்துச் சொன்னார். பின்னால் தோழர்கள் எஸ். லட்சுமிரதன்பாரதியார் எம். ஏ. பி. எல்., லட்சியத்தில் சில திருத்தங்கள் பிரேரேபித்தார். தோழர் சாமி சிதம்பரனார் லட்சியமே வேலைத்திட்டமாய் இருக்கவேண்டுமென்று பேசினார், தோழர்கள் எஸ். குருசாமியும், அழகிரிசாமியும், சைமன் ராமசாமியும், சித்தையனும் அரசியல் இன்னும் கொஞ்ச காலம் பொறுத்து ஏற்படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னார்கள், தோழர் பொன்னம்பலம் சரியான கட்டுப்பாடு ஏற்படுத்துவதற்கு முன் திட்டங்களோ, லட்சியமோ, பயனற்றது என்று சொன்னார். தோழர்கள் அ. ராகவன், ப. ஜீவானந்தம் லட்சியமும் அரசியலும் சரியானவைகளே என்றும் அந்தப்படியே தனித்தனி குறிப்பு இருப்பதில் குற்றமில்லை என்றும் எடுத்துச்சொன்னார்கள்.

பிறகு சாப்பாட்டிற்காக கூட்டம் கலைக்கப்பட்டது.

மாலை

சாப்பாட்டிற்கு மேல் கூட்டம் மறுபடியும் 2-30 மணிக்கு கூடினதும் தோழர் ஸ்ரீரங்கம் டி. ராமசாமி நாயுடு என்ற ஒரு 70 வயதுள்ள "வீர வைணவ பாகவதர்" சுயமரியாதை இயக்க பிரசங்கங்களை கேட்டதால் தனது மத அபிப்பிராயங்கள் மாறுபட்டு விட்டதென்றும், தனது மடங்களை சுயமரியாதை இயக்கத்துக்கு எழுதி கொடுத்து விடுவதாக சொல்லி அதற்கு சாசனம் (டிரஸ்ட்-டீட்) எழுதச் சொன்னார். பிறகு தோழர் சிங்காரவேலு அவர்கள் சமதர்ம திட்ட ஆக்ஷேபனைகளுக்கு பதில் சொன்னார். பிறகு சென்னை வி. பி. எஸ். மணியர் அமைப்பைப்பற்றியும், திட்டங்களை ஆமோதித்தும் பேசினார் பிறகு ஈ. வெ. ராமசாமி இவற்றிற்கு பதில் சொல்லும் முறையில் லக்ஷியங்களைப்பற்றியும், கட்டுப்பாடுகளைப்பற்றியும் விரிவாய் பேசினார்.

பிறகு லக்ஷியமும், திட்டமும் சில வார்த்தை திருத்தங்களுடன் ஏகமன

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

# குடி அரசு.

ஈரோடு 1933 ஜனவரி மீ 1-உ

## வேலைத்திட்டக் கூட்ட முடிவு

—0—

சென்ற வாரம் தெரிவிக்கப்பட்டிருந்தபடி சுயமரியாதை இயக்க வேலைத் திட்டக் கூட்டம் ஈரோட்டில் தோழர் ஈ. வெ. ரா. வீட்டில் நடைபெற்ற விபரமும் அதன் முடிவும் மற்றொரு பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அக்கூட்டத்திற்கு எதிர்பார்த்ததற்கு மேலாகவே பல ஊர்களில் இருந்தும் சுமார் இருநூறு தோழர்கள் வரை விஜயம் செய்து இருந்தார்கள். பல தோழர்கள் தாங்கள் வர முடியாத அசௌகரியத்திற்கு வருந்தி தந்தியும் கடிதங்களும் எழுதி இருந்தார்கள். என்றாலும் கூட்டத்தின் முடிவை ஏற்று, தங்களால் கூடிய வரை கலந்துழைப்பதாகத் தெரிவித்துக் கொண்டார்கள்.

கூட்டமானது இரண்டு நாளில் நான்கு தடவை கூடி சுமார் 20 மணி நேரம் நடந்தது. பல விஷயங்களைப் பற்றியும் பலமான வாக்கு வாதங்களும் நடந்தது என்றாலும் முடிவில் ஏகமனதாகவே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முதலாவது சுயமரியாதை இயக்கத்தின் லக்ஷியம் என்பது. அதாவது சென்றவாரக் குடிஅரசில் "சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான கொள்கை" என்ற தலைப்பில் பிரசுரித்த விஷயமாகும். இது பலருக்கு ஒரு பெரிய உணர்ச்சியையும், திடுக்கிடக்கூடிய நிலையையும் உண்டாக்கி விட்டதாகத் தெரிகிறது. அதில் சிலருக்கு அந்த கொள்கையே அதிருப்தியைக் கொடுக்கக் கூடியதாயிருந்ததாகவுங் காணப்பட்டது என்பதோடு மாத்திரமல்லாமல், சிலருக்கு அந்த லக்ஷியத்தை அப்படியே ஒப்புக்கொள்ளுகின்றவர்களுக்கும் கூட அதை வெளியில் சொல்லுவது என்பது அதிக பயத்தைக் கொடுத்திருக்கிறதாயுந் தெரிகிறது. எதனாலென்றால் இதைச் சொன்னால் அரசாங்கத்தார் பிடித்து 10 அல்லது 20 வருஷம் தண்டித்து விடுவார்களோ என்று கருதினதாலேயாகும்.

ஆகவே, எது எப்படி இருந்த போதிலும் சரி, அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அதன் சாதக பாதகங்களையும் அதனால் ஏற்படும் பயன்களையும் நன்றாய்ச் சிந்தித்து ஆராய்ந்து அறிந்த பின்பே அது சரியா தப்பா என்று முடிவு கட்ட வேண்டும் என்பது தான் நமது கடமையாய் இருந்தது. அந்தப்படியே நமது அழைப்புக்கு இணங்கி விஜயம் செய்து இருந்த சுமார் 200 தோழர்களும் நன்றாய் இரண்டு நாளும் விவாதித்து பிறகே ஏகமனதாய் ஒரு முடிவுக்கு வந்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அது போலவே சு. ம. இயக்க வேலைத் திட்டம் என்கின்ற விஷயமும் மேற்கண்டது போன்றவையாய் இல்லாவிட்டாலும் அதுவும் ஓரளவுக்கு பெருத்த விவாதத்தைக் கிளப்பி விட்டது. என்று தான் சொல்ல வேண்டும். எப்படி என்றால் சு. ம. இயக்கம் அரசியலில் தலையிட்டால் இயக்கத்திற்குக் கேடு வந்து விடுமென்றும் பலருக்கு அது அசௌகரியமாய் இருக்குமென்றும் சொல்லப்பட்டது. ஆனபோதிலும் சட்டசபை முதலிய ஸ்தாபனங்களைப்பற்றி முயற்சி செய்ய வேண்டும் என்றும் அதனால் குறைந்த பட்சம் என்று சற்று அதிகமான பிரசாரம் செய்யவாவது இடமேற்படும் என்றும் கருதி ஏகமனதாய்த் தீர்மானிக்கப் பட்டு விட்டது.

### லக்ஷியம்

நிற்க, சுயமரியாதை இயக்க லக்ஷியம் பொது உடைமை இயக்க லக்ஷியமாயிருக்கின்றதென்றும், அதற்கு அரசாங்க அடக்குமுறை கொடுமை ஏற்படுமென்றும், அதனால் இயக்கமே அழிய வேண்டி வருமென்றும் பலர் சொல்லக் கேள்க்கிறோம். பலர் பத்திரிகைகளிலும் பிரசங்கங்களிலும் அந்தப்படி குறிப்பிட்டு வருவதையும் பார்க்கின்றோம். இதற்கு நாம் முதலாவதாக கூறும் பதிலென்னவென்றால் அவர்கள் கூறுகின்றபடியே பொது உடைமைக் கொள்கையையே சு. ம. கொள்கை என்று ஒத்துக் கொண்டே பார்ப்போமானாலும் அதனால் ஏற்படும் நஷ்டமென்ன? கஷ்டமென்ன? என்றுதான் கேட்கின்றோம். நாம் என்றைய தினம் சுயமரியாதை இயக்கம் என்று ஆரம்பித்தோமோ அன்று முதலே தான் இவ்வியக்கத்தைப்பற்றி பலரால் இது பொதுவுடைமை இயக்கமென்று சொல்லப்பட்டு வந்திருக்கின்றது என்பதோடு சு. ம. இயக்கத்தின் முடிவான லட்சியங்களை எடுத்துச் சொல்லும்போதெல்லாம் நாமும் மேல் கண்ட தத்துவத்தையே தான் சொல்லி வந்திருக்கிறோம். ஆதலால் நாம் புதிதாக எதையும் கொண்டு வந்து புகுத்தி விடவில்லை.

நிற்க மனித சமூகத்துக்கு ஏதாவது ஒரு உண்மையான தொண்டு செய்யவேண்டுமென்று ஒருவன் கருதினால் அவன் நாட்டினத்தின் பெருமையையும், கோவில்களிலுள்ள கடவுள்களின் பெருமையையும், பகவத்கீதை, புராணங்கள் ஆகியவற்றின் பெருமையையும் உலகிற்கு எடுத்து ஒப்புக்கொண்டிருந்தால் போதுமா? என்றும் சகல கொடுமைகளுக்கும், குறைபாடுகளுக்கும் அன்னிய நாட்டான் மீது குற்றம் சொல்லி பாமரமக்களை அவன் பக்கம் திருப்பி ஏவிவிட்டுக்கொண்டு இருந்தால் போதுமா என்றும் கேட்கின்றோம்.

நமது நாட்டுக்கு நன்மை செய்ய முற்பட்ட காங்கிரசை 46 வருஷமாய் பார்த்தாய் விட்டது. அதைத் தலைமை வகித்து நடத்த தேசாபிமானிகள், லோகமானியர்கள், தேச பந்துக்கள், மகாத்மாக்கள் வரை முன்வந்த எல்லாப் பெரியார்களின் யோக்கியதைகளையும் பார்த்தாய்விட்டது. அது மாத்திரமல்ல. அவற்றால் விளைந்த பயன்களையும் பார்த்தாய்விட்டது. இனி விளையப்போகும் பயன்களும் நன்றாய் விளங்கிவிட்டன. ஆகவே இனியும் அறிவுள்ள மனிதன் — மனித சமூகத்தின் ஜீவகாருண்யத்தில் உண்மையான பற்றுக்கொண்ட மனிதன் அவற்றையே தான் இன்னமும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கவேண்டுமா? என்று கேட்கின்றோம்.

அன்றியும் நம்மை ஆட்சிபுரியும் அரசாங்கம் என்பதின் போக்கையும், அது இந்த 160 வருஷ காலமாய் நமக்கு செய்து வந்த பயன் என்ன என்பதையும் கண்டுவிட்டோம். அது இனி என்ன செய்யப்போகின்றது என்பதையும் தெரிந்துவிட்டோம். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமானால் நமது அரசாங்கம் ஒரு கசாப்புக்கடைக்காரன் போலவும், நமது காங்கிரஸ் அந்தக் கசாப்புக்கடைக்காரனிடம் வியாபாரம் செய்து விலை பேசி மாமிசம் வாங்கும் வாடிக்கைக்காரன் போலவும், நாமாகிய பொது மக்கள் கசாப்புக்கடைக்காரனது ஆடுகள் போன்றுமே இருந்து வந்திருக்கின்றோம். ஆடுகளாகிய நம்மை வளர்க்கும் விஷயத்தில் கசாப்புக்கடைக்காரனுக்கு இருக்கும் கவலையும் தாராள நோக்கமும் எல்லாம் நம்மை வெட்டி விற்பனை செய்வதில் அதிகலாபம் கிடைக்கும்படியான ஆசை முயற்சியேயொழிய வேறில்லை.

இனியும் அரசாங்க சீர்திருத்த திட்டங்களையும் காங்கிரஸ் தலைவர்களுடைய தேசிய வேலைமுறைகளையும் நம்பிக்கொண்டும் அவற்றிற்காக உழைத்துக்கொண்டுமே இருப்போமானால் கசாப்புக்கடைக்காரனை நம்பிய ஆடுகளின் கதியே ஆவோம்.

இதற்கு ஒரு சிறு உதாரணம் எடுத்துக்காட்டுகிறோம். அதென்னவென்றால், சமீப வட்டமேஜை மகாநாட்டின் முடிவை எடுத்துக்கொள்ளுங்கள். வட்டமேஜை மகாநாட்டின் அடிப்படையான கொள்கையானது அதாவது இந்திய அரசியல் எப்படி அமைக்கப்படவேண்டும் என்ற விஷயமானது காங்கிரசினுடையவும் காந்தியாருடையவும், பூரண சம்மதத்தைப் பெற்றது என்பதை நன்றாய் ஞாபகத்தில் இருத்துங்கள்.

எப்படியென்றால்,

உப்பு சத்தியாக்கிரகத்தில் சிறைசென்ற தேசியவீரர்கள் விடுதலைபெறுவதற்காக தோழர் இர்வின்பிரபுவிடம் தோழர் காந்தி செய்து கொண்ட ராஜிஒப்பந்தத்தில் வட்டமேஜை மகாநாட்டின் அடிப்படையான பெடரல்கவர்ன்மெண்ட் சிஸ்டம், அதாவது சமஷ்டி அரசாங்கம் என்னும், மகாராஜாக்களும், ஜமீன்தார்களும், முதலாளிகளும் சேர்ந்து ஆதிக்கம் செலுத்தும் ஆட்சிக்கொள்கையை ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்து விட்டுத்தான் விடுதலை செய்யப்பெற்றார்கள் என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

ஏறக்குறைய சென்ற 30 வருஷ காலமாய் அரசியல் துரையில் ஏற்பட்டுவந்த சீர்திருத்தமென்பதெல்லாம் 'ஜனநாயக ஆட்சி' 'குடிகளுடைய ஆட்சி' 'சுயராஜ்யம்' என்னும் பேரால் பாமரமக்களை ஆயுதமாக வைத்துக் கிளர்ச்சி செய்யப்படுவதும், அதன் பயனை ராஜாக்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் முதலாளிகளுக்கும் ஆதிக்கங்கள் ஏற்படுத்திக்கொள்ளுவதுமாகவே இருந்து வந்திருக்கின்றது. ஆனால் இந்தத்தடவை செய்யப்பட்ட கிளர்ச்சியின் பயனைப் ராஜாக்கள், ஜமீன்தார்கள், முதலாளிகள் என்பவர்கள் மாத்திரமல்லாமல் மகாராஜாக்கள் என்பவர்

களுக்கும், இந்திய ஆட்சி ஆதிக்கம் கொடுக்கப்பட்டு அதை நிலைநிறுத்துவதற்காக எல்லாமதங்களுக்கும்? பாதுகாப்பு அளித்துக் கையொப்பமும் போட்டாய்விட்டது. இந்தப்படியான அரசியல் சீர்திருத்தமே 1933 லோ 34 லோ அமுலுக்கு வந்துவிடப்போகின்றது. இதை யாராவதும் மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம். இதற்காக அடிபட்டவர்களுக்கும், உதைபட்டவர்களுக்கும், சிறை சென்றவர்களுக்கும், தேசாபிமானி, தேசிய வீரர், தேசபக்தர் என்ற பட்டமும், தலைமை வகித்து நடத்தியவர்களுக்கு மகாத்மா, கவர்னர், மந்திரி முதலிய பட்டமும், பதவியும் அல்லாமல் வேறு என்ன நடக்கக்கூடும் என்பதை யோசித்துப்பாருங்கள்.

இதுசமயம் உலகிலுள்ள மற்ற தேச அரசியல் சீர்திருத்தக் கிளர்ச்சிகளானது அரசர்களை ஒழிப்பதற்கும் அரசாட்சிக்கு பாமர மக்கள் மீது இருக்கும் ஆதிக்கத்தைக் குறைப்பதற்குமாக கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன. நமது நாட்டிலோ அரசர்களுக்கும், மகாராஜாக்களுக்கும் அவர்களது ஆதிக்க அரசாட்சிக்கும் படிப்படியாய் அதிகபலம் ஏற்படுத்தவே கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன.

சென்ற பல வருஷக்கிளர்ச்சியை நினைத்துப்பாருங்கள். நமது நாட்டின் ஆக்ஷிக்கு சென்ற சீர்திருத்தங்களால் ஸ்டேட் கவுன்சில் ராஜாங்க சபை என்று ஒன்று புதிதாக உண்டாக்கப்பட்டது. அதன் கருத்து என்ன? முதலாளிமாரையும், ஜமீன்தாரரையும் கொண்ட ஒரு தனிச்சபை ஆக்ஷிக்கு பொருப்பாய் தலைமையாய் இருக்கவேண்டும் என்று கருதி செய்யப்பட்டு வந்ததல்லவா?

இது இந்திய அரசியல் நிலைமை சீர்திருத்தம் என்பதற்கு முன் இருந்த நிலைமையை விட அதிக மோசமான நிலைமைக்குக் கொண்டு வந்ததா அல்லது முற்போக்கான நிலைமைக்கு கொண்டு வந்ததா என்று பாருங்கள். இதற்கு தேசியமும், காங்கிரசும் காரணமாயிருந்ததா இல்லையா என்பதையும் யோசித்துப்பாருங்கள்.

அதுபோலவே இப்போது வட்டமேஜையால் வரப்போகும் அரசியல் சீர்திருத்தம் முதலாளி ஜமீன்தார் மாத்திரமல்லாமல் மகாராஜாக்களும் கலந்த சபையின் ஆக்ஷிக்கு ஆளாக இருக்கவேண்டும் என்கின்ற நிலைமைக்கு வந்து விட்டதா இல்லையா என்பதை நன்றாய் யோசித்துப்பாருங்கள்.

இதைப்பற்றி ஆரம்பகாலத்திலேயே தோழர்கள் மகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் ரங்கசாமி அய்யங்கார் சிவசாமி அய்யர்கள். சி. பி ராமசாமி அய்யர்கள் வியாக்கியானங்கள் செய்து புகழ்மாலை பாடும்போதே நாம் எடுத்துச்சொன்னோம்.

இந்தியா முழுவதிலுமே நம்மைத்தவிர வேறு யாருமே இந்த மகாராஜாக்கள் கூட்டுறவு கொண்ட அரசியல் திட்டத்திற்கு ஆட்சேபணை சொல்ல முன்வரவே இல்லை. இந்த நிலைமையில்தான் தோழர்காந்தியும், காங்கிரசும், ராஜி பேசிக் கையொப்பமிட்டாய் விட்டது. இனி இதை மாற்ற வேறு என்ன வழி இருக்கின்றது என்று யோசித்துப்பாருங்கள். ஆகையால் எப்படியாவது நாம் இந்த மகாராஜாக்கள், ஜமீன்தாரர்கள் முதலாளிமார்கள் ஆதிக்கம் கொண்ட ஆட்சியை அழிக்கவேண்டியவர்களாய் இருக்கின்றோம். அப்படிப்பட்ட ஆட்சி பிரிட்டிஷாரால் நடத்தப்படுவதானாலும் சரி, இந்தியரால் நடத்தப்படுவதானாலும்சரி, மற்ற எவரால் நடத்தப்படுவதானாலும் சரி நமக்கு அதைப்பற்றி கவலை இல்லை. அடியோடு ஒழிக்கவேண்டியதுதான் கடமையாகும்.

உதாரணம் காட்டவேண்டுமானால் 'பீரங்கியால் சுடப்படவேண்டும்' என்ற முடிவை ஒப்புக்கொண்ட பிறகு அந்த 'பீரங்கியை யார் சுடுவது' என்பதில் சண்டை போட்டுக்கொண்டிருப்பதில் பயன் உண்டா என்று கேட்கின்றோம்.

நமது தேசியம் இப்போது "யார் சுடுவது" என்பதில்தான் சண்டைபோடுகின்றது. ஆனால் நமது சுயமரியாதை இயக்கமோ பீரங்கியை உடைத்துச்சின்னபின்னமாக்குங்கள்; இந்த வேலைக்கு தேசியம் வேண்டாம்; செய்யவருகின்றவர்களை எல்லாம் சேர்த்துக்கொள்ளுங்கள்; என்று தான் சொல்லுகின்றது. இது சரியா தப்பா என்று யோசித்துப்பாருங்கள்.

வட்டமேஜை மகாநாடானது என்றைய தினம் காங்கிரசினிடமும், காந்தியினிடமும் பிடரல் திட்டத்திற்குக் கையெழுத்து வாங்கிற்றோ அன்றே முடிவு பெற்றுவிட்டது. இனி அதைபற்றி எப்படி இருந்தாலும் அதனின் முக்கிய பயன் ஒன்றும் மாறுதலடைந்து விடாது.

இந்த நிலையில் இன்று இந்தியர் மாத்திரம் இருப்பதாகக் கருதி விடாதீர்கள். உலகத்தில் உள்ள "தேசியக்கிளர்ச்சி" கள் என்பவைகள் எல்லாம் ஆங்காங்குள்ள பாமர மக்களை ஏமாற்றி, கூலிகளை அமர்த்தி இந்தப்படியே தான் வேலை செய்து, சரீரத்தினால் பாடுபட்டு வாழும் மக்களை வதைத்து வாழ்ந்து வருகின்றன. இதனால் தான் நமது சுயமரியாதை இயக்க லக்ஷியம் உலக லக்ஷியமாய் உள்ளதை ஏற்றுக்கொண்டு இருக்கின்றது. இந்தலக்ஷியத்தால் ஒன்றும் ஆபத்து வந்துவிடப்போவதில்லை. அப்படி ஏதாவது ஒரு ஆபத்து வருவதாய் இருந்தாலும் அந்த ஆபத்தானது மக்கள் சமூகத்தினிடம் உண்மையான கவலை உள்ளவனுக்கு மேல் கண்ட ஆட்சியின் கீழ் வாழ்ந்து வருவதை விட கஷ்டமானதாக இருக்காது. ஒருசமயம் யாருக்குக் கஷ்டமானதாக இருக்கும் என்று யோசிப்போமானால் சோம்பேறிகளுக்கும் ஊரார் உழைப்பில் வாழ்கின்றவர்களுக்கும், முதலாளிகளுக்கும், ஜமீன்தாரர்களுக்கும், ராஜாக்களுக்கும் மகாராஜாக்களுக்கும் கஷ்டமாய் இருக்கலாம்.

அதனால் நமக்கு என்ன? என்றையதினம் நாம் அந்த சமூகங்கள் பெரும்பான்மையான மனித சமூகத்தின் இன்பவாழ்வுக்கும் சுதந்திர வாழ்வுக்கும் இடையூறாய் இருக்கின்றது என்று கருதி விட்டோமோ அன்றே அவற்றின் நாசகாலத்தை எதிர்பார்க்க வேண்டியவர்களாகவும் அதற்கு நம்மால் ஆன எல்லா காரியத்தையும் செய்து தீரவேண்டியவர்களாகவும் ஆகிவிட்டோம். ஆதலால் அதைப்பற்றி கவலை இல்லை.

மற்றபடி வேலைத்திட்டத்தைப் பற்றி மற்றொரு சமயம் எழுதுவோம்.

## வேண்டுகோள்.

நமது மாகாணத்தில் ஆங்காங்குள்ள சுயமரியாதை சங்கத்தார்களும், மற்றும் அதன் லக்ஷியத்தையே லக்ஷியமாய்க் கொண்டு நடைபெற்று வரும் சங்கத்தார்களும் தங்கள் தங்கள் சங்கத்தின் ஊர் பேர், நிர்வாகஸ்தர்கள் பெயர், அங்கத்தினர்கள் எண்ணிக்கை முதலியவைகளைக்குறித்த விபரம் ஒன்று உடனே தெரிவிக்க வேண்டுகிறோம். ஏனெனில் துண்டு பிரசுரங்களையும், சிறு புத்தக வெளியீடுகளையும் அப்போதைக்கப்போது அனுப்பிவரவும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவும், சங்கங்களைக் குறித்து ஒரு சிறு புத்தகம் வெளியிடவும் வேண்டியிருப்பதால் அதன் விபரங்களை உடனே அனுப்பக்கோருகின்றோம். உடனே சீக்கிரத்தில் புதியதாய் ஏற்படுத்தக் கூடியதையும் ஏற்படுத்தி விபரம் தெரிவிக்க விரும்புகின்றோம்.

## பிஷப்புக்கு எச்சரிக்கை.

திருச்சியைச் சேர்ந்த தோழர் எஸ். அந்தோணி சாமி என்பவர் திருச்சி பிஷப்புக்கு ஒரு எச்சரிக்கைக்கடிதம் விடுத்திருக்கிறார் அதில் அவர் குறிப்பிடுவதாவது:—

"புது வருஷம் உதயமாகையில், கிறிஸ்துமக்களில் ஒரு பகுதியினரை மாதா கோவிலுக்குள் வரவொட்டாமல் தடுக்கும் இரும்புச் சங்கிலிகள் அறுக்கப்படாவிட்டால் அவை ஒழியும் வரை தங்கள் வீட்டிற்கு முன்னால் நானும் எனது நண்பர்கள் சிலரும் பட்டினி கிடந்து சத்தியாக்கிரகம் செய்வோம்.

## சோம்பலுக்கு தண்டனை.

ருஷியாவில் சோம்பேறிகளாகத் தெருவில் அலைகின்ற தடியர்களை கைது செய்து விட்டால், திருட்டுப் பயம் அடங்குமென்று கண்டு பிடிக்கப்பட்டு நகரங்களில் வசிப்பவர்கள் ஒவ்வொருவரையும் ஆராயத் தொடங்கியிருக்கின்றனர்.

## "ஹரிஜனங்கள்" ஹிந்துக்களல்ல.

திவான்பகதூர் டி. ஆர். ராமச்சந்திர அய்யர் ஒரு மகாநாட்டில் பேசும்போது, "ஹரிஜனங்கள் இந்துக்களல்ல" என்று குறிப்பிட்டார்!

## மாமாங்கத்தால் பலன் என்ன?

ரயில்காரனுக்கு-கொள்ளை லாபம்.
"விபசாரி"களுக்கு-விருந்து.
காமுகர்களுக்கு-கொண்டாட்டம்.
ஏழைகள்பாடு-திண்டாட்டம்.
பணக்காரக்கூட்டம்-தாண்டவமாடும்.
பார்ப்பான் சங்கதி-பகரவும் வேண்டுமோ!

## குருட்டு நம்பிக்கைக்கு ஆதாரம் கும்பகோண மகாமகம்.

### இந்திய ஊழியர் சங்கம், கிராமச் சீரமைப்புப் பிரிவு, மாயனூர்.

இந்திய ஊழியர் சங்கம், நமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கு பல துறைகளிலும் வேலை செய்ய, இருபத்தேழு வருஷங்களிற்குமுன்பு காலஞ் சென்ற திரு. ஜி கே. கோகலேஅவர்களால் ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவின் பல பாகங்களிலும் தாழ்த்தப் பட்டவர்கள், மலைச்சாரிலுள்ள பழய ஜாதியர், இவர்கள் நிலையை உயர்த்தவும், கூட்டுறவு சங்கங்கள், கிராமப் பஞ்சாயத்துகள், கிராம சீரமைப்பு அமைப்புகள், இவைகளைக் கொண்டும், மற்ற வழிகளிலும், கிராம வாழ்க்கையை மேம்படுத்த இச்சங்கத்தின் சிறு தொகையினராகிய ஊழியர்கள் பாடுபட்டு வருகின்றார்கள்.

1928-ம் ஆண்டு தொடங்கி, சங்கத்தின் அங்கத்தினர் ஒருவராகிய திரு. கே. ஜி. சிவஸ்வாமி, கூட்டுறவுச் சங்கங்களைப் போற்றி அவைகளின் மூலம், சிக்கனம் கூட்டாகச் சாமான்களை வாங்குதல், விளை பொருள்களை விற்றல் இவைகளைப் பயிற்றி வருகின்றார். முன்னேற்றமில்லாத எல்லையில் பல பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி யிருக்கின்றார். அப்பஞ்சாயத்துகள் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியும், கிணறுகளை வெட்டியும். சில பாதைகளைப் போட்டும் வேலை செய்திருக்கின்றன. அவர் தாழ்த்தப் பட்டவர்களுக்கென வாலிபர் சங்கங்களையும், இரவுப்பள்ளிக் கூடங்களையும், வயதானவர்கள் வகுப்புகளையும், கூட்டியிருக்கின்றார். தீவிர மதுவிலக்கு பிரசாரத்தினால் அந்த எல்லையில் சில கள்ளுக்கடைகளும் மூடப்பட்டன. இந்த சிறந்த வேலை சாஸ்வதமாக நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டியிருப்பதால், பொது நலத்தைக் கோரும் தமிழர்களை ஏராளமாக உதவி செய்ய சங்கம் கோருகின்றது.

திரு. கே. ஜி. சிவஸ்வாமி, இந்திய ஊழியர் சங்கம், மாயனூர், திருசசி ஜில்லா; திரு. வி. வெங்கட சுப்பையா, இந்திய ஊழியர் சங்கம், இராயப்பேட்டை, மதராஸ்- இந்த விலா

### பிரான்சு ருஷியா ஒப்பந்தம்

—:0:—

பிரான்சும் ருஷியாவும் அவற்றின் பிரதம மந்திரிகள் ஹேர் ரியர்ட்டிலும், டோங்கலே லூஸ்கினலும் இரு நாட்டின் சார்பாக ஒப்பந்தக் கையொப்பமிடப் பட்டு, பிரான்சின் கொடியை ருஷ்யப் பிரதிநிதி வணங்கியும். ருஷ்யாவின் ஸோவியட் கொடியை பிரான்சின் பிரதம மந்திரியார் வணங்கியும் ஒப்பந்தம் முடிவுறலாகியது.

### கிறிஸ்தவர் சீர்திருத்தச் சங்கம்.

. தோழர் நீலாவதி அம்மையார்

. திருச்சி பாலக்கரை கிறிஸ்தவர் சீர்திருத்தச் சங்கத்தின் சார்பில் 25—12—32 ஞாயிறன்று மாலை 4 மணிக்கு சுமார் 500 பெண்கள்வரை கூடியுள்ள கூட்டத்தில் திருச்சி தோழர் எஸ். நீலாவதி அம்மை அவர்கள் பெண்மக்களுக்கு வேண்டிய சொத்துரிமை, கல்வி, சுதந்திரம் முதலியவற்றை விளக்கமாக சுமார் இரண்டு மணிநேரம் உருக்கமாகப் பேசினார்கள். பின்னர் பல வாலிப பெண்கள் விரும்பியவாறு கூடிய விரைவில் திருச்சி ஜில்லா மாதர் மகாநாடொன்று கூட்டி அடிமையுற்ற மாதர் விடுதலைக்காவன செய்வதென்று முடிவு செய்யப் பெற்றது. பின்பு சங்கத்தின் சார்பாய் வந்தனம் கூறி மாலை சூட்டப்பெற்று இரவு எட்டு மணிக்கு இனிது நிறைவேறியது. (ஒரு நிருபர்)

சங்களுக்கு அன்புடன் நன்கொடைகளை அனுப்பலாம். இந்திய ஊழியர் சங்கத் தலைவர், ஜி. கே. தேவதர் எழுதுகிறார்.

### நாகையில் குடி அரசு கிடைக்குமிடம்.

சுயமரியாதைச் சங்கம்
புதுரோட்,
மணியம் சலவை ஆபீஸ்
புதுரோட்,
பி. அம்மைநாதன்
ஹாலன் ரோடு.

### மாயனூர் இந்திய ஊழியர் சங்கம்

கிராமச் சீர்மைப்பு நிலையம் தீர்மானங்கள்.

மாயனூரில் டிசம்பர் மாதம் 19ம் தேதி இரவிலும் 20ம் தேதி காலையிலும் அதன் காரியதரிசி தோழர் கே. ஜி. சிவசாமி அய்யர் அவர்கள் பெரு முயற்சியால் தொண்டர்கள் கூடி தீண்டாப் பேர்களின் முன்னேற்ற விஷயமாக தீர்மானங்கள் செய்தார்கள். அகில இந்தியா தீண்டாமை விலக்குச் சங்கம் காரியதரிசி தோழர் தக்கர் அவர்கள் தீண்டாப் பேர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளைப்பற்றி காலையில் தொண்டர்களுக்கும் மாலையில் நேரில் தீண்டாப்பேர் மகாநாட்டிலும் பிரசங்கம் செய்தார்கள். அநேக முக்கிய தீர்மானங்களை இவ்வருடத்திட்டமாக ஒப்புக் கொள்ளப் பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.


## எதுவேண்டும்?

"சன்மார்க்க போதகர்" என்னும் நபிகள் நாயகத்தின் திவ்விய சரிதம் விலை அணா 2.
"சன்மார்க்கப் பணிமல்" என்னும் இஸ்லாமிய ஐங்காலத் திறவுகோல் விலை அணா 3.
இரண்டும் வாங்கினால் அணா 4.
ஆர்டருக்கு முந்துங்கள்.
மானேஜர்,
"இந்திய ஒளி" ஆபீஸ்
திருச்சினாப்பள்ளி.

டாக்டர்
## சிங்காரம் அவர்களின்
### மஹா சந்தனாதித்தைலம்.
(ரிஜிஸ்டார்டு)

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது
கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்குஇத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

| | |
|---|---|
| கண் எரிச்சல் | பீனிசம் |
| கண் சிவப்பு | தலை மயக்கம் |
| கண்ணில் நீர்வடிதல் | தலைப் பொடுகு |
| கண் அரிப்பு | சொரி சிரங்கு |
| கண் பார்வைக்குறைவு | தலைமயிர் உதிர்தல் |
| கண் கூச்சம் | நாள்பட்ட தலை நோய் |
| கண்ணில் பீளை சாருதல் | முதலிய பல வியாதிகளை ஆச்சசரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கும். ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். பத்தியமில்லை. |
| மேக நீர், வெள்ளெழுத்து | |
| ஒருத்தலை நோய் | |
| கை கால் எரிச்சல் | |
| மூலச்சூடு | |
| அதிதாகம் கை | |
| வெட்டைச்சூட்டால் உண்டாகும் திரேகக் காந்தல் | 24 அவுன்ஸ் டின் ரூ. 4-0-0 |
| காது நோய், காது மந்தம் | 12 ,, ,, ரூ. 2-2-0 |
| மண்டை இடி | |

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

[9-ம் பக்கத்தொடர்ச்சி]

தாய் நிறைவேறிற்று.

மாகாண மகாநாடு கூட்டுவதைப்பற்றிபேசப்பட்டது. அதன்பொறுப்பை சிலரிடம் விட்டு ஜனவரிக்குள் மகாநாட்டை எங்கு நடத்துவது என்பதை முடிவு செய்யும்படி கேட்டுக்கொண்டது. பிறகு சங்க தீர்மாணங்களைப் பற்றி ஏற்பாடுகள் செய்யவும், மேல் நடவடிக்கை நடத்தவும் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

### கமிட்டி மெம்பர்கள்.

தோழர்கள் சென்னை எஸ். சுப்பிரமணியம், வி. பி. எஸ். மணியர், செங்கற்பட்டு நாஸ்திக குப்புசாமி, தென்னாற்காடு கோவிந்தராஜ், லக்காஷ், பாரதிதாசன், வட ஆற்காடு பார்த்தசாரதி, நாராயணசாமி, கோயமுத்தூர் சிவானந்தம், சேலம் சித்தையா, ரங்கசாமி, திருச்சி கே. எம். பாலசுப்பிரமணியம், ச. ம. சி. பரமசிவம், தஞ்சை சி. நடராஜன், கே. ராமையா, மதுரை ஏ. ஏ. ஆறுமுகம், ஏ. என். வெங்கிடுசாமி, ராமநாதபுரம் ராமசுப்பையா, எஸ். லக்ஷிமிரதன், திருநெல்வேலி குற்றாலலிங்கம், வைகுந்தம், இரச்சிய பிள்ளை, மற்றும் வேணுகோபால், பொன்னம்பலம், அழகிரிசாமி, சைமன் ராமசாமி, நீலாவதி, சாமி சிதம்பரனார், எம். வல்லத்தரசு, இந்திராணி, கி. ஆ. பெ. விஸ்வநாதம், ப. ஜீவானந்தம், ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் கமிட்டியாகத் தெரிந்தெடுத்து அமைப்புக்காரியங்களைக் கவனிக்கக் கேட்டுக்கொண்டது.

### பொதுக்கூட்டம்

பிறகு மாலை 6 மணிக்கு மேல் ஈரோடு வாய்க்கால் கரையில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப் பட்டது. சுமார் 1000 பேர்கள் வந்திருந்தார்கள் தோழர் எஸ். லக்ஷிமிரதன் பாரதி அவர்கள் தலைமையில் தோழர்கள் சிங்காரவேலு, ஜீவானந்தம், ஈ. வெ. ராமசாமி ஆகியவர்கள் சமதர்மம் என்பது பற்றியும் சு. ம. லக்ஷியம் என்பது பற்றியும் 3 மணி நேரம் பேசியபிறகு தொழர் பொன்னம்பலம் வந்தனம் சொல்ல கூட்டம் முடிவு பெற்றது. பகுதிபேர்களுக்கு மேலாகவே 29 தேதி இரவு ஊருக்குப் போய் விட்டார்கள் மற்றவர்கள் 30, 31 தேதிகளில் ஊருக்குப் போனார்கள்.

---

## திருத்தப்பட்டபடி நிறைவேறிய சுயமரியாதை இயக்க லக்ஷியம்.

1. பிரிட்டிஷ் முதலிய எந்தவித முதலாளித் தன்மைகொண்ட ஆட்சியிலிருந்தும்இந்தியாவை பூரண விடுதலை அடையச் செய்வது.

2. தேசத்தின் பேரால் கொடுக்கப்படவேண்டிய எல்லா கடன்களை ரத்து செய்வது.

3. எல்லா தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும், பாங்கிகளையும், கப்பல் படகு நீர் வழி போக்குவரத்து சாதனங்களையும் பொது மக்களுக்கு உரிமையாக்குவது.

4. எந்தவிதமான பிரதிப் பிரயோஜனமும் கொடுபடாமல் தேசத்தில் உள்ள எல்லா விவசாய நிலங்களையும், காடுகளையும் மற்ற ஸ்தாவர சொத்துக்களையும் பொது ஜனங்களுக்கு உரிமையாக்குவது.

5. குடியானவர்களும், தொழிலாளிகளும், லேவாதேவிக்காரர்களிடம் பட்டிருக்கும் கடன்களையெல்லாம் (கேன்சில்) செல்லுபடியற்றதாக ஆக்கி விடுவது. அடிமை ஒப்பந்தங்களை ரத்து செய்துவிடுவது.

6. சுதேச சமஸ்தானங்கள் என்பவைகளை யெல்லாம் மாற்றி இந்தியா முழுவதையும் தொழிலாளிகள் குடியானவர்கள், சரீர வேலைக்காரர்கள் என்பவர்களுடைய நேரடியான ஆட்சிக்கு கொண்டு வருவது.

7. தொழில்செய்பவர்கள் 7 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யக் கூடாது என்பதுடன், அவர்களுடைய வாழ்க்கை நிலை உயர்த்தப்படுவது. தொழிலாளிகளுக்கு கூலியை உயர்த்தி, அவர்களது சுகவாழ்க்கைக்கு வேண்டிய சவுகரியங்களையும் இலவச நூல் நிலயங்கள் முதலிய வசதிகளையும் ஏற்படுத்துவது. தொழில் இல்லாமல் இருக்கின்றவர்களை சர்க்கார் போஷிக்கும் படியும் செய்வது.

என்பவைகள் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான லட்சியங்களாகும்.

---

## திருத்தப்பட்டபடி நிறைவேறிய வேலைத்திட்ட தீர்மானம்.

சுயமரியாதை இயக்கமானது தென் இந்தியாவில் சென்ற 7, 8 வருஷ காலமாக பாமர மக்களிடை ஏராளமாய் புதைந்து கிடந்த ஜாதி, மதம் முதலியவைகளைப் பற்றிய குருட்டு நம்பிக்கைகள் மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவைகளைப் பற்றியும், பொருளாதார தன்மையின் கீழ் நிலையைப் பற்றியும் செய்து வந்த புரட்சி பிரசாரத்தின் பலனாய் ஒரு பெருத்த உணர்ச்சியைக் கிளப்பி விட்டிருப்பதாலும்,

பகுத்தறிவுக்கு ஏற்காத முறையில் நடைபெற்று வரும் மேல்கண்ட பழக்க வழக்க முறைகளை சட்ட மூலமாகவன்றி வேறு வழியில் ஒழிப்பது என்பது முடியாது என்கின்ற அபிப்பிராயம் நாளுக்கு நாள் பலப்பட்டு வருவதாலும்,

பாமர மக்களைப் பல அரசியல்ஸ்தாபனங்களும், சமூக கட்டுப் பாடுகளும் அந்தந்த விஷயங்களில் அடக்கியும், பொருளாதாரத்துறையில் ஒடுக்கியும் வைப்பதற்கு சாதனமாக அரசியல் ஸ்தாபனங்களே உபயோகப் படுத்தப் பட்டு வருகிறது என்பது ஆட்சேபிக்க முடியாத உண்மையாய் இருப்பதாலும்,

வட்டமேஜை மகாநாட்டின் பயனும் பாமர மக்களின் பகுத்தறிவு வளர்ச்சிக்கு நாசத்தை உண்டாக்கும் கொடுமையான பழய பழக்க வழக்கங்களுக்கும் மனிதத் தன்மைக்கு முரணான ஜாதி வித்தியாசங்களுக்கும் மற்றும் பல கெடுதிகளுக்கும் பாது காப்பும், ஆக்கமும் அளிப்பதாய் இருப்பதாலும்,

சுயமரியாதை இயக்கத்தாருக்குள் சமதர்ம (Socialist party) கட்சி என்பதாக ஒரு அரசியல் பிரிவை ஏற்படுத்தி, அதற்கு அடியிற் கண்ட திட்டத்தை வகுத்து, அதன் மூலம் பரிகாரம் தேடுவது என்று தீர்மானிக்கப் படுகிறது.

1. பொது ஜன சௌகரியங்களுக்கு ஏற்பட்ட சாதனங்களை தனிப்பட்ட மனிதர்கள் அனுபவிப்பதென்பதற்கும் ஜாதிமத சம்பந்தமான கொடுமைகளுக்கும் பாதுகாப்புகளாய் இருக்கும் அறிவுக்கு ஒவ்வாமுறைகளை ரத்து செய்ய வேண்டும்.

பாமர ஜனங்களை அவர்களது பொருளாதாரக் கொடுமையில் இருந்தும், ஜாதி மதக் கொடுமையில் இருந்தும் விடுவித்தும் சுதந்திர மனிதர்கள் ஆக்குவதற்கும், பொது ஜன அவசியத்திற்கு என்று ஏற்படுத்தப் படுகிற தொழில் முறைகள் போக்குவரத்து சாதனங்கள் ஆகியவைகளின் நிர்வாகத்தையும் அதன் இலாபத்தையும் தனிப்பட்ட மனிதர்கள் அடையாமலிருப்பதற்கும் வேண்டிய காரியங்களை அரசியல் ஸ்தாபனங்களின் மூலமாகச் செய்ய வேண்டும்.

திட்டங்களாவன—

2. எல்லாச் சட்டசபை, முனிசிபல் தாலூக்கா ஜில்லா சபை ஆகியவற்றின் தேர்தலுக்கு வயது வந்த யாவருக்கும் ஓட்டுரிமை ஏற்படும்படி செய்ய வேண்டும். தனிப்பட்ட தொழிற்சாலைகள், ரயில், கப்பல்முதலியவைகளில் தொழிலாளிகளுக்கு எப்பொழுதும் தொழில்இருப்பதற்கு ஒரு ஜவாப்தாரித்தனத்தையும் அவர்களுடைய நல் வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தை நிர்ணயப் படுத்தி அதற்கு ஒரு உறுதிப் பாட்டையும் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்,

4. நில சொந்தக்காரர்களாயில்லாமல் விவசாயத்தில் ஈடுபட்ட தொழிலாளிகளுக்கு வெள்ளாமையில் ஒரு ஞாயமான பங்குவிகிதம் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

5. கோவில், பிரார்த்தனை இடங்கம் முதலிய மத ஸ்தாபனங்களின் சொத்துக்கள், வரும்படிகள் ஆகியவைகளைப் பொது ஜனங்களின் தொழில், கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி அனாதைப் பிள்ளைகள் விடுதி ஆகியவைகளுக்கு பயன் படுத்த அனுமதி பெற வேண்டும்.

6. இந்திய சமூகத்தில் ஜாதிமத பிரிவு முதலியவைகளைக் குறிக்கக் கூடிய குறிப்புகள் எதையும் பொது ஆதாரங்களில் (ரிகார்டுகளிலிருந்து) எடுத்து விடுவதற்கும், அம்மாதிரிப் பட்டம் உடையவர்களைப் பொது வேலைகளில் இடம் பெறாமல் இருக்கும்படி செய்வதற்கும் அனுமதி பெறுதல்.

7. முனிசிபாலிடி முதலிய ஸ்தலஸ்தாபனங்களின் மூலமாகவே போக்குவரவு சாதன வசதி, வீட்டு வசதி, பால்வசதி, வைத்தியவசதி; முதலியவைகள் நடைபெறும்படி ஏற்பாடு செய்யவேண்டும்.

8. இவைகளை நிறைவேற்ற சட்டசபை, முனிசிபாலிட்டி முதலிய ஜனப் பிரதிநிதி ஸ்தாபனங்களுக்கு மேல்கண்ட கட்சியினர் பேரால் அபேக்ஷகர்களை நிறுத்தவேண்டும்.

9. கட்சி அபேட்சகர்கள் மேல் கண்ட திட்டங்களுக்கு உறுதிகூறி கையெழுத்திடவேண்டும்.

10. மேல்கண்ட சட்டங்கள், சீர்திருத்தங்கள் முதலியவைகளை எல்லாம் சட்டசபைப் பிரவேசம், மூலம், பிரசங்கமூலம், சொல்லுவதன் மூலம், பத்திரிகைத் துண்டுப்பிரசுரம் முதலியவைகள் மூலம் சட்டத்தை அனுசரிக்குச் செய்யவேண்டியது.

---

### திருத்தம்.

சென்ற 25—12—32-ந்தேதி குடி அரசு பத்திரிகையில் 11-வது பக்கத்தில் 4-வது கலத்தில் "மதுரை நாடார் மகாஜன சங்க நடவடிக்கை என்ற விஷயத்தில் தூத்துக்குடி பாங் ரிப்போர்ட் ஒப்புக்கொள்ளக் கூடாது என்று சில பிரதிகளில் தவறுதலாய் வெளியிடப்பட்டிருக்கிறது. அதை ஒப்புக்கொள்ளப்பட்டது என்று வாசித்துக்கொள்ளும்படி வாசகர்களைக்கேட்டுக்கொள்ளுகிறோம். (ப—ர்.)

---

## கிராம சீரமைப்பு நிலையம், பெருந்துறை.

கோயமுத்தூர் ஜில்லா அர்பன் பாங்காரின் ஆதரவில் பெருந்துறையில் நடைபெற்று வருகிற கிராம சீரமைப்பு நிலயத்தில் 24—12—32 சனிக்கிழமை மாலை 3 மணி முதல் 30—12—32 வெள்ளிக் கிழமை மாலை 5 மணி வரையில் ஒரு வார காலம் முதியோர் பயிற்சி வகுப்பு நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### பயிற்சி சாலை.

குறிப்புகள்:—(1) பிரவேசக்கட்டணம் ரூபாய் மூன்று. (2) தேவையுள்ளவர்களுக்கு தினம் ஒன்றுக்கு சாப்பாடு சார்ஜ் ஒரு ரூபாய். (3) பைக்காரா மின்சார சக்தியைக் கொண்டு விவசாய அபிவிருத்தி, ஈரிபட்டு உற்பத்தி; ஆகிய விஷயங்களைப் பற்றி அந்தந்த இலாகாவின் ஆபீசர்கள் விஜயம் செய்து யோசனை சொல்லுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. (4) காலை அல்லது மாலை நேரங்களில் சிலேடர் நகர், சமாதானபுரம் ஆகிய ஸ்தலங்களைப் பார்வையிடலாம்; பல விஷயங்களைப்பற்றி பலதோழர்கள் பேசுவார்கள்என என், லக்ஷ்மண முதலியார் அறிவிக்கிறார்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பாது காப்பாளர்கள் (பாதிரிகள் குருக்கள்மார்கள்) அரசாங்கத்துடனும், ஸார் (Czars) களுடனும் சேர்ந்து செய்த சூழ்ச்சிகளைக் காட்டும் புகைப்படங்களும் தெளிவாகும் வண்ணம் நல்ல ஒழுங்கான முறையில் அழகாகத் தொங்கவிடப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மதப்பிரிவினைகளைக் குறித்தும் தனித்தனி படங்கள் பிரத்தியேகமான இடங்களில் வைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுள் பேப்டிஸ்ட் பிரிவினை (Baptist section) யைக் காட்டும் படங்களில், நமது பிரதம மந்திரியாகிய ராம்ஸே மாக்டனல்ட் (Ramsay macdonald) சாயங்காலங் உடுப்புடன் ஜப வரிசையில் இருந்து பிரார்த்தனை செய்யும் படமும் வைக்கப் பட்டிருப்பதையும் நாங்கள் கண்டோம்.

இயற்கை அழகு பொலிந்து மனதைக் கவரத் தக்க நிலையில் சமுத்திரக் கரை யோரமாக விளங்கும் வெகு நேர்த்தியான லெனின் க்ராட் (Lenin grad) என்ற பட்டணம் போன்று, மாஸ்கோ (Moscow) என்ற நகரம் அவ்வளவு வனப்பு வாய்ந்ததாக காணப்படாவிடினும், கிரெம்லின் (Krem lin) அரண்மனைகள் போன்ற அதன் சில பகுதிகள் உண்மையாகவே சிறப்புற்றிருக்கின்றன.

மாஸ்கோ நகரம் (Moscow)

இந்நகரத்தில் ஒருவர் முக்கியமாகப் பார்க்க வேண்டிய முக்கிய ஸ்தலங்கள்—சிறைச்சாலை, விவாகமும் விவாகரத்தும் செய்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள இடம், நீதி மன்றம்—முதலியவைகளாம். சிறைச்சாலைகளை எடுத்துக் கொண்டோமானால், பிற நாடுகளில் கைதிகளை அடைத்து வைத்திருக்கும் சிறைகளைப் போல் அல்லாமல், அங்குள்ள கைதிகளை இரவில் 12 மணி முதல் மறு நாட்காலை 6 மணி வரையில் மட்டும் அவர்களுடைய அறைகளில் அடைத்து, மற்ற நேரங்களில் தங்களுக்கென்று நியமிக்கப் பட்ட வேலைகளைச் செய்யவும், அங்கு நடக்கும் பிரசங்கங்களைக் கேட்கவும், தன் னிஷ்டம் போல மற்றவர்களுடன் கலந்து சம்பாஷிக்கவும் புஸ்தகங்கள் படிக்கவும், கிராமபோன் ரேடியோ முதலியன கேட்கவும் வேண்டிய சௌகரியங்கள் கொடுக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

நாங்கள் பார்க்கச் சென்ற சிறையில், திருடர்களும், கொலையாளிகளும், இராஜீயக் கைதிகளும் இருந்தார்கள். அவர்கள் நன்னடத்தையுடையவர்களாகக் காணப்பட்டால் விசேஷ காலங்களிலும் பிரதிவார முடிவு நாட்களிலும் வெளியிலும் தங்கள் வீடுகளுக்கும் போய் வர அனுமதிக்கப் படுகிறார்கள்.

அவர்களுக்குள்ளேயே ஒரு பஞ்சாயத்து (Soviet) என்ற

படுத்திக் கொண்டு, கெட்ட நடத்தையுடைய கைதிகளைத் தாங்களாகவே தண்டித்துக் கொள்ளுகின்றனர். மற்ற இடங்களில் நடக்கும் விஷயங்களை அறிவிக்கக் கூடிய கம்பியில்லாத் தந்தி (Wirless set) ஒவ்வொரு அறையில் அமைக்கப்பட்டிருப்பினும், அவர்கள் தங்கள் இஷ்டம் போல் அவற்றை வைத்துக் கொள்ளவோ, அல்லது எடுத்து விடவோ உரிமை பெற்றிருக்கிறார்கள்.

சிறைச்சாலைகளில் இவ்விதநூதனமான முறைகள் கையாளப்படினும், அங்கு கைதிகள் நாளாவட்டத்தில் மிகவும் குறைந்து இப்போது அநேக சிறைச்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

விவாகச் சடங்குகள்

கலியாணம் செய்து கொள்ள விரும்பும் ஒரு நபர் தன்னுடைய காதலன் அல்லது காதலியுடன். விவாகத்திற்கென்று ஏற்பட்டிருக்கும் இரண்டு பிரத்தியேகமான அறைகளையுடைய விடுதிகளுக்கு (Bureau) ச் சென்று இரண்டு ரூபில் (Roubles) ஒரு ரூபாய் கொடுத்து, அவர்கள் தங்களைக் கேட்கக் கூடிய சில கேள்விகளுக்குவிடையளித்துத் தங்களுடைய விவாகத்தை முடித்துக் கொள்ளலாம். அங்கு கேட்கப்படும் கேள்விகளில் சில பின் வருமாறு:—"உனக்கு உன்னுடைய காதலன் அல்லது (காதலி) யின் சரீர நிலைமையைக் குறித்துச் சரிவரத் தெரியுமா? இதற்கு முன் விவாகம் செய்து கொண்டதுண்டா? என்பதோடு பெண்ணை இனி மேல் நீ உன் கணவன் பெயரையே வைத்துக் கொள்ளச் சம்மதிக்கிறாயா, அல்லது உன்னுடைய சொந்தப் பெயரைவைத்துக் கொள்ள இஷ்டப்படுகிறாயா?" என்று கேள்ப்பார்கள் இவ்வளவுடன் விவாகம் பதிவு செய்யப் பட்டு முடிவடைந்து விடும்.

விவாக ரத்து

விவாக ரத்தைக் குறைப்பதற்கென சில சட்டங்கள் சில நாட்களுக்கு முன் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டிருப்பினும், விவாக ரத்து செய்து கொள்ள வேண்டுமென்பவர்களுக்கு அங்கு விவாகத்தைப் போன்ற வெகு சுலபமான காரியமாகவே இருந்து வருகிறது. விவாக ரத்து செய்யும் விஷயங்களில் அவர்களுடைய மன வேறுபாடுகள் முதலியவற்றைக் குறித்து பக்கத்து வீட்டார்களிடத்திலிருந்துவேண்டிய சாட்சியங்களைப்பெற்றுஉடனுக்குஉடனே முடிவு செய்யப் படுகின்றன.

கோர்ட்

நாங்கள் ஒரு மேல் கோர்ட்டை (Appeal court)ப் பார்த்த பொழுது, அங்கே எவ்வித ஆடம்பரமும் இல்லாத ஒரு சாதாரணமான சிறிய அறையில் தான் விசாரணைகள் நடந்தன. பிற இடங்களிலுள்ள நியாயஸ்தலங்களைப் போல் எவ்வித அலங்காரமும் இல்லாமல் அங்கு சில மேஜைகளும், நாற்காலிகளும், பெஞ்சுகளும் மட்டுமே போடப் பட்டிருந்தன.

அங்கே இருந்த நியாயாதிபதிகளுள் (Judges,) தலைமை ஜட்ஜாக இருந்தவர் ஒரு பெண் ஆவார். இவர்கள் எல்லோரும் தங்களுடைய சாதாரண உடைகளையே அணிந்து கொண்டிருந்தார்கள். அன்றைக்கு விசாரிக்கப்பட்ட கைதியானவன் தரகாளி என்று குற்றம் சாட்டப் பட்ட ஒரு வாலிபனுவான். சில சாமான்களை கடையில் வாங்கி அவற்றை மறுபடியும் அதிகமான விலைக்கு விற்றது தான் அவன் செய்த மிகப் பெரிய குற்றமாகும். இக்குற்றத்திற்காக அவன் மாஸ்கோவிலிருந்து வெளியில் மூன்று வருஷம் துரத்தப் பட வேண்டுமென்று கீழ் கோர்ட்டில் (Eanishment) நீதி வழங்கப் பட்டிருந்து, இப்பொழுது அந்த தண்டனையைக் குறித்து அவன் இந்த மேல் கோர்ட்டுக்கு அப்பீலுக்கு வந்திருந்தான். கோர்ட்டிலிருந்த ஜுரிகள்,—சிறுவயதினனென்றும் இக்குற்றத்தைத் தான் முதல் தடவை செய்தானென்றும், அதனால் அவன் அடைந்த லாபம் மிகவும் சொற்பமென்றும்—அவன் சார்பாகப் பேசினார்கள.

இதைக்கேட்ட மூன்று ஜட்ஜுகளும் சிறிது நேரம் தனியாகக் கலந்து ஆலோசித்து கடைசியாக கீழ் கோர்ட்டாரின் தீர்மானத்தையே ஆமோதித்தார்கள். அதைக் கேட்ட குற்றவாளியும் அத்தண்டனையை அதிகமாகப் பொருட்படுத்தவில்லை.

முடிவுரை.

என்னுடைய ரஷ்யாவின் சுற்றுப் பிரயாணத்திலிருந்து, ரஷ்யாவைப் போல் விசித்திரமான தேசம் வேறு இல்லை யென்றும், அவர்களுடைய தைரியத்திலிருந்தும், அவர்கள் மற்கொண்டுள்ள தீவிர முயற்சியிலிருந்தும், நாம் அநேக விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்று நான் அறிகின்றேன். அவற்றுள் மிகவும் முக்கியமாக—ரஷ்யர்களுடைய உத்வேக உணர்ச்சியும், (Spirit) தங்களுடைய லட்சியத்திற்காக எவ்வித கஷ்டத்தையும் சகித்து வரும் சகிப்புத் தன்மையும் என்னுடைய மனதில் அதிகமாகப் பதிந்திருக்கின்றன.

ரஷ்ய வாலிபர்களின் தீவிர பொது வுடமை உணர்ச்சியே உணர்ச்சி!

அவர்களின் சகோதரத்துவ பரஸ்பர ஒற்றுமையே ஒற்றுமை !!

உலகத்திலுள்ள மற்ற எந்தேசத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கே பெண்கள் நிலை இன்றும் கூட மிக தாழ்ந்தே இருக்கின்றது. ஆனால் ரஷ்யாவிலோ, பெண்கள் தங்களுக்கு பூரண சுயேச்சையும் சமத்துவத்தையும் பெற்று எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாக இருந்து வருகின்றார்கள் !

என்னுடைய முடிவான அபிப்பிராயம் யாதெனில்—ரஷ்யர்களோ மிகப்பெரிதான காரியங்களைச்சாதிக்க முற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். காய்தலுவத்தலின்றி அவர்களுடைய பரந்த நோக்கங்களை உற்று நோக்குவோமாக. அவர்கள் தங்களுடைய இலட்சியத்தை அடைவதற்காக மேற்கண்ட தீவிர முயற்சியில் ஒரு லவலேசமேனும் நம் நாட்டு மக்கள் அடைய முற்படுவோமானால் நம் நிலைமை விரைவில் நன்னிலைமையாகுமென்பது திண்ணம் !!

---

குறிப்பு.

சென்னை 5-வது வாலிப நாடார் மகாநாட்டின் தலைவர் தூத்துக்குடி தோழர் கூ. கா. ஆ. பெரியசாமி அவர்களது சொற்பொழிவு கிடைக்கப்பெற்றோம். அது அடுத்தவாரம் பிரசுரிக்கப்படும் (ப—ர்)

---

## மதிப்புரைகள்.

இந்தியன் நேஷன் என்னும் மாத பத்திரிகையின் முதல் இதழ் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டதற்கு நன்றி செலுத்துகிறோம். அப்பத்திரிகையானது நல்ல காகிதத்தில் வெகு பிரபலஸ்தர்கள் என்போரின் பல வியாசங்களுடனும், பலபல உருவப்படங்களுடனும் மிக அழகாய் அச்சிடப்பட்டிருக்கிறது. பத்திராதிபர் தோழர் லால்குடி சுப்பிரமணியம்.

சந்தாவிபரம்.

| | |
|---|---|
| நல்ல பதிப்பு ஹு 1-க்கு | 2—0—0 |
| சாதாரணபதிப்பு ,, | 1—0—0 |
| மாதிரி பிரதி 1-க்கு | 0—2—0 |

விலாசம்:—

இந்தியன் நேஷன்,
330, ஹைரோட் திருவல்லிக்கேணி,
மதராஸ்.

"நீ மயங்குவதேன் ?"

கொழும்பு தோழர் கோ. நடேசய்யர் அவர்களால் எழுதப்பட்ட மேற்கண்ட புத்தகம் ஒன்று வரப் பெற்றோம். இதில் இதன் ஆசிரியர் முயற்சி, ஊக்கம், தன்னம்பிக்கை முதலியன பெற்று வாழா மக்கள்-சிறப்பாக வாலிபர்கள், எவ்வகைத் தொழிலும் செய்ய சக்தியற்று சோம்பேரிகளாய், நடை பிணங்களாய் காலங்கழிக்க வேண்டிய கொரேநிலையை விளக்கி, பல மேனாட்டு, கீழ் நாட்டுசரித்திரவரலாறுகளாலும், மேற்கோள்களாலும் தெள்ளித் தெளிய விளக்கியுள்ளார். தலைவிதியில்நம்பிக்கையும், மதத்தில் பற்றும், கடவுள் பக்தியும் கொண்டு நினைத்ததற்கெல்லாம் தலைவிதியின் மேலும், கடவுள் மேலும் பாரத்தைப் போட்டு சோம்பேரிகளாய் தன்னம்பிக்கையற்று, முயற்சி ஏது மின்றி வாழும்நம்நாட்டு மக்களைக் கண் விழிக்கச் செய்ய இத்தகைய நூல் பெரிதும் பயன்படுமென்றே எண்ணுகிறோம். எளிய நடை, இனிய தமிழ் ஆண், பெண் அனைவரும் வாங்கிப் படித்துப் பயன் பெற வேண்டுகிறோம்.

இதன் விலை ரூ. 1

# எதுவரை ஆலயப்பிரவேசம்.

(வைதீகச்சைவன் எழுதுவது)

தமிழ் நாட்டில் மட்டுமல்ல- இந்தியா வெங்குமே தாழ்த்தப் பட்ட மக்களுக்கு ஆலயப் பிரவேச அனுமதியளிக்கும் விஷயமாய் தேசிய வாதிகள் செய்யும் ஓர் பெருங்கிளர்ச்சி யொலியை நேயர்களெல்லீருமறிவர். இந்து மதம் என்று சொல்லிக் கொள்ளும் சமயங்கள்தோன்றி பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகியும், காங்கிரஸ் தோன்றி 43 ஆண்டுகளாகியும் இதுவரையும் தாழ்த்தப் பட்ட மக்கள் ஆலயப்பிரவேசத்தைப் பற்றி அணுவளவும் கவலை கொள்ளாத இக்குழுவினர் இதுபோழ்து ஆலயப்பிரவேசமளித்து விட வேண்டும், தாழ்த்தப் பட்டார்கள் ஹரிஜனங்கள் என்ற பெயரைப்புனைந்து கொள்ளவேண்டும் என்றும் காங்கிரஸ் சர்வாதிகாரி, வைஷ்ணவ பக்கதர் தோழர் காந்தி கூறியதும் "கோலாடக் குரங்கும் ஆடும்" என்னும் பழமொழிக்கொப்ப தாழ்த்தப்பட்டாரைப் பார்த்தாலும் தீட்டென்று ஸ்நானம்செய்துவிட்டு வீட்டினுள் நுழையும் பார்ப்பார்களெல்லாம் ஆலயப்பிரவேசத்தைப் பற்றிப் பிரமாதமாய்க் கிளர்ச்சி செய்யும் காரணந்தானென்ன? உண்மையில் இத்துணை காலமுமில்லாத ஜீவகாருண்ய உணர்ச்சி சமதர்ம உணர்ச்சி இவர்களுக்குப் பொங்கிவிட்டதா? அல்லது இதில் சுயநலமோ சூழ்ச்சியோ ஏதாவதுண்டா, என்று ஆலோசிக்கையில் எமக்குப்பின் வரும் காரணங்களே நன்கு புலனாகின்றன.

(1) சுயமரியாதை இயக்கம் நாளுக்கு நாள் வீறு கொண்டெழுகிறது. உயர்ந்த ஜாதியார் வலுவுடைய ஜாதியார்களென்போரிற் பலரும் கூட ஆதரவு காட்டிவருகின்றனர். தாழ்த்தப்பட்டோர் தாராளமாய்க் கலந்து வருகின்றார்கள். சுயமரியாதைக் காரர்கள் "கோயில்களையெல்லாம் ஒழித்து விடவேண்டு"மென்று தீனஞ்செய்து எப்பொழுதும் ஆலயங்களின் மேற் துவேசமுண்டாகும்படி பிரசாரஞ்செய்து வருவதால் 7 கோடி தாழ்த்தப்பட்டாரும். சில விடங்களில் மட்டும் ஆலயப்பிரவேச உரிமை மறுக்கப்படுகிறநாடார், மறவர் காசுக்காரவாணியச்செட்டியார் முதலியசெல்வமும் பலமும்கொண்டஜாதியாரும்சேர்ந்துஆலயத்தை உடைத்தெரிந்துவிட முன்வந்தாலென்செய்வதுஎன்றபயம்ஒன்று

2. சுயமரியாதைக்காரர்களால் தாழ்த்தப்பட்ட மக்களிடையேமிகுதீவிரமாய்ப் பிரசாரஞ்செய்து, "ஹிந்துக்கள்" என்ற கூட்டத்தினின்று தனித்தொகுதி மூலமாய் பிரியச்செய்ததும், உங்களின் சமத்துவத்திற்காக இஸ்லாமாக நேர்ந்தால் இன்றே இஸ்லாமாகுங்கள் என்றதும் பொதுத்தொகுதியை ஆதரித்துவந்த அம்பெட்கார் தனித்தொகுதியை ஆதரிக்க முன் வந்து 'தனித்தொகுதி' கொடுப்பது உறுதிப்படவே 8 கோடி முஸ்லிம்களோடு 7 கோடி தாழ்த்தப் பட்டாரும், சீக்கியர், புத்தர் முதலிய சமயத்தாரும் ஒன்று சேர்ந்து விட்டால் இந்துக்கள் சுமார் 10 கோடி பேர்களுமில்லாத ஒரு மைனாரட்டி சமூகமாய்ப் போய்விடும் அதுபோது அரசியலை இன்னோர் கைப்பற்றிக் கொண்டு கட்டுப் பாடற்ற, பிரிவினையுள்ள இந்து சமூகத்தை நாளடைவில் ஒழித்துவிடுவாரகளென்ற பயம் ஒன்று.

3. கோவில்களில்நடைபெறும்அக்கிரமங்களையும், அயோக்கியத்தனத்தையும், பயனற்ற தன்மையும் மேல் ஜாதிக்காரர்களென்போர்உணர்ந்தால் வர வர ஜனக்கூட்டம்குறைந்து வருவதுடன் பொருள் வருவாயும் சுருங்கிவருவதால் ஆலயத்தில் மோகங்கொண்ட ஆதிதிராவிடருக்கும் மற்றையோருக்கும் ஆலயப் பிரவேசமளித்து அவர்களிடம் கொஞ்ச நஞ்சமுள்ள செல்வத்தையும் தீர்த்தமென்றும் தக்ஷணையென்றும், அர்ச்சனையென்றும், கட்டளையென்றும் பறித்துக்கொண்டுஇன்னும பல நாட்கள்பொருளாதாரத்துறையில்ஆழத்தி அடிமைகளாய் மேலோங்க விடாமற் செய்து விடலாம் என்ற சூழ்ச்சியொன்று.

4. பார்ப்பனரல்லாத உயர்ந்த ஜாதியார்என்றுசொல்லிக் கொள்ளுகிறவர்களுக்கும், ஆலயப் பிரவேசம் இத்துணை நாளும் மறுத்திருந்து இப்பொழுது நுழைய விரும்புகிறவர்களுக்கும் ஒருவித பகையை உண்டு பண்ணி பார்ப்பனரல்லாத கட்சியை ஒழித்து விடச்செய்யும் புத்தி நுட்பமான சூழ்ச்சி யொன்று.

5. அரசியல் கிளர்ச்சியால் ஏற்பட்டுள்ள ஒரு கடினமான சந்தர்ப்பத்தை தன் வைஷ்ணவப் பிரசாரத்திற்கு உபயோகித்துக் கொள்ள சில வைஷ்ணவதேசீய வாதிகள் ஆதிதிராவிட மக்களை ஹரிஜனங்களாக்கி (வைணவர்களாக்கி) கொள்ள நினைத்த தந்திரம் ஒன்று.

6. அரசியலில் காந்தியாருக்கும் அவரது சிஷ்யர்களுக்கும், ஏற்பட்ட பெருந்தோல்வியை மறைக்கும் முயற்சி ஒன்று இன்னோரன்னபலவிஷயங்களைமனதிற்கொண்டே ஹரிஜனங்களின் ஆலயப்பிரவேசஉரிமைக்கிளர்ச்சிஆரம்பிக்கப் பட்டதே யொழிய உண்மையில் தீண்டாமையை ஒழிக்க விரும்பியோ சமத்துவத்தைக் கருதியோ, ஜீவகாருண்யம் எண்ணியோ ஆரம்பிக்கப் படவில்லையென்பது என் முடிவான எண்ணம்.

எது எப்படிப் போயினும் வைதிக சைவர்களாகிய என்போன்றார்க்கு இதைப்பற்றி ஒரு சிறிதும் கவலையில்லை யென்றாலும் மகாவிஷ்ணுவின் அவதாரமென்று கூறப்படும் காந்தியால் வைணவர்களாக்கப்பட்ட ஹரிஜனங்கள் சைவர்களுக்கே உரித்தான சிவன் கோவிலினுள்ளும்நுழையக் கூறுவது தவறு என்றும் ஹரிஜனங்கள் என்ற பெயரை மாற்றி சிவஜனங்களென்று மாற்றிக்கொண்டு சிவன் கோயில்களில் நுழைய முயற்சிப்பதே சரியென்றும் எண்ணுகின்றேன். சிவஜனங்கள் என்று பெயரை மாற்றி சைவர்களின் ஆலயங்களில் தாழ்த்தப்பட்டாரை காங்கிரஸ் வாதிகள் அழைத்துக் கொண்டு சென்றால் அவர்கள் ஆலயத்துள் வாணியச்செட்டியார்கள்முதலியபற்பலஜாதியார்களுக்கென்று பிரித்து வைத்திருக்கும் கிரமப்படி பின்னின்று வணங்கும் முறைப்படி கடைசியில் நின்று வணங்கச் செய்கிறார்களா? அல்லது சைவவேளாளர் நின்று வணங்குமிடமட்டும் அழைத்துவர விரும்புகிறார்களா? அல்லது பார்ப்பார்கள் நின்று வணங்கும் ஸ்தலமட்டும் அழைத்துப் போக விரும்புகிறார்களா? என்பதைத் தேசீயவாதிகள் இதுவரைத் தெளிவுபடுத்திறார்களில்லை. இனியாவது தெளிவுபடுததிக் கூறுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்கள் வைதீக சைவர்களாகிய எங்களுக்குப் பின் நின்று வணங்குவதிலோ, அல்லது எங்களுக்கு முன்னின்று பார்ப்பனத் தோழர்களோடு நின்று வணங்குவதிலோ எங்கட்கு ஆக்ஷேபனையில்லை. இறைவனிருக்கும் இருப்பிடம் கோயிலானால் அது யாவருக்கும் பொது என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் சைவர்களோடு மட்டும்தான் அவர்கள் சமத்துவமாய் நின்று வணங்கச் செய்யப் போகிறோம். பார்ப்பனர்கள் நின்று வணங்கும் இடத்துக்கு அழைத்துச் செல்லமுடியாது என்ற சூழ்ச்சிக்கு வைதீக சைவர்களாகிய நாங்கள் ஒரு பொழுதும் இடங்கொடோம் என்பதை தேசியப் பார்ப்பன-ஹரிஜன ஆலயப் பிரவேசக் கிளர்ச்சிக்காரர்களுக்கு வணக்கமாய் அறிவித்துக் கொள்கிறேன். ஹரிஜனங்கள் என்றால் கடவுளின் புத்திரர்கள் என்று தேசீயத் தலைவர்கள் பொருள்கூறி எங்களை எளிதில் ஏமாற்றிவிட முடியாது. சமயத்திற்குத் தகுந்த எந்த அகராதியிலும் காணமுடியாத நயவஞ்சகப் புரட்டு இனிப் பலிக்காதென்பதைத் தேசீயத் தோழர்களுக்கு அன்புடன் எச்சரிக்கின்றேன்.

## மதுரை.

மதுரை சுயமரியாதை சங்கத்தின் வருடக்கூட்டமொன்று 13-12-32 மாலை 6-மணிக்கு தோழர் எ. எஸ். ஆனந்தம் அவர்களது தலைமையில் நடந்தது. சங்கத்தின் அபிவிர்த்தியைக்குறித்து தோழர்களான எ. எஸ். அருணாசலம், ப. வ. விநாயகமூர்த்தி குமரேசன், எஸ். ஜி. தஸ்தகீர் முதலியவர்கள் பேசினார்கள். பின் தலைவர் முடிவுரை கூறியதும் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

Read,
The 'Citizen'
and become a
True Citizen.
The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.
For advertisement please apply to:—
The Publisher.
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

"வெடி குண்டு"
தனிப்பிரதி
விலை அரையணா.

ஏஜண்டுகளுக்கு

மேல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி கட்டுரைகளும், சமூக சமுதாய அரசியல் செய்திகளுடனும் அச்சமற்ற ஆணித்தரமான அபிப்பிராயங்களையும் கொண்டு கிரவுன் 1-க்கு 2 சைசில் விசித்திர படங்கள் போட்டு 12 பக்கம், ரேப்பருடன் பிரதி ஞாயிறு தோறும் மதுரையிலிருந்து வெளியிடும் "வெடி குண்டு" என்னும் தமிழ் வாரப்பத்திரிக்கைக்கு எல்லா விடங்களிலும் விற்பதற்கு ஏஜண்டுகள் தேவை. தனிப்பிரதி விலை அரையணா. பிரதி ஒன்றுக்கு இரண்டு பைசா கமிஷன் கொடுக்கப்படும்; எத்தனை பிரதிகள் தேவையோ அத்தனை பிரதிகளின் நான்கு வாரத்திய தொகையை முன் பணமாக அனுப்பப்படாத ஏஜண்டுகளை பதிவு செய்து கொள்ளப்படமாட்டா. முன் பணம் வருடசந்தா ரூ இரண்டு. ஆறு மாதத்திற்கு ஒன்றேகால். வெளிநாடு வருஷசந்தா மூன்று.

A. S. ஆனந்தம்
மானேஜிங் எடிட்டர்
காரியாலயம் தெற்கு வாசல்
மதுரை.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தூமயங்கத் தெண்டபாணிபூசை செய்து வானப்பிரஸ்தாசிரமம் வயது தாண்டி சந்நியாசம் வாங்கும் வயது வந்தும் வக்கீல் வேலையை விடாமல் இருக்கும் கர்மாக்கள் எந்த வேதத்திலுமில்லை. தெண்டபாணி என்னும் தெய்வம் கூட வேதத்திலில்லை. வேதத்திலுள்ள கர்மங்களையெல்லாம் விட்டு வேதத்திலில்லாத கர்மங்களையெல்லாம் செய்கிறவர்களை வேதசம்மந்தமுடையவர்களென்றும் வைதீகர்களென்றும் சொல்லுவதற்கு எந்த வித ஞாயமுமில்லை. இனி அவர்கள் சொல்லும் விஷயங்களை கவனிப்போம்.

இப்பொழுது நான்கு வருணத்தில் க்ஷத்திரிய வைசியன் என்னும் இரண்டு வருணங்களில், பிராமணன். சூத்திரன் என்கிற இரண்டு வருணந்தானிருக்கின்றன வென்கிறார்கள். முன் வேதசம்மந்தமுடைய பிராமணர்கள் இன்னவர்களென்று சொல்லியாயிற்று. இதற்கு கீழ் வேதசம்மந்தமுடைய சூத்திரர்கள் யார் என்பதைச்சொல்லுகிறேன்.

சூத்திரன் என்றால் பிராமணதாசி மகன், அடிமை என்று வேத மனுஸ்மிருதிகளிலும்,

இச்சை, வெறுப்பு, ஆசைபெருக்கம், வன்சொல், இரக்கமின்மை, அறிவில்லாமல் செய்தல், திராப்பிடிவாதம், மானமில்லாமை, செல்வனை ஒழிகாமை, பொய்கூறல், கோள், பெரும் உலோபம், அறியாமை முதலிய தீக்குணங்கள் சூத்திரன் பிறந்தவுடனே அவன்கூடவே பிறந்தன வென்றும் இந்த தாமதகுணத்தால் சூத்திரன் மூடப்பட்டிருப்பதை பிர்மா கண்டு வேதியர்களுக்கு பணி செய்யும் வேலையைக்கொடுத்தார் என்றும், அந்தப்பணியால் தாமதக்குணம் நசித்துப்போகுமென்றும் பராசரஸ்மிருதி சூத்திரனியல்பில் சொல்லியிருக்கிறது.

மனசுத்தமில்லாமல்சூத்திரர்களிருப்பதால் மனசுத்தம்வரவேண்டி வேதியர் பணியே செய்ய வேண்டுமென்று யாக்ஞவல்கியஸ்மிருதியில் சொல்லுகிறது.

சூத்திரனென்றால் ஒழுக்கம் கெட்டவன், ஆசாரமில்லாதவன், கண்டதைபுசிப்பவன் என்றும், பாரத முதலிய இதிகாசங்களில் சொல்லுகிறது.

சூத்திரன் என்னும் பதத்திற்கு கிலேசமுடையவன் என்று இலக்கிண நிகண்டு சொல்லுகிறது. கிலேசமுடையவன் என்றால் பயமும், துன்பமும் உடையவனென்பதே பொருள். கடவுளால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட வேத ஸ்மிருதிகளில் சூத்திரனுக்கு விதித்திருக்கும் சட்டதிட்டங்களால் சதாபயமும், துன்பமும் இல்லாமலிருக்கவே முடியாது இதுவே வேதஸ்மிருதிபுராணங்களால் விதித்திருக்கும் சூத்திரஜாதி. அந்தவேதஸ் சாஸ்திரத்தை வைத்துக் கொண்டுதான் இதுகால பரியந்தம் சமூதாய விவகாரங்களிலும், சமயவிவகாரங்களிலும் காரியங்கள் நடந்து வந்தன. இப்பொழுதும் அப்படியே நடக்கின்றன. படிப்பில்லாத ஜனங்களும் அறிவில்லாத ராஜாக்களுமிருந்த அந்தகாலத்தில் நடந்தது ஆச்சரியமில்லை அறிவுடைய ஜனங்களும் ஆலோசனையுடைய ராஜாவுமிருக்கும் இந்தக் காலத்தில் அவை நடப்பதும், நடக்கும் முயற்சியுந்தான் ஆச்சரியம். அந்தக்காலத்தில் படிப்பிருந்தும்புத்தியிருந்தும் மானமெல்லாம் காலர் டையிலும், சோற்றிலும், சொகுசிலும், பயத்திலும் போய்விடுகின்றன.

வக்கீல் பார்ப்பனரிலிருந்து வடைவிற்கும் பார்ப்பான் வரையிலும் பிராமணஜாதி யென்று தீர்மானப்படுத்திவிட்டார்கள்; க்ஷத்திரிய ஜாதியோ ஆங்கிலேயர்களாகிவிட்டார்கள. ஜப்பானும் அமெரிக்காவும் வைசிய ஜாதி ஆகிவிட்டார்கள பின் சூத்திர ஜாதி யார், அப்பா?

எட்டில் ஒரு கூட்டத்தாருக்கு இஷ்டம்போல் எழுதி வைத்துக் கொண்டு அதை அநாதி கடவுள் சொன்னது, பிர்மா கற்பித்தது, ரிஷிகள் ஏற்படுத்தினது, மனுகற்பித்தது, அதை நம்பாவிட்டால் நரகம் வந்துவிடும்; நடக்காவிட்டால் பாவம் வரும்; அதை நம்பாவிட்டால் ஈஸ்வர கோபமுண்டாகும் என்று சொல்லுவதை நம்பி அர்ச்சகர்கள் புரோகிதர்கள் ஆச்சாரிகாலில் விழுந்து கற்றகல்வியையும் போக்கடித்து கைப்பொருளையும் கைவிடும் கழுதைகளா சூத்திர ஜாதி? கழுதை என்று சொன்னதற்குக் கோபிக்காதீர்கள். பிராமணன் பசுவிற்கு சமம், சூத்திரன் கழுதைக்கு சமம் என்று ஸ்மிருதிகளிருக்கின்றன. பசுவென்றால் சாதுவாகவும் எல்லாருக்கும் உபயோகமுடையதாகவும், கழுதை என்றால் மிருகத்திற்கெல்லாம் தாழ்ந்ததும் மூடமை ஆக்கக்கூடியது என்பதாம் அதன் அர்த்தம். வேதம் சொன்னது கடவுள்; ஸ்மிருதி சொன்னது ரிஷிகள், ஸ்மிருதி வேதத்திற்குச் சமம்; ரிஷி கடவுளுக்குச் சமம்; ஆகவே சூத்திரனைக் கழுதை என்பதும் நமது கடவுளேயாகும்.

வக்கீல் ராமச்சந்திர அய்யர், டி. எம். கிருஷ்ணசாமி அய்யர், எம். கே. ஆச்சாரி. சங்கராச்சாரியிடம் எல்லாம் சேர்ந்து பிராமண ஜாதியும், சூத்திர ஜாதியும் தானிருக்கின்றன வென்று அவர்களைப் போன்ற பார்ப்பார்களோடு கூடித்தீர்மானம் செய்துவிட்டார்கள்; பார்ப்பார்களெல்லாம் பிராமண ஜாதியாய் விட்டதினால் அதில் அவர்களுக்குக் குறையில்லை; தர்க்கமில்லை; சண்டையில்லை. அவர்கள் தீர்மானம் பண்ணின மற்ற இரண்டாவது சூத்திர ஜாதி யார் அப்பா?

சைவப்பிள்ளைகளா? சாதாரணப்பிள்ளைகளா? முதலியார்களா? கவுண்டர்களா? நாயுடுகளா? நாய்க்கர்களா? நாட்டார்களா? நாடார்களா? தேவர்களா? உடையார்களா? ஒதுவார்களா? தேசிகர்களா? செட்டியார்களா? பண்டாரங்களா? சிதம்பரத்துப் பிரபு ராஜா அண்ணாமலையா? பட்டணத்து கார்ப்பரேஷன் முத்தையாவா? பார்ப்பாரப்பிள்ளைகளுக்கு சோறுபோட்டு ப்படிக்கவைக்கும்மனலி முதலியாரா? அதேபிரகாரம் செய்யும் பிரபுக்களா? வேதபாடசாலை கட்டி பார்ப்பனருக்குச் சோறுபோட்டு, சோறுபோட்டவனைச் சூத்திரன் என்று சொல்லச்சொல்லும் நாட்டுக்கோட்டைச்செட்டியார்களா? கோவில்கட்டி கும்பாபிஷேகம் செய்து வைத்த அ. ப. ம. ரா. வெ. சி மு. கா. விலாசத்தார்களா? இருக்கையிலும், இறந்த பின்னும் கோவிலுக்கும் அபிஷேகத்திற்கும் ஆராதனைக்கும் குருக்களுக்கும் மானியம்விடும் மனிதர்களா? தஞ்சாவூர் சின்னப்பண்ணை பெரியபண்ணையா? மிராஸ்தார்களா? தெற்கத்து ஜெமீன்பாளையபட்டுகளா? வடக்கத்துராஜாக்களா? கொங்குநாட்டு ஜெமீன் மிட்டாதார்களா? பட்டக்காரர்களா? சாகையில் ஒருமாடு செத்தபின், ஒருமாடு கருமாந்தத்திற்கு, ஒருமாடுதானம் கொடுத்து மாசியமென்றும், வருஷதிதியென்றும் மூட்டை அரிசியும் கூடைப்பருப்பும் குத்துக்குத்தாய் காய்கறிகளும் பார்ப்பனர்களுக்குக் கொடுத்து பிதிர்க்களை பரலோகத்தில் காப்பாத்திவைக்கும் பணக்காரர்களா? வேஷ்டியென்றும் துணியென்றும், சொக்காயென்றும், பள்ளிச்சம்பளமென்றும், பரீட்சைக்குபணமென்றும், பாப்பனர்களுக்குக் கொடுத்து உதவின காசுக்காரர்களா? சங்கராச்சாரிக்கு பாதகாணிக்கையென்றும் ஊர்கோலமென்றும் பிராமணபோஜனமென்றும் தேவிபூஜையென்றும் பணம் கொடுத்து பாதம், கழுவிதண்ணீர் குடித்த பக்தர்களா? இப்பொழுது அதேபோல் செய்துவரும் பட்டணத்துக்காரர்களா? சைவசித்தாந்தர்களா? வைணவ வைராக்கியர்களா? இலக்கிய, இலக்கணம் படித்த தமிழ் நாட்டு வித்வான்களா? இவர்கள் கணக்குப்பிள்ளைகளா? காரியஸ்தர்களா? பந்துக்களா? இதில் யார்சூத்திரர்கள்? இதில்கண்டவர்கள் சூத்திரர்களாயிருந்தால் சும்மாஇருப்பதும் ஒத்துக்கொள்ளுவதும் நியாயமேயாகும். இல்லையேல் ஆசார அனுஷ்டான வழக்கபழக்க பக்தி ஆராதனை சட்டதிட்டங்களெல்லாம் சூத்திரனென்பதை எடுத்து விடுவதுடன் சூத்திரனுக்குவதையும் தள்ளி விடவேண்டும். விசாரித்தறிவது புத்தி.

சுவாமிவிவேகானந்தர் அமெரிக்காவிலிருக்கையில் அவரைச் சூத்திரனென்றும் சூத்திரனுக்கு சந்நியாசத்திலும் வேதத்திலும் அதிகாரமில்லை என்றும் எழுதினார்கள். அதைப்படித்திருந்தார். சென்னையில்வந்துஇறங்கின உடனே என்னை சூத்திரனென்று சொன்னவனே பறையனிலும் கீழ் ஜாதி, என்னுடைய முன்னோர்களே வேதத்தை விசாலப்படுத்தினவர்களென்றும் அவர் பிரசங்கத்தில் சொன்னார். அதுபுஸ்தகங்களிலுமிருக்கிறது. பனிகட்டியான இமயமலையைச் சுத்தினார் சுவிட்ஜர்லாண்டில்பனிக்கட்டியிலேசஞ்சரித்தார் அந்தக்குளிரையெல்லாம் சகித்த சுவாமிவிவேகானந்தருக்குக்கூட சூத்திரன்என்னும்வார்த்தையைச்சகிக்க முடியவில்லை, ஏனெனில் சூத்திரன் என்னும்வார்த்தையின் அர்த்தம் அவ்வளவு நியாய விரோதமாகவிருக்கிறது.

தொடரும்

---

[3-ம் பக்கத்தொடர்ச்சி.]

கூட்டத்தாருக்கும் நமது பரிசுத்தமான வைதிக மதத்தின் நன்மைக்கும்—நமக்கு வெகு நாளாக ஏற்பட்டிருக்கும் மனப்பான்மைக்கும் யாதொருவித சம்பந்தமும் இல்லை" என்பதாகும்.

இந்த வார்த்தைகளிலிருந்தும் எதேச்சாதிகாரத்தையும் வைதிக மதத்தையும் தேசியத்தையும் ஆதரிக்கும் கூட்டத்திற்கு கேடு காலம் பிறந்து விட்டதென்பது புலப்படுகின்றது. போலீஸ் ஆட்சியிருந்த நம் எதேச்சாதிகாரத்தின் யோக்கியதை மதத்தைக்கூட ஜெயில் வாழ்க்கையாகச் செய்து விட்டது.

### எதற்காக மதம்.

மேலும் தங்களுக்கென மதக்கொள்கைகள் எதுவுமின்றி சுயநலத்தை உத்தேசித்து மதத்தைக்காப்பாற்ற முன்வரும் ஸ்டாகோவிச் போன்றவர்களை இந்த காடறிந்த தேசிய மதத்தைப்பற்றி வேண்டா வெறுப்பாயிருக்கச் செய்து விட்டது.

மேலும் இப்பத்திரிகை கூறுவதாவது:—

"இந்த மாய்கையின் (மதம்) காரணத்தால் தான் நாம் பாபத்தைக்கண்டு பயந்து நீக்குகிறோம். நம்முடைய கடமைகள் எவ்வளவு கடினமாயிருந்தாலும் மனம் சோகாமல் செய்து முடிக்கிறோம். மற்றும் நமது துக்கத்தையும் வறுமையையும் சந்தோஷமாய் அனுபவிக்கவும், வெற்றியும் அதிஷ்டமும் சேரிடாமல் நாம் மமதை கொள்ளாமல் இருக்கவும் வேண்டிய பலமும் தைரியமும் (மதத்தின் மூலமாய்) நமக்குக் கிடைத்திருக்கிறது" என்பதாகும்.

இந்த வாக்கியத்தில் உண்மை வெளிப்பட்டு விட்டது. வைதிக மதத்தை இவர்கள் விரும்புவதன் காரணம் துரதிஷ்டம் அதாவது கஷ்டங்கள் வரும் பொழுது நோகாமல் பொறுத்துக்கொள்ள மதம் கற்றுக்கொடுக்கிறது என்பதற்காகத்தான்- ஆகவே ஆட்சி செலுத்தும் வகுப்பாருக்கு மற்றவர்களைத் துன்புறுத்துபவருக்கு இது எவ்வளவு அனுகூலமான—உபகாரமான மதம் என்பதை யோசித்துப்பாருங்கள். விகட

சிறு கூட்டத்தார் செல்வத்தையும் அதிகாரத்தையும் அனுபவிக்கும்படியும் பெருவாரியான மக்கள் எப்பொழுதும் வறுமையினாலும் பிரயாசத்தினாலும் கஷ்டப்படும்படியாக அமைக்கப்பட்டிருக்கும் ஒரு சமூக வாழ்க்கைத்திட்டத்தில் "லாப மனுபவிக்கும் கூட்டத்தாருக்கு சாதகமாக இவ்வுலகத்தில் மக்கள் அனுபவிக்கும் நரக வேதனையைப்பற்றி புகார் செய்யாமலிருந்தால் மேலுலகத்தில் மேன்மையான சொர்க்க பதவி அளிக்கப்படும்" என்று போதனை செய்யும் மதத்தினிடம் அந்த லாபமனுபவிக்கும் கூட்டத்தாருக்கு பற்றுதல் இருப்பது சகஜமேயாம். மாஸ்கோவியட்ஸ் கிமா பத்திரிகை தனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தில் அதிகப்பிரசங்கித்தனம் செய்து தன்னை அறியாமலேயே (எதற்காக மதம் என்று) உண்மையைக் கக்கிவிட்டது. மேற்கொண்டு அப்பத்திரிகை கூறுவது:—

"இந்த மாய்கையின் (மதம்) காரணத்தாலேயே தாங்கள் வேண்டிய மட்டும் சாப்பிடவும், சஞ்சலமின்றித் தூங்கவும், சந்தோஷத்தோடு ஜீவிக்கவும் முடிகிறது என்பதை இந்த ஸ்டாக்விச் கூட்டத்தார் உணரவில்லை" என்பதாகும்.

இதுதான் கடைந்தெடுத்த உண்மை. அனுபோகத்திலும் அப்படித்தான் இருக்கிறது. இம்மாதிரி மதப்பைத்தியங்கள் பொதுஜனங்களிடையே ஏற்படுவதால்தான் ஸ்டாகோவிச் அப்போமாவ் (இந்த பெயர் கொண்ட கதைகளின் கதாநாயகர்கள் முழுச் சோம்பேறிகள்) போன்றவர்களை சஞ்சலமின்றித் தூங்கவும் நமது முதலாளிகள் எல்லாம் பொதுமக்கள் உழைப்பில் ஜீவிக்கவும் முடிகின்றது. இதே உண்மையைத்தான் "மாஸ்கோவிஸ் கியாவியடோ மோஸ்ட்டி" பத்திரிகைக்கும் பொருத்தலாம். எவ்வளவுக்கு எவ்வளவுக்கு மதம் பிடிவாத குணங்கள் மாறி சோஷலிஸ்ட் அறிவுக்கு இடம் ஏற்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு தொழிலாளர்களுடைய வெற்றியும் விடுதலையும் சமீபித்துக்கொண்டுவர இடம் ஏற்படுகிறது. அந்த ஜெயத்திலிருந்துதான் தற்கால சமூக வாழ்வில் தாழ்த்தப்பட்ட மக்கள் முதலாளி கூட்டத்தாரால் அடிமைப்படுத்தப்பட்ட மக்கள் ஆகியவர்கள் விடுதலை பெறுவார்கள்.

———

## 5 அத்தியாயம்.

### லியோ டால்ஸ்டாய்.

இவர் ருஷிய புரட்சிக்கு ஒரு கண்ணாடி போன்றவர். இந்த சிறந்த ஆசிரியரை அவர் புரிந்து கொள்ளாததும் சற்றும் கலந்து கொள்ளாமல் விலகி நின்றதுமான ஒரு புரட்சியோடு சம்மந்தப்படுத்துவது அதிசயமாகவும் புதிதாய் இட்டுக்கட்டி கற்பின் ஒரு ஜோடிப்பு போலவும் தோன்றலாம். உள்ளது உள்ள மாதிரியே பிரதிபிம்பிக்காத எதையும் கண்ணாடி என்று சொல்லுவது தகாது. ஆனால் நமது புரட்சி வெகு சிக்கலான விஷயமாகும். இந்தப் புரட்சியில் நேரில் ஈடுபட்டு பங்கெடுத்துக்கொண்டவர்களில் சில வகுப்பார்கள் என்ன நடக்கிறது என்பதையே தங்கள் மனதுக்கு புரிந்துகொள்ளாமல் அனுபவத்தில் சரித்திர பூர்வமாக தங்களுக்கு ஏற்பட்ட கடமைகளையும் செய்யாமல் கை நழுவ விட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு சிறந்த ஆசிரியர் எழுதிவந்த நூற்களில் மேற்படி புரட்சியின் சில முக்கிய அம்சங்களாவது பிரதிபிம்பித்துத்தீரும். சட்டத்திற்கு அடங்கி வெளியிடப்படும் ருஷியப் பத்திரிகைகளில் டால்ஸ்டாய் பிறந்த 80வது வருஷ கொண்டாட்டத்தை யொட்டி கட்டுரைகளும் கடிதங்களும் குறிப்புகளுமாய் நிறைந்து கிடக்கின்றன.

### டால்ஸ்டாய் விளம்பரம்.

ஆனால் ருஷியப் புரட்சியின் குணங்கள், அதைக்கொண்டு செலுத்தும் சக்திகள் ஆகிய இவைகளின் நிலையில் இருந்து டால்ஸ்டாயின் நூற்கள் சோதிக்கப்படவில்லை. இந்தப் பத்திரிகைகளில் எல்லாம் சகிக்க முடியாத வெளிவேஷங்களே நிரம்பிகிடக்கின்றன. இந்த வேஷங்கள் இரண்டு விதப்படும். முதலாவது "உத்தியோக நோரணையில்" வருவது. இரண்டாவது "தாராள நோக்கத்துடன்" வருவது. முதலாவது கூட்டம் வேஷம் போடுவது, அதாவது சமயத்துக்குத் தகுந்தபடி பண ஆசை கொண்டு கூலிக்கு எழுதுகிறவர்கள். நேற்றைய தினம் இவர்களுக்கு டால்ஸ்டாயைக் கண்டிக்கும்படி உத்திரவு இடப்பட்டது. இன்றைய தினம் டால்ஸ்டாய் ஒரு தேசபக்தரென்றும், மகான் என்றும் ஐரோப்பியர் முன்னிலையில் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்றும் உத்திரவிட்டது. ஆனால் இதற்காக இவர்களுக்கு எவ்வளவு கூலி கிடைக்குமென்பது பொது ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியுமாதலால் இவர்கள் பேச்சைக் கேட்டு யாரும் ஏமாந்து போகமாட்டார்கள். ஆனால் இரண்டாவதான "தாராள நோக்கத்தோடு" என்பதாக போடும் வேஷமானது இன்னும் அருவசமான முறையில் அதாவது தேசியம் ஆதமார்த்தம் என்னும் தலைப்பில் போடப்படுவதால் அது இன்னும் அதிகமான கெடுதலையும் ஆபத்தையும் விளைவிக்கக்கூடியதாய் இருக்கிறது. ரீச் Rech கூட்டத்தைச்சேர்ந்த Cadet Balaleikins கேடட் பாலாலிகின்ஸ் ஐக்கெட்டோமானல் இவர்களுக்கு டால்ஸ்டாய் இடம் இருக்கும் அன்பு ஆர்வத்துடன் நிறைமி இருக்கிறதென்று நினைக்கும்படி நேரிடும். ஆனால் உண்மையில் அவர்கள் வேண்டுமென்று போடும் கூச்சலும் "கடவுளைத் தேடும் பெரியார்" (மகாத்மா) என்றெல்லாம் பெருமையான ஆடம்பர வார்த்தைகளை அடுக்குவதும் எல்லாம் வெறும் வேஷமேயாகும். ஏனென்றால் ருஷ்ய தாராளக்கட்சியைச்சேர்ந்தவர்கள் டால்ஸ்டாயின் கடவுளை (கொள்கைகளை) நம்புகின்றவர்களுமல்ல. நற்கால சமூக அமைப்பைப் பற்றி டால்ஸ்டாய் கூறுகிற குறைகளை ஒத்துக்கொள்ளுகிறவர்களுமல்ல. இவர்கள் டால்ஸ்டாய் போன்ற பிரக்யாதி பெற்றவர்களோடு சேர்ந்துகொள்வதெல்லாம் தங்களுடைய அரசியல் செல்வாக்கை அதிகப்படுத்திக்கொள்ளவும் தேசீய எதிர்க்கட்சியின் தலைமை ஸ்தானத்தில் தாங்கள் இடம் பெறவுமேதான். டால்ஸ்டாய் கொள்கைகள் ஒன்று சேராமல் முன்னுக்குப்பின் முரணானதற்கு என்ன காரணம் என்ற நேரான கேள்விக்கு பதில் சொல்லாமல் வீண் கூச்சலிட்டும் ஆடம்பர வார்த்தைகளை அடுக்கியும் வருகிறார்கள். டால்ஸ்டாயினுடைய கொள்கையால் நம்முடைய புரட்சியின் எந்தக் குற்றங்கள் எதிரொலிக்கின்றன?

டால்ஸ்டாயைச் சேர்ந்தவர்களுடைய நூற்களிலும், போக்குகளிலும், போதனைகளிலும் உள்ள முரண்பாடுகள் மிகவும் வெளிப்படையானவை. ஒரு பக்கத்தில் பார்க்கப்போனால் டால்ஸ்டாய் ஒரு பெரிய ஆசிரியர் ருஷ்ய வாழ்க்கை நிலையை வருணிப்பதில் இணையற்றவர் உலகமெச்சும் முதல்தரமான புஸ்தகம் எழுதவல்லவர் மற்றொரு பக்கம் பார்க்கப்போனால் இவர் ஒரு நிலச்சுவான்தார். கிறிஸ்துவின் பெயரால் தன்னுடைய வாழ்க்கையை நத்தம் செய்தவர். ஒரு பக்கத்தில் சமூக அமைப்பிலிருக்கும் பித்தலாட்டங்களையும் கபடங்களையும் அழுத்தமாக, நேரடியாக, மனப்பூர்வமாக கண்டிக்கிறார்.

மற்றொரு பக்கத்தில் டால்ஸ்டாயும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் வெறி பிடித்தவர்கள் மாதிரி ஆடிக்கொண்டு ருஷியாவில் படித்த கூட்டத்தார் செய்வது மாதிரி தங்களைப் பாவிகள் என்று கூறிக்கொண்டு எல்லோருமறிய மாரடித்துக் கொண்டு "நான் கெட்டேன், நான் பாவி, என்னுடைய ஆத்மாவை பரிசுத்தம் செய்து கொள்ள முயற்சிக்கிறேன்" நான் மாமிசம் சாப்பிடுவதில்லை. அரிசி சோறுதான் தின்கின்றேன் என்று கத்திக்கொண்டு திரிகிறார்கள். ஒரு பக்கம் பணக்காரர்கள் கொள்ளை அடிப்பதைத் தாக்ஷண்யமில்லாமல் கண்டித்தும், அரசாங்கத்தின் முரட்டுச் செயல்களை வெளிப்படுத்தியும், நியாயம் வழங்குவதென்பது வெறும் கேலிக்கூத்தென்றும் நிரூபித்து அரசாங்க ஊழல்களை வெளியாக்கியும் ஒரு சிலருக்கு செல்வம் பெருகி நாகரிகம் வளர்ந்து வரும்பொழுது வேலை செய்யும் பொது ஜனங்களுக்கு வறுமை மிகுந்து பெருகப்பிரயாசமும் துன்பங்களும் பெருகி வருவதான பரிதாபகரமான காட்சியை விளக்கிக்காட்டியும் டால்ஸ்டாய் கூட்டத்தார் உழைத்து வருகிறார்கள்.

ஆனால் மற்றொரு பக்கத்தில் இவர்கள் அக்கிரமத்தை எதிர்த்துப்போராடக்கூடாதென்றும் பிற்போக்கான சத்தியாக்கிரகக்கொள்கையை பிரசாரம் செய்து வருகிறார்கள். ஒரு பக்கம் உண்மையைக்கடைப்பிடித்து வெளிவேஷங்களை உடைத்தெறிகிறார்கள். மற்றொரு பக்கம் இவர்கள் உலகத்திலேயே மிகவும் கேடுகெட்ட கபடமாகிய மதத்தை ஆதரித்து சர்க்கார் நியமித்த பாதிரிகளை நீக்கிவிட்டு "மனப் பூர்த்தியாக நல்லொழுக்கத்தை" ஒப்புக்கொண்ட பாதிரிகளை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இவர்கள் மிகவும் தந்திரமாக நடந்துகொள்ளக்கூடியவர்கள் ஆனால் ஒவ்வொருககத்தக்க பாதிரித்தனத்தை ஏற்படுத்தப்பார்க்கிறார்கள் நவோரஸ்டாவ ருஷியாவில் வாழ்வது யார் என்ற கவியில் ருஷியாவில் ஒரு பகுதி சுகம் அனுபவிப்பதையும் மற்றொரு பகுதி துன்பம் அனுபவிப்பதையும்பற்றி

"நீ வறுமைப் பட்டாய் நீ செல்வம் பெருக்கினாய் நீ வலிமையுற்றாய் நீ ஆதரவற்றாய்"

என்று கூறியதில் உண்மை இருக்கின்றது. இம்மாதிரி முரண்பாடுகளுக்கிடையில் அகப்பட்ட டால்ஸ்டாய்க்கு தொழிலாளர் இயக்கத்தையாவது சோஷியலிசத்திற்கு ஆக ஐற்பட்ட தொழிலாளர் போராட்டத்தில் தொழிலாளர் இயக்க வேலையையாவது, ருஷிய புரட்சியையாவது, மனதில் அர்த்தம் செய்து கொள்ள முடியவில்லை. ஆனால், இம்மாதிரியான டால்ஸ்டாய் நோக்கங்களிலும் போதனைகளிலும் ஏற்பட்ட முரண்பாடுகள் தற்செயலாய் ஏற்பட்டவையல்ல. இவைகள் ருஷ்ய வாழ்க்கையின் பத்தொன்பதாவது நூற்றாண்டின் கடைசி முப்பது வருஷங்களில் ஏற்பட்ட முரண்பாடுகளின் தோற்றங்களாகும். அந்தக் காலத்தில் பழய நாட்டாண்மை ஆட்சியிலிருந்து வந்த கிராமங்களில் அப்பொழுது தான் சுவந்தை. (அடிமைத்தனம்) நீக்கப்பட்டது. உடனே முதலாளிகளும் அரசாங்கமும் அக்கிராமங்களில் புகுந்து பலவந்தம் செய்யவும், கொள்ளை அடிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள் ? இதற்கு முன் பல நூற்றாண்டுகளாக அனுஷ்டானத்தில் இருந்து வந்த குடியானவர்களது பொருளாதாரமும குடியானவர்களின் வாழ்க்கையும் அஸ்திவாரமற்று வெகு விரைவில் விழ்ச்சியடைந்தன.

டாலஸ்டாயினுடைய நோக்கங்களில் உள்ள முரண்பாடுகளையெல்லாம் தற்காலம் தொழிலாளர் இயக்கம் சோஷியலிசம் இந்த நிலையில் நின்று குறை கூறுவது தகாது (இந்நிலையில் இருந்து பரிசோதிப்பது அவசியம் என்று நாம் ஒப்புக் கொள்ளுகிறோம் ஆனால் அத்துடன் நின்றுவிடக் கூடாது) ஆனால் பழய நாட்டாண்மை கட்டுப்பாட்டிலிருந்த கிராமங்களை முதலாளித்தனம் தாக்கியதால் பொது மக்கள் நாசமடைந்து அவரவர்கள் பூமியை விட்டு துரத்தப் பட்ட பொழுது அவர்களிடம் இருந்து கிளம்பிய அழுகைக்குரல்களே டால்ஸ்டாயினுடைய கொள்கைகளில் எதிரொலிக்கின்றவை. மனித வர்க்கத்தினுடைய விடுதலைக்கு புதியவழிகள் கண்டு பிடித்த மகாத்மாவாக டால்ஸ்டாய் போடுகிற வேஷமெல்லாம் நகைப்புக்கு இடமாய் இருக்கின்றன. ருஷ்யாவிலும் வெளி தேசங்களிலும் தங்களை டால்ஸ்டாய் வாதிகள் எனக் கூறிக் கொண்டு டால்ஸ்டாய் கொள்கைகளில் ஏற்பட்ட இத்தக் குற்றங்களை மேலும் மேலும் பூஜை படுத்தி அதை ஒரு மதமாகச் செய்ய எத்தனிப்பவர்கள் முழுதும் வெறுக்கத் தக்கவர்கள் ஆவார்கள்.

ருஷிய முதலாளிக் கூட்டத்தில் ஏற்பட்ட புரட்சிப் பெருக்கினால் கோடிக்கணக்கான ருஷியக் குடியானவர்கள் மனதில் உதித்த எண்ணங்களையும் குணங்களையும் வெளியிடுவதில் டால்ஸ்டாய்க்கு தனிப்பட்ட மகிமை உண்டு. ஏனென்றால் அவருடைய கொள்கைகள் மொத்தத்தில் கெடுதி விளைவிப்பனவாய் இருந்தாலும் அவைகளை ஒருங்கே ஆராய்ந்து பார்த்தல் நம்முடைய புரட்சியின் முக்கிய முதன்மையாகிய குடியான பணக்காரரும் சேர்ந்து உழைத்து புரட்சி உண்டாக்கிய விதம் வெளியாகும்.

இவ்விதமாக பொருள் படுத்திக் கொண்டோமேயானால் டால்ஸ்டாயின் அபிப்பிராயங்களில் உள்ள முரண்பாடுகள் எல்லாம் நம்முடைய புரட்சிக்கு பாடுபட்ட குடியானவர்களுடைய உழைப்பில் சரித்திர பூர்வமாக எழுதப்பட்ட நிர்ப்பந்தங்களின் எதிரொலிகள் என்பது ஏற்படும் ஒரு பக்கத்தில் பல நூற்றாண்டுகளாகக் குடியானவர்களை கொடுமைப் படுத்தி வருவதும் பிறகு சீர்திருத்தம் செய்வதாக பாசாங்கு செய்து கொண்டு பல வருஷங்களாக நாசம் விளைவித்ததும் காரணமாக ஜனங்களின்கோபமும்ஆத்திரமும் மலை போல் வளர்ந்து வந்தது.

அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப் பட்ட கோவில்களையும், நிலச்சுவான் தார்களையும், நிலச்சுவான்தார அரசாங்கத்தையும் ஒழிக்கவும், நில சொந்தக்காரர்களுக்கு ஏற்பட்ட பாத்தியதைகளையும் முறைகளையும் அழிக்கவும், நிலத்திற்கு விடுதலை அளிக்கவும் போலீஸ் அதிகாரவர்க்கத்தால் உண்டாக்கப்பட்ட அரசாங்கத்திற்கு பதில் சுயேச்சையும் சமத்துவமும் அனுபவிக்கும் சிறு குடியானவர்கள் கொண்ட ஒரு சமூகம் சிருஷ்டி செய்யவும், இந்த எண்ணங்கள் எல்லாம் நமது புரட்சியில் கூடி அபூர்வமான ஒவ்வொரு முயற்சியிலும் ஊசி கோர்த்த மாதிரி வரிசையாகத் தோனறுகின்றன. மேலும் நிச்சயமாக ஏற்படும் உண்மை என்னவென்றால் டால்ஸ்ட்டாயினுடைய நூற்களில் பதிந்து கிடக்கும் கொள்கைகள் நாம் மேலே கூறிய குடியானவர்களுடைய போராட்டத்தைச்சார்ந்தனவே யொழிய பின் வந்தவர்கள் அவருடைய கொள்கைகளிலிருந்து அந்தரத்தில்கட்ட எத்தனிக்கும் கிறிஸ்தவ ஏதேச்சை வாதத்தை" சேர்ந்திருக்கவில்லை.

இதற்கு மாறாக அந்த குடியானவர்கள் புதியவிதமான சமூக வாழ்க்கையை சிருஷ்டிக்க முயற்சித்தபோது அவர்கள் மனதில் ஒரு உறுதியும் ஏற்படாமல் பழைய மதம் இவைகளைக்கொண்டே சமூக வாழ்க்கையை அமைக்கவும், சுதந்திர யுத்தம் நடத்தவும் அந்த யுத்தத்திற்குத் தக்க தலைவர்களை ஏற்படுத்திக் கொள்ளவும் இந்த குடியானவர்கள் புரட்சியில் பணக்கார வகுப்பாரும் அவர்களைச் சேர்ந்த படித்த வகுப்பாரும் என்னவிதமாய் கலந்து கொள்வார்கள் என்பதைப்பற்றியும் பெரிய நிலச்சுவான்தாரர்களை ஒழிக்கப்பட வேண்டுமானால் ஏன், சாருடைய ஆட்சியைப் பலவந்தமாய் விழ்த்தவேண்டும் என்பதைப்பற்றியும் அது எப்படி முக்கியமான வேலை என்பதைப் பற்றியும் எண்ணியிருந்தார்கள். குடியானவர்களுடைய பழைய அனுபோகத்தைக்கொண்டு நில சொந்தக்காரர்களையும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களையும் வெறுக்கக் கற்றுக்கொண்டார்கள். ஆனால் மேலே குறிப்பிட்ட கேள்விகளுக்கு பதில் எங்கே என்று சொல்லிக்கொடுக்கப் பழைய அனுபோகம் மாத்திரம் போதாது. நமது புரட்சியின் போது குடியானவர்களில் ஒரு சிறுபகுதிமாத்திரம் தான் யுத்தத்திலும் புரட்சி ஸ்தாபனங்களுடனும் கலந்து கொண்டார்கள். அதிலும் சிறிய பாகம் தான் தங்கள் சத்திரிகளைக் கொல்லவென்று ஆயுதமெடுத்து சாருடைய கூலிகளையும் நிலச்சுவான்தார்களையும் அவர்களை ஆதரிப்பவர்களையும் ஒழிக்க முற்பட்டார்கள். குடியானவர்களில் பெரும்பாலரெல்லாம் தங்களுக்கு டால்ஸ்டாய் சொல்லிக்கொடுத்தது மாதிரியே அழுது கொண்டும், பிரார்த்தனைகள் நடத்திக்கொண்டும், ஒழுகத்தைப்பற்றி பிரசங்கங்கள் செய்துகொண்டும் ஆகாயக்கோட்டைகள் கட்டிக்கொண்டும் மனு எழுதிக்கொண்டும், மனுதாரர்களை அனுப்பிக்கொண்டும் பகல் கனவு கண்டு கொண்டும் இருந்தார்கள்.

இம்மாதிரி மற்ற சந்தர்ப்பங்களில் சாதாரணமாய் நடப்பதுமாதிரியே அரசியலில் கலக்க வேண்டாம் என்றும், அரசியலை உதரித்தள்ளவேண்டுமென்றும், அரசியலைப்பற்றிக் கவனம் செலுத்தாமல் இருக்கவும் அரசியலைப்பற்றி தப்பிதமாய் கற்பிப்பதுமாகிய இவ்விதமான டால்ஸ்ட்டாய் கொள்கைகளால் இக்கூட்டத்தில் ஒரு சிறு பாகமே மனப்பூர்வமாக புரட்சியில் இறங்கியிருக்கும் தொழிலாளர்களோடு சேரமுடிந்தது. மற்ற பெருவாரியானவர்கள் காடெட் என்று சொல்லப்பட்ட கொள்கையற்ற கூலிகளான பணக்கார படித்த கூட்டத்தாருடன் சேர நேரிட்டது. இந்த காடெட் கட்சியார் Drudovik ட்ருடோவிக் கூட்டத்தில் இருந்து ஓடிப் போய் பிறகு மறுபடியும் அவர்களுடன் ராஜியாகி கட்சியில் நமது சிப்பாய்களின் செருப்பால் அடிக்கப்பட்டு துரத்தப்பட்டார்கள். [தொடரும்]

---

## தீண்டாமை விலக்குப் பிரசாரம்.

கோட்டையூர் ஊரணிக்குப் பக்கமுள்ள 'ஜவகர்" மேடையில் 10-12-32. சனிக்கிழமை மாலை. 6 மணிக்கு தீண்டாமை விலக்குப்பிரசாரப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அதுசமயம் தோழர்கள். ப. சிவானந்தம், அ. பென்னம்பலம், மற்றொருதோழர், ஆகியவர்கள் "தீண்டாமைவிலக்கு;' பற்றி பிரசங்கம் செய்தார்கள். ஆண்களும் பெண்களுமாகப்பெருந்திறளாகக் கூடியிருந்தார்கள். தோழர். மணித்தொண்டன் அவர்கள் கீதம்பாடினர். மழைகாரணமாய் கூட்டம் சிறிதுவிரைவாக முடிக்குப் படிநேர்ந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## "நெப்போலியன்"

கமுதி தோழர் எம். டி. எ. கிருஷ்ணசாமி அவர்கட்கு சென்ற 15—11—32ல் பிறந்த ஆண்குழந்தைக்கு "நெப்போலியன்" என்ற பெயரிடப் பட்டிருக்கிறது. அதன் ஞாபகார்த்தமாக குடி அரசிற்கு ரூபாய் ஒன்று நன்கொடையாக அளிக்கப்பட்டது; இந்த ரூபாய் ஒன்றை வந்தனத்துடன் பெற்றுக் கொண்டோம். (ப—ர்)

---


# ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை- 0-0-6 100- புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினால் 100-புத்தகம் தபால் சிலவில்லாமல் அனுப்பப்படும்.

மானேஜர்

'குடி அரசு" ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. சிதம்பர ரகசியம் | ... | 0—8—0 |
| 2. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | | 0—4—0 |
| 3. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | | 0—8—0 |
| 4. ஆராய்ச்சி அணிகலம் | ... | 0—12—0 |
| 5. சுயமரியாதை தத்துவ கீதங்கள் | ... | 0—4—0 |
| 6. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் | ... | 2—0—0 |
| 7. மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) | ... | 2—0—0 |
| சுயராஜ்யம் யாருக்கு | ... | 0—1—0 |
| சாமிகளின் அடிமைகள் | ... | 0—12—0 |

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)
விலை ரூ. 1—0—0
"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

குமரன் பிரஸ்

# 1933

## ஆபீஸ் காலண்டர்

பிரசித்தி பெற்ற எமது "குமரன் பிரஸ்" தினசரி தாள் கிழிக்கும் காலண்டர் சென்ற வருஷம் போலவே நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு வழவழப்பான ஆர்ட் பேப்பரினால் ஒட்டிய சித்திரைக்கலை திகழும் அழகிய தடித்த அட்டையில் சேர்த்து சேர்த்தியாக பைண்டு செய்யப்பட்டு கண்கவர் வனப்புடன் விளங்குகிறது.

இது சாதாரணமாய் காலண்டர் 1க்கு ஒரு ரூபாய் பெறுமென்று யாவரும் மதிப்பிடுகிறார்கள். உங்கள் பங்களாக்களையும் ஆபீஸ் ரூம்களையும் கூடங்களையும் அழகு படுத்திக்கொள்ள மிக ஏற்றது.

### மூன்று மாதிரிகள்.

1. பெரிய எழுத்தில் இங்கிலீஷ் தேதி, வருஷம், மாதம், கிழமைகளோடு கூடியது.

2. இங்கிலீஷ் வருஷம், மாதம், தேதி, கிழமைகளோடு தமிழ் வருஷம், மாதம், தேதி கிழமையும்; அமாவாசை கிருத்திகை முதலிய முக்கிய இந்துமத விரதாதிகளோடு கூடியது.

3. இங்கிலீஷ், தமிழ், துலுக்கு ஆகிய மூன்று வருஷம், மாதம், தேதி, கிழமைகளும் பண்டிகைகளும் (சிறிய அளவு)

| விலை | 1-ரக. | 2-ரக. | 3-ரக. | தபால் செலவு 1 & 2 | 3-ரக. |
|---|---|---|---|---|---|
| 1-க்கு | 0—6—0 | 0—6—0 | 0—4—0 | 0—4—0 | 0—4—0 |
| 12-க்கு | 4—2—0 | 4—2—0 | 2—12—0 | 2—4—0 | 1—12—0 |

ஒரு காலண்டர் வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது. காலண்டர் கிரயம் 0—6—0, தபால் செலவு 0—4—0, சேர்த்து 0—10—0 ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு காலண்டர் அன் ரிஜிஸ்டர் தபால் பார்சலில் அனுப்பப்படும். வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன். தேவைக்கு உடனே எழுதவும்.

குமரன் பிரஸ், காஞ்சீபுரம்.

Goshaye office pillss
கோஷாயி
ஆபீஸ் மாத்திரை



Dr. T.K.V. Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

Proprietor. T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

அதிர்ஷ்டம் மாத்திரமல்ல
அறிவுதானம் செய்த பலனுமுண்டு.

### பச்சையப்பன் கலாசாலை

## லாட்டரி.

ரூ. 1,00,000- பிரைஸ்கள் 3059. முதல்பிரைஸ் ரூ. 20,000
ஒரு டிக்கட் விலை. ரூ. 1
முடியும் தேதி 30-6-33. எடுக்கப்படும் தேதி 31-7-33.
மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

காரியதரிசி,
வி. திருவேங்கிடசாமி எம். ஏ.
பச்சையப்பன் ஹாஸ்டல், சேத்துப்பேட்டை, மதராஸ்.

மதத்தை ஒழிப்பது
உயர்வு தாழ்வை ஒழிப்பதாகும்.

கடவுள் உணர்ச்சியை ஒழிப்பது
பணக்காரத்தன்மையை ஒழிப்பதாகும்.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளிபிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள சூழ்ச்சிகளையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கடவுளும், பிரபஞ்சமும்.

'கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெரியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்வினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது'.

இதன் விலை அணா 0—4—0.

## சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

## இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

## இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபே எழுதியது விலை அணா. 0 8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0

## மநுநீதி மருமம்.

விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

## சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர், நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.